


கவிஞாயிறு

# தாராபாரதி கவிதைகள்

இலக்கிய வீதி

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

கவிஞாயிறு

# தாராபாரதி கவிதைகள்

தொகுப்பாசிரியர் : மலர்மகன்

பதிப்பாசிரியர் : இலக்கிய வீதி இனியவன்

இலக்கிய வீதி

இலக்கிய வீதி
W149 - பூங்கா சாலை
அண்ணா நகர் மேற்கு - விரிவு
சென்னை - 600101
உலா பேசி : 94452 37478

**கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்**

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | : | மலர்மகன் |
| முதற் பதிப்பு | : | திருவள்ளுவர் ஆண்டு 2038 - டிசம்பர் 2007 |
| டெமி 1/8 பக்கங்கள் | : | 400 |
| வெளியீடு | : | இலக்கியவீதி, விநாயகநல்லூர்,<br>வேடந்தாங்கல் - 603 314. |
| தொடர்பு முகவரி | : | W149 - பூங்கா சாலை,<br>அண்ணா நகர் மேற்கு - விரிவு,<br>சென்னை - 600101. |
| உலா பேசி | : | 94452 37478 |
| ஒளியச்சு | : | கலை கணினியகம்,<br>7, துரைசாமி சாலை, ஐஸ்வர்யா வளாகம்,<br>தியாகராய நகர், சென்னை-600 017. |
| வடிவமைப்பு | : | மு. கலைவாணன் - மு.க. பகலவன் |
| அச்சு | : | பாரதி அச்சகம், சென்னை-41 |
| அட்டைக் கட்டமைப்பு | : | ஸ்ரீ துர்க்கா பைண்டிங் ஒர்க்ஸ் |
| விலை | : | ரூ. 250.00 |

பதிப்பாசிரியர் இலக்கிய வீதி இனியவன்

**KAVIGNAYIRU THARABARATHY KAVIDHAIGAL**

| | | |
|---|---|---|
| Compiler | : | Malarmagan |
| First Edition | : | Thiruvalluvar Year 2038 -<br>December - 2007 |
| Demy 1/8 / Pages | : | 400 |
| Type Setting | : | Kalai Computer, 7, Duraisamy St,<br>Chennai - 600 017. |
| Printed at | : | Bharati Achagam, Chennai - 41 |
| Publisher | : | Ilakkiyaveedhi, Vedanthangal - 603 314. |
| Contact Address | : | W149, Park Road,<br>Anna Nagar West, Chennai-600101. |
| Design | : | M. Kalaivanan - M.K. Pagalavan |
| Price | : | Rs. **250.00** |



கவிஞாயிறு

# தாராபாரதி

மணிவிழா

நிறைவு வெளியீடு







# கவிஞாயிறு தாராபாரதி படைப்புகள்

## கவிதை நூல்கள்






**புதிய விடியல்கள் 1982**

**இது எங்கள் கிழக்கு 1989**

**விவசாயம் இவர் வேதம் 1992**
வேளாண்செம்மல் புலம்பாக்கம்
முத்துமல்லா வரலாறு

**தாராபாரதி கவிதைகள் 2000**

**பூமியைத் திறக்கும் பொன்சாவி 2001**
கவியரங்கக் கவிதைகள்

**இன்னொரு சிகரம் 2002**








## உரைநடை நூல்கள்

**பண்ணைப்புரம் தொடங்கி**
**பக்கிங்காம்வரை 1993**
இசைஞானி இளையராஜா வரலாறு

**வெற்றியின் மூலதனம் 2004**





# கவி மங்கலம்

| தட்டு | வரிசை |
|---|---|


முன்னுரைகள் ............................................6

தாய்மொழி ............................................20

தந்தையர் நாடு ............................................51

சமுதாய வீதி ............................................ 90

இளைய பாரதம் ............................................ 114

பெண்ணியம் ............................................152

வறுமைக் கோடுகள்............................................ 178

இயற்கை எழில் ............................................ 216

மலரினும் மெல்லிது............................................ 237

பன்முகப் பார்வை ............................................ 263

ஞான வெளி ............................................ 329

மானுட வேர்கள் ............................................354

கவிமுகம் - நேர்முகம் ............ 383

வாழும் வரலாறு .................... 398

# தமிழ் மண்ணில் நிலைத்திருக்கும்...

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

அருமை நண்பர் தாராபாரதி அவர்கள், இன்றைய முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர்; தமக்கென ஒரு தனித்த பாங்கினைக் கொண்டு எழுதி வருபவர்.

வள்ளுவரின் வாழ்வியல் நெறியும், இளங்கோவின் இன உணர்வும், பாரதியின் விடுதலை வேட்கையும், பாவேந்தரின் மொழிப் பற்றும் ஒன்றிணையப் பாடும் ஒப்பற்ற கவிஞர்.

கவிஞர் தாராபாரதி, மரபுக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புச் செய்வது போல இந்நூலை யாத்துள்ளார்; புதுக் கவிதைப் பாங்கில் மரபுக் கவிதைகளைப் படைத்துத் தந்திருக்கிறார்!

இந்நூலில், புதுக் கவிதையின் வேகத்தையும் காண முடிகிறது; மரபுக் கவிதையின் யாப்பமைதியையும் சுவைக்க முடிகிறது! யாப்புக் குறையாத மரபு வடிவில் புதுமை எண்ணங்களைச் சிறப்பாகப் பாய்ச்சியிருக்கிறார்! இதுவே இவருடைய வெற்றிக்குக் காரணமாகிறது.

கவிஞரின் கவிதைத் தலைப்புகளே கலையழகுடன் மிளிருகின்றன! நாட்டைச் சூழ்ந்திருக்கும் தீமை இருள் அகன்று நன்மையொளி பரவ வேண்டுமெனும் கவிஞரின் ஆர்வம், இந்நூலுக்குப் 'புதிய விடியல்கள்' என்னும் தலைப்பைத் தந்திருக்கிறது. உட்தலைப்பு ஒவ்வொன்றிலும் தனியழகு பொலிகிறது!

கவிஞரின் கவிதைகளில், இலக்கியத்திற்குக் கூறப்படும் அத்துணை நயங்களும் சிறந்து காணப்படுகின்றன.

ஏழைகளின் நிலையை இவர் துல்லியமாகப் படம் பிடிக்கிறார். 'உலகத்தைத் தாங்குகின்றவன் உழைப்பாளி. ஆனால் அவன் எதை எதையெல்லாம் தாங்க வேண்டியிருக்கிறது! தன் தேவைக்கே ஏழை ஏங்க வேண்டியதாயிருக்கிறது! இவ்விழிநிலை மாறப் புரட்சி தேவை' எனக் குரல் கொடுக்கிறார். அப்புரட்சிக்கு, காவியங்களை விடக் களப்பலிகளே மிகுந்த சேவை செய்யும் என்பதையும் கவிஞர் தெளிவாக்குகிறார்.

கவிஞரின் நெஞ்சத்தை அவருடைய கவிதை அடிகளிலிருந்து நாம் நன்குணர முடிகிறது.

*'நெஞ்சக் கதவைத் திறந்துவிடு ஒரு நேசக் காற்று வீசட்டும்...'*

தாராபாரதியின் கவிதை மலர்களில் நான் அம்சிறைத் தும்பியாக ஆழ்ந்து, காமஞ் செப்பாது கண்டதை மொழிந்துள்ளேன்! நீங்களும் இம்மலர்களில் தேனுண் தும்பியாகத் திளைத்து மகிழ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நல்லதொரு கவிஞரை, நல்லதோர் இலக்கிய அமைப்பான இலக்கியவீதி பாராட்டி வளர்க்கிறது...

கவிஞர் தாராபாரதியின் புகழ், தமிழ் மண்ணில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

வாழ்க தாராபாரதி! வளர்க அவர்தம் கவிதைத் தொண்டு!

▶ *புதிய விடியல்கள் - 1982*

# நிலா உலகும் பாராட்டும் எதிர் காலத்தில்...

உவமைக் கவிஞர் **சுரதா**

பதினாறு வயதுமுத லாகத் 'தாரா
 பாரதி'க்குப் பாட்டெழுதும் பயிற்சி உண்டு!
நதிநீரை அதன்கரைகள் அறியும்; இந்த
 நண்பர்கவித் திறமையைநான் அறிவேன்! முன்பு
'புதுவிடியல்' எனும்நூலைப் படைய லாக்கிப்
 புகழ்பெற்று விளங்குமிவர் அடுத்த தாக
'இதுஎங்கள் கிழக்' கென்னும் புதிய நூலை
 இப்போது நம்மவர்க்கு வழங்கி யுள்ளார்!

'ஒருமைப்பா டேநமது குறைபா' டென்றும்
 உண்மையது போனதுவே சுடுகா' டென்றும்
'தருமம்போ யிற்றுவன வாச' மென்றும்
 'தாயேபார் இதுதான்உன் தேசம்' என்றும்
பரிதாபப் படுகின்ற நண்பர் தாரா
 பாரதிக்கு நினைவூட்ட விரும்பு கின்றேன்;
பெருங்கவிஞர் திண்டிவனம் என்னும் ஊரில்
 பிறந்தவரும் இவரைப்போல் புலம்பி யுள்ளார்!

'புதுவேகத் தோடெழுந்து வீட்டை விட்டுப்
 புறப்படுக! உன் உள்ளங் கையில் உள்ள
விதிரேகை தனைக்கண்டு பயப்ப டாதே!
 விரைந்ததனை விஞ்ஞான ரேகை யாக்கு!
கதைபேசித் திரியாதே தம்பி! நல்ல
 காரியங்கள் செய்திடுக' என்று கூறும்
நதிவேகப் பாடல்களைப் படிப்போ மாயின்
 நம்முடைய நடைவேகம் அதிக ரிக்கும்!

'வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!'

என்றிதுபோல் இதுவரையில் சொன்னா ருண்டா?
இத்தகைய சிந்தனைகள் ஒன்றா ரெண்டா?
அன்றிதுபோல் பாடியவன் பரிசு பெற்றான்!
அரங்கத்தில் அக்கவிஞன் பெருமை பெற்றான்!
இன்றிவர்க்குப் பரிசுதர ஒருவர் உண்டா?
எல்லாமே இப்போது 'வேடந் தாங்கல்!'
பன்றியின்பல் தேர்ந்தெடுக்கப் பட்டால், யானைப்
பல்லுக்கு மரியாதை கிடைக்கா தன்றோ?

இலக்கியவீ திக்கவிஞர் இயற்றி யுள்ள
'இதுஎங்கள் கிழக்' கென்னும் இந்நூல் என்னை
மலைக்கவைத்து விட்டதென்பேன்; சிறந்த செய்யுள்
மணியோசை என்செவியைத் தொட்ட தென்பேன்!
தலைசிறந்த கவிஞரிவர் என்ப தாலும்,
சாதிக்கும் திறனுடையார் என்ப தாலும்,
நிலைத்தபுகழ் இக்கவிஞர் பெறுவார்; வெள்ளி
நிலா உலகும் பாராட்டும் எதிர்கா லத்தில்!

▶ *இது எங்கள் கிழக்கு - 1989*

# பூஞ்சிறகசைக்கும் வார்த்தைகளே, புறப்பட்டு வாருங்கள்!

கவிப்பேரருவி ஈரோடு **தமிழன்பன்**

**க**விஞர் தாராபாரதியின் கவிதை புனை திறனை, இந்நூலுக்கு முன்னுரை எழுதும் முன்பே நான் நன்கு அறிவேன். மூடுமந்திர முனகல்களையும் - அரூப அலறல்களையும் கவிதையாக்காமல் பளிச்சென்று தெரியும் சமூக உண்மைகளை ஒளி வரிகளில் செதுக்கி எடுத்து - இந்நூலில் அவர் கவிதைகளாகக் கொடுத்திருக்கிறார்.

தாராபாரதி பாடும்பொழுது, போர்க்குணம் வாய்ந்த மனிதாபிமானம் புரட்சிக் குரலாய் நம் செவிப்பறைகளில் மோதுகிறது. காலம் வந்தால் எல்லாம் தானாய் மாறும் என்னும் தளர்வுத் தத்துவம் தூக்கி எறியப்பட்டுக் காலத்தை மாற்றும் நம்பிக்கை, மனித மனங்களில் வீறு கொளச் சிலிர்ப்பதை அவசரப்படுத்துகிற வேகம், இவர் வரிகளில் துடிக்கிறது. வஞ்சிக்கப்பட்ட மக்களை ஓர் அணியில் திரட்டுகிற முயற்சியும் பளிச்சிடுகிற கவிதை, 'இது எங்கள் கிழக்கு'.

இச்சமூகத்தின் குணங்களாகப் படிந்திருக்கும் சுரண்டல், சாதிக் கொடுமை, ஊழல், பெண்ணடி மைத்தனம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய வற்றைத் தாராபாரதி வெளிப்படுத்தும்போது, தகிக்கும் உணர்வுத்தணல் வார்த்தைகளை வெதுப்புகின்றன.

சாதிக் கொடுமைகள் மீதும், சரிவு கண்டுபோன சமூகத்தின் அடையாளமாய், அவமானமாய் நாறிக் கொண்டிருக்கும் ஊழல்கள் மீதும் இவரது கவி வரிகள் வெஞ்சினத்தோடு பாய்கின்றன.

பெண்ணடிமைத்தனத்தை வேரோடு வீழ்த்தப் பாட்டில் வியூகம் அமைத்த பாரதி பற்றிப் பாடும் போது, தாராபாரதியும் அவ்வியூகத்தில் கலந்து நிற்க, சோம்பல் நீங்கிய சொற்களை அனுப்பி வைக்கிறார்.

இத்தகைய கருத்து நிலைப் போக்குகளிடையே, தாராபாரதியின் கவிதை அழகின் ஈர்ப்பாற்றலை எவரும் காண முடியும்.

விழிவிழி உன்விழி நெருப்புவிழி - உன்
விழிமுன் சூரியன் சின்னப்பொறி

கால்நகம் கீறிய கோடுகள் வழியே
கங்கையும் சிந்துவும் ஓடிவரும்

கச்சிதமாய், கவர்ச்சியாய், கவித்துவம் மின்னலிடும் இப்படிப்பட்ட இடங்களை இன்னும் இந்நூலுள் காணலாம்.

கவித்துவ வல்லமையும், கருத்துத் தெளிவும் நம்பிக்கை தரும் அளவிற்குத் தாராபாரதியிடம் விரவியுள்ளன! அதற்கு, 'இது எங்கள் கிழக்கு' நூல் மிகச்சிறந்த சான்று. அவரைப் பாராட்டி, உற்சாகப்படுத்த பூஞ்சிறகசைத்துப் புறப்பட்டு வருமாறு என் சொற்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

▶ *இது எங்கள் கிழக்கு - 1989*

# இன்னொரு பாரதி நெருப்பு!

திரைப்பட இயக்குநர்
எழுத்தாளர் **ஐஷ்வர்யன்**

**க**விஞர்களை நேசிக்கிற நான், கவிதைகளை வாசிப்பதில்லை. இந்த முரண்பாடு வெட்கம் தருகிறது. அதற்காகத் தலை குனிகிறேன்.

ஒரு புனைகதை எழுத்தாளனுக்குக் கவிதை மீது பிடிப்பில்லாக் காரணம் இன்னும் பிடிபடவில்லை!

ஆயினும், சத்தமாய் யோசிக்கையில், நான் முழுமையாக வாசித்த ஒரே தொகுப்பு பாரதியார் கவிதைகள் மட்டும்தானோ? இருக்கலாம், அது நேற்றுவரையான நிஜமாக!

ஆனால், இன்று - இதோ, இன்னொரு பாரதி நெருப்பு என்னைப் பற்றிக் கொண்டுவிட்டது!

'தீக்குள் விரலை வைத்தால்...' என மகாகவி மலைத்தாரே, அப்படி ஓர் அறிவு விழிப்பு! ஆனந்த ஆளுமை!

கவிஞாயிறு தாராபாரதியின் 'இன்னொரு சிகரம்' என் கைக்கு வந்தபிறகு, அது, என்னுள் இவ்வளவு பெரிய மாற்றத்தை விளைவிக்கும் என எதிர் பார்க்கவே இல்லை!

'எத்தனை உயரம் இமயமலை! - அதில்
இன்னொரு சிகரம் உனது தலை!'

இப்போது சொல்லுங்கள்... இந்த ஒரு மந்திரத்திற்காகவே, நான் மட்டுமின்றி... முன்னேறத் துடிக்கும் இளைஞர்கள் மட்டுமின்றி... வாழத் துடிக்கும் அத்தனை மனிதர்களுமே கூட நன்றியுணர்வோடு தாராபாரதி கவிதைகளுக்கு மேன்மையுரை சமர்ப்பிக்கலாம்தானே?

பிற கவிஞர்களுக்கு எளிதில் எட்டாத அந்த அதீதச் சிறப்பு மிக்க மனிதாபிமானமும், தொலை நோக்கும், சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளும் தாராபாரதிக்கான வரங்கள்!

வெவ்வேறு வர்ண உணர்வுக் கலவையாக... உயிர்ப்புள்ள மூலிகை மலர்த்தோட்டமாக 'இன்னொரு சிகரம்' உருவாகியுள்ளது!

இதை வெளியிடும் இலக்கியவீதி இனியவன் அவர்களின் அற்புதப்பணி, அளவில்லாத பாராட்டுக் குரியது.

கணிப்பொறியிலிருந்து மீளுமுன்னர், மறுபடி கை விரிக்கிறேன்.. விரல்களைப் பார்க்கிறேன்.

என் மூலதன விரல்கள்... வெளிச்ச விழுதுகளாய்... இமயத்துக்கும் மேலான சிகரங்களாய்... இல்லையில்லை - பத்துச் சூரியன்களாகவே ஒளிர்கின்றன!

அத்தனை 'செவ்வான வட்டத்து' ள்ளும், தாரா பாரதி முகங்களே!

நம்மால் போற்றப்படுபவர் முகங்களை அகத்துள் காண்பது சாத்தியமே!

ஆனால், கையிலேயே காண்பது?!

தாராபாரதி!... நீங்கள் என்றும், என்றென்றும் வாழ்வீர்கள்! எத்தனையோ, எத்தனையோ பேரை வாழ வைப்பீர்கள்!

தாராபாரதியைப் படிப்போர்க்கு, வெற்றி நிச்சயம்!

▸ *இன்னொரு சிகரம் - 2002*

இலக்கியவீதி

# பெருமை கொள்கிற கவிஞர்!

இலக்கியவீதி **இனியவன்**

ஒரு பொற்காலம் புலர்ந்திருக்கிறது! இந்தப் பொன் விடியலுக்காக, நான் காத்திருந்த காலம் மிக அதிகமே. ஆயினும், என் வேள்வி வீணாகி விடவில்லை! தமிழுக்கு ஓர் உண்மையான கவிஞர் கிடைத்திருக்கிறார்! பாரதி என்கிற இமய சக்தியிலிருந்து, 'தாராபாரதி' என்கிற ஜீவநதி பிரவாகம் எடுத்திருக்கிறது...

மரபுக் கவிதை உலகிற்குத் தாராபாரதி ஒரு மகத்தான சொத்து. அதே சமயம், இலக்கண வரம்பிலான 'சொத்தைச் சொல் தோரண'த்தை இவர் மதிப்பதே இல்லை!

இந்த இலக்கணப் பூசாரிகளைவிட, இலக்கணம் மீறினாலும் - இதயத்தைப் பாதிக்கிற கவிதைச் சிந்தனையாளர்களைப் பெருந்தன்மையோடு போற்றுவதில் இவருக்கு இணையே கிடையாது!

அழகையும், காதலையும் பாடுவதே தொழிலாகி விட்ட நாளில், அகிலத்துப் பிரச்சினைகளில் மனம் கரைந்து போகிற கவிஞர், இவர்.

காலம் - சில மகாகவிகளை நிர்ணயித்தாற் போலவே, தாராபாரதியையும் நிர்ணயித்திருக்கிறது!

பாரதியோடு - பாரதிதாசனும், சுரதாவும், பட்டுக் கோட்டையும், கண்ணதாசனும் இணைந்த சங்கமமாய் இவர் துள்ளிப் பாய்கிறார். அதே நேரத்தில், தான் 'தாராபாரதி' என்கிற தனித்துவத்தையும் தவறாமல் நிலை நாட்டுகிறார்!

நாட்டை, மொழியை, முன்னோடிகளை மதிக்கும் தாராபாரதி - மக்களின் மூட நம்பிக்கைகளையும்,

மௌடீகப் பழக்க வழக்கங்களையும், மேல் வர்க்க ஆதிக்கத்தையும், சுரண்டலையும் சாடி எதிர்ப்பதில் சத்திய ஆவேசம் கொண்டிருப்பவர்.

இவர் மாதிரி கவிதைகள் எழுதினால், மரபுக் கவிதைகளை அல்லது மரபுக் கவிஞர்களை யார் எதிர்ப்பார்கள்?

மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து - இணக்கமாகி, இவரை ஓர் இணையற்ற கவிஞராக ஆக்கியிருக்கின்றன!

இன்றைய சமுதாயப் பிரச்சினைகளை எதிர்த்துப் போரிட, ஒரு புரட்சி விழிப்புத் தேவைப்படுகிறது என்பதில், யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது.

எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவரது கவிதை வரிகளில் - மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், உலக சமாதானத்திற்குமான உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.

தாராபாரதி, தம் கவிதைக் கைளால் இந்தத் தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாய கடமையாய்க் கொண்டிருக்கிறார்.

ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இவரது இலக்காக இருக்கிறது... அந்த முயற்சியில் இவருக்கு வெற்றிகளும் வாய்த்து வருகின்றன!

# சொற்களில் வழித்த சுடுசோறு

## தொகுப்பாசிரியர் **மலர்மகன்**

**க**விஞாயிறு தாராபாரதி என் இளவல்.

எதுகையாய்ப் பிறந்து, மோனையாய் என்னை முந்தியவர்.

தாராபாரதி இன்று தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரிமுகம் என்றால் -

அவர் இலக்கியவீதி இனியவனின் அறிமுகம்.

இளைய கவிஞர் பலருக்குத் துறைமுகம்.

தம்பி தாராபாரதியின் மறைவுக்கு முன்னும் பின்னும் அவரது எல்லா நூல்களையும் இலக்கிய வீதியே வெளியிட்டு, அறிமுகப்படுத்தி அவர் நினைவைச் சிறப்பிக்கிறது; புகழைச் சேமிக்கிறது.

காகிதங்களில் இறைந்து கிடக்கும் கவிஞாயிறின் சுருக்கெழுத்து வார்த்தைகளுக்கும், கிறுக்கெழுத்து வரிகளுக்கும் -

நூல் உருக் கொடுக்கும் முயற்சியை என் கடமையாக எண்ணுகிறேன்; இதை, தம்பியின் புகழ் வயதை நீட்டும் தவமாகப் பண்ணுகிறேன்.

தாராபாரதி - பிற்போக்குச் சக்திகளின் பிடரியைப் பிடித்து உலுக்கி, முற்போக்குக் கருத்துகளை முன் வைப்பவர்.

'கடையனுக்கும் கடைத்தேற்றம் வேண்டும்' என்னும் இடையறாத தாகம், இவரது வரிகளின் நடை வேகம்.

தாராபாரதி –

துருப்பிடித்த வார்த்தைகளைத் தூரத் தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களுக்குச் சூடேற்றியவர்!

இவருடைய கவிதை வரிகள் –

வீரியம் மிக்க சூரிய விதைகள்!

இருளை வேரறுக்கிற வெளிச்ச விழுதுகள்!

இவரது கவிதைகளில் –

நிறுத்தக் குறிகள் கூட நெருப்புத் திரிகள்!

மேலும் இவர் கவிதைகள், சொற்களில் வடித்த சுடுசோறு... சமுதாயம் பசியாறும்.

இந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகள் இதை மெய்ப்பிக்கும்.

இது – கவிஞாயிறு தாராபாரதியின் நான்கு கவிதை நூல்களின் செம்பதிப்பு.

என்னுடைய இந்த உழைப்புக்கும், இலக்கியவீதி இனியவனின் அழைப்புக்கும் எப்போதும் ஆதரவளித்து வரும் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்றி.

# வானம் திறக்கும் சூரிய வாசல்...

## கவிஞாயிறு தாராபாரதி

**எ**ட்டயபுரத்துக் கவிஞன், தன் எழுதுகோலில் விட்டுவைத்த மையின் மிச்சத்தை, என் எழுதுகோலில் நிரப்பிக்கொண்டு எழுதுகிறேன்.

எளிமை எனக்குப் பிடிக்கும்; என்னைப் போலவே என் கவிதைக்கும்! மனித நேயத்தின்மீது என் எழுதுகோலுக்கு விருப்பம்; அதைப் போலவே எனக்கும்!

நான், சில இலட்சியங்களோடு நடக்கும் **மனிதன்**; தரமான இலக்கியங்களைப் படிக்கும் **சுவைஞன்**; சமதர்மக் கவிதைகளைப் படைக்கும் **கவிஞன்**.

தமிழில் எழுதும்போது எனக்குள் மகிழ்ச்சி ததும்புகிறது...

ஆனால், இன்று தமிழின் நிலை கண்டு என் மனம் வெதும்புகிறது. சொந்த மொழியைப் பாதிக்கும் சோற்று மொழிகளின் ஆதிக்கம், சந்தி முனையெங்கும் சர்வாதிகாரம் செய்கிறதே!

'தமிழில் கல்வி' என்பது அறுகி, 'கல்வியில் தமிழ்' என்று குறுகிப் போயிற்றே!

வாழும் தமிழ், தாழும் தமிழாகி வருவதைத் தடுத்து, வளரும் தமிழாக்க ஒரு நூறு இளைஞர்கள் உடனடியாகத் தேவை... என் கவிதைகளால் அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்க முயல்கிறேன்...

வானம் திறக்கும் சூரிய வாசலில் நின்று கொண்டு என் தேசத்தைப் பார்க்கிறேன்...

பகல் நேரத்திலேயே இந்திய வீதிகள் இருண்டு கிடக்கின்றன!

மனித நிழல்கள் இந்த மண்ணுக்குக் குடை பிடிக்கும் என்றல்லவா நினைத்தோம்? ஆனால், இங்கே மனிதர்கள் தங்கள் நிழல்களாலேயே பூமியை இருட்டாக்கிக் கொண்டிருக்கிறார்களே!


சமூகத்தின் சீரழிவிற்கு யார் பொறுப்பு? நான், நீங்கள், அரசியல்வாதிகள் – அனைவருமே கூட்டுப் பொறுப்பேற்க வேண்டிய குற்றவாளிகள்!

காலம் கடந்துவிடவில்லை... வாருங்கள், நம்மைப் புதுப்பித்துக்கொண்டு நடப்போம். தேசப் படத்தின் தூசுகளைத் துடைப்போம்.

மக்களாட்சியில் சமத்துவத்தைப் பாடிவிட்டு, கவிஞர்கள் சிலர் மன்னர்களாக முடி சூட்டிக் கொள்கிறார்கள். இலக்கியச் சந்தையில், மகுடங்கள் மலிவு விலைக்குக் கிடைக்கின்றன. இந்த மலிவுப் பதிப்பு மன்னர்கள் வரிசையில், இன்னொரு நாற்காலி போட்டுக் கொள்ள எனக்குச் சம்மதமில்லை.

நான் மக்கள் கவிஞனாக – உங்கள் தோள்களில் தோழமையோடு கைபோட்டுக் கொண்டு உலா வரவே விரும்புகிறேன்...! வாருங்கள் நண்பர்களே, நாம் சேர்ந்து நடப்போம்; நமது வியர்வையால் பூமியைக் கழுவிப் புதுப்பிப்போம்!


*▸ இது எங்கள் கிழக்கு – 1989*




# தாய்மொழி

# தமிழே வாழ்க...

தாய்மொழி தமிழே! எந்தன்
தனிமொழி முதலே, வாழ்க!
வாய்மொழி பலவென் றாலும்
வழிமொழி நீயே ஆனாய்!
காய்மொழி சிலவற் றுள்ளும்
கனிமொழி நீதான் என்பேன்!
தாய்மொழி தமிழே, எந்தன்
தனிமொழி முதலே வாழ்க!







# முதல் நாக்கு விதை

வானமகள் இருகதிர்கள்
ஈன்ற நாளில்
வையமகள் ஈன்றெடுத்த
தமிழே வாழி!

கானகத்து இருட்டுகளில்
மனிதன் வாழ்ந்த
கற்கால விடியல்களைக்
கண்ட தேவி!

ஊனமுற்ற நாக்கில் ஒலிச்
சிகிச்சை செய்து
உயர்திணையின் உதடுகளைத்
திறந்த செல்வி!

மானுடத்தின் முதல் நாக்கு
விதையே! பூமி
மண்டலத்தில் முதல் தொட்டில்
அசைத்த தாயே!

வாழி!


# தாயே, தமிழே!


நினைவாலும் கனவாலும்
எனையாளும் தமிழ் மகளே!

தினைமாவைவிட இனிக்கும்
தேமாவும் புளிமாவும்
பனையோலை யில்கண்டு
பதநீர் குடித்தவளே!

உயிரே! மெய்யே!
உயிர்மெய்யாய் இருப்பவளே!
தமிழே, உனக்கு
உயிர் - மெய்யாய் இருக்கிறதா?

குற்றுயிராய்க் கிடப்பவளே
ஊசலாடும்
குறையுயிரில் வாழ்பவளே
சிற்றுயிரைத் தந்துன்னை
எழுப்புதற்கு
சிலிர்த்திருக்கும் உன் மக்கள்
சிறுத்தைக் கூட்டம்!








# தமிழாகி வருக

பொன்முடி சூடிய தலைமகளே,
புகழ்முடி சூடிய கலைமகளே!
உன்முடி வீழ்ந்தது தரைமடியில்;
உன்னிலை தாழ்ந்தது எவர்செயலில்?
தன்முடி வளர்க்கும் இளைஞர்குலம்
தமிழ்'முடி யிறக்கும்' பணிசெய்தால்
நன்முடி வெங்கே உருவாகும்?
நம்தலை முறைக்குப் பழியாகும்!

செந்தமிழ் மொழியைத் தீண்டாமை
சிலதமிழ் மனத்தின் லட்சியமா?
நந்தமிழ் தன்னைப் பயிலாமை
நம்மவர் நாவின் கொள்கைகளா?
பைந்தமிழ் வழங்கும் தாய்ப்பாலைப்
பருகக் கன்றுகள் மறந்தது ஏன்?
எந்தமிழ் உனது இசையினிமை
இறைவன் செவிகள் துறந்தது ஏன்?





தரைமொழி களுக்குள் மூத்தவளே
　　தான்மூப் படைந்தும் இளையவளே!
வரைமுறை வைத்துக் காப்பவளே
　　வளர்மொழி இன்றேன் தளர்கின்றாய்?
உரைநடை, கவிதை இரண்டும் நீ
　　உடுக்கும் ஆடைகள்! அவ்வுடையை
அரையாய்க் குறைத்தது கதையுலகம்;
　　அதையும் பறித்தது கவியுலகம்!


தலைமை ஏற்கும் தமிழ்மகளே!
　　தமிழ்ப்பத் திரிகை எழுத்துகளில்
தலைவி உன்னைத் தனியாக
　　தரிசனம் செய்ய முடிவதில்லை!
தொலைதே சத்து வேற்றுமொழித்
　　'தோழியர் கூட்டம்' சூழ்ந்துவர
தலைவி உலவி வருகின்றாய்;
　　தனியே காண்பது எந்நாளோ?



# ஊடு பயிர்கள்

நாவை விட்டுத் தாய்மொழியை
நாடு கடத்தும் நமதுஇனம்
நாவில் 'அன்னியத் தொட்டில்'களை
நாளும் கட்டித் தாலாட்டும்!
தேவைக் கதிக மாய்வேற்று
தேச மொழிகளில் விருப்புவரும்;
பூவைச் சுமக்கும் வேர்மீது
பூவுக் கிங்கே வெறுப்பு வரும்!


பெற்ற தாயைத் தாயென்று
பேசவும் கூசும் பேதையர்கள்;
பற்றைக் கூட வெறியென்று
பாட பேதம் செய்பவர்கள்;
கற்ற மொழிகளில் அன்னைக்குக்
கடைசி இடத்தைத் தருகின்றார்!
'மற்ற வீட்டு வார்த்தை'களில்
மதுமயக் கத்தைப் பெறுகின்றார்!





அயல்மொழி மோகம் முதியவர்க்கு;
அதிலொரு வேகம் இளையவர்க்கு!
அயல்மொழி கற்கத் தடையில்லை;
அதற்கும் உண்டே ஒருஎல்லை!
வயலின் நடுவே 'ஊடுபயிர்'
வளர்ப்பது போலப் பிறமொழிகள்
பயிலும் தமிழின் நிழலினிலே
பயில்வது தானே அளவாகும்!

சொந்த மொழியைப் பாதிக்கும்
'சோற்று மொழி'களின் ஆதிக்கம்
எந்தத் துறையிலும் பரவாமல்
என்றும் விழிப்பாய்ச் செயல்படுவோம்;
'எந்தன் தாய்க்கு, இதுவரைநான்
என்செய் தே'னெனச் சிந்திப்போம்!
வந்தனைக் குரிய நம்மொழியில்
வளங்கள் சேர்க்க வழிவகுப்போம்!





# உரைகல்லாய் ஆக்குவாய் நீ...

தென் வாசல் கலைவாசல்
திக்கெட்டின் தலைவாசல்
தெரிந்துகொள் இளைய தமிழா!

திங்கள் உன் தேன்கூடு
செவ்வாய் உன் படைவீடு
தேனீக்கு வானம்தொலைவா?

என்வாசல் பிள்ளைக்கு
இனமானச் சிந்தனை
இளைப்பின்றி தருகதமிழா!

ஈரோட்டில் பகுத்தறிவுச்
சிகரத்தைக் கண்டவன்
இமயம்ஒரு பெரியமலையா?

உன்வாயின் தாய்மொழியை
உலைவாயில் போடாமல்
ஊர்வாய்க்குக் கொண்டுபோநீ!

உலகத்தின் முதல் மொழிக்கு
ஒவ்வொருவர் நாக்கினையும்
உரைகல்லாய் ஆக்குவாய்நீ!

# கவரிமான் சாதி


கவிரிமான் சாதி யாகக்
கவிஞர்கள் வாழ்ந்த தால்தான்
கவரிகள் வீசி அந்நாள்
காவலர் போற்றி நின்றார்!

பண்பாடும் ஆசிரி யப்பா
பாதத்தில் தலையை வைத்து
வெண்பாமேல் வெயில் படாமல்
வெண்கொற் றக்குடை பிடித்தார்!

நெற்றிக்கண் திறந்த போதும்
நேரெதிர் நிமிர்ந்து நின்று
குற்றமென் றான்நக் கீரன்
குனிந்தானா கடவு ளுக்கு?

கொற்றவன் தவற்றைக் கோவூர்
கிழார் சுட்டிக் காட்டவில்லை?
பெற்றதோர் பரிசி லுக்குப்
பெருஞ்சித் திரன்தாழ்ந் தானா?

பின்வரும் விளைவுக் கஞ்சிப்
பிசிராந்தை வளைய வில்லை;
பொன்பொருள் பதவிக் காகப்
பொய்கையார் பொய்க்க வில்லை!








மன்னவன் மதிப்பைப் பெற்றார்
மாங்குடி மருதன் - நேரில்
தென்னவன் தூதாய்ச் சென்று
திருத்தங்கள் செய்தார் அவ்வை!

இறைவனைக் கூடச் சாடி
எழுதிற்றே வள்ளுவன் கை!
துறவிதான் இளங்கோ - ஆனால்
துறந்தாரா தமிழ் வீரத்தை?

பரிசிலைப் பெறும் பொருட்டு
பாயிரம் யாத்த தில்லை;
அரசினை வாழ்த்திப் பாடி
அணிந்துரை எழுத வில்லை!

வெற்றிலைச் சிவப்புக் காக
வெண்பா பாடவில்லை!
அந்தப்புரத் தாதியர்க்கு
அந்தாதி பாடவில்லை!

புகழ்கொண்ட மன்னர் அந்நாள்
புலமைக்குத் தலைமை செய்ய
இகல்வேந்தர் செங்கோ லுக்கு
எழுதுகோல் பாடம் சொல்ல



பகைவென்ற வீரவாளைப்
பனையோலை வென்ற காலம்!
மகுடத்திற் காக யாரும்
மகுடிகள் ஊதவில்லை!


உவமானம் கவிதைக் கென்றால்
உயிர்மானம் கவிஞர்க் கன்றோ?
கவிதைக்கும் கற்பு வேண்டும்;
காசுக்கு விற்க வேண்டாம்!

ஒருவேளைச் சோற்றுக் காக
உடைவாளை விற்கும் வீரன்;
ஒருவேளைச் சுகத்துக் காக
உடலையே விற்கும் மங்கை;

ஒருவேளைப் பொருளுக் காக
உதடுகள் விற்கும் கவிஞன்;
ஒருவேளைப் பலவீனங்கள்
ஒரு யுக அவமானங்கள்!

என்றைக்கும் மாறி டாமல்
எழுந்தநாள் கொள்கை யோடு
இன்றைக்கும் இருக்கின் றார்கள்
இலட்சியக் கவிஞர் சிலபேர்!

இனமானம் காத்து நிற்கும்
எழுவானச் சுடர்கள்; இந்தத்
'தனித்தன்மைக் கவிஞர்' களைநான்
தலைமீது தாங்கிக் கொள்வேன்!





# சுட்டுவிரல் நீ சுருங்குவதா?

நிமிர்வாய் தமிழா, எழுவாய் - அட,
நீதான் உலகின் எழுவாய்!
உமியாய்ப் பறக்கும் பகைவாய் - நீ
உயிர்ப்பாய், புரட்சிப் புயலாய்!

எட்டுத் திசையும் புகழ்பொறித்தாய் - இன்று
இருப்பதில் பாதியைப் பறிகொடுத்தாய்!
சுட்டுவிரல் நீ சுருங்குவதா? - உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?

இனம்மொழி காக்கக் கொடியுயர்த்து - நீ
இருப்பதைக் காக்கத் தோளுயர்த்து!
அனுமதி யாரிடம் பெற வேண்டும்? -நீ
ஆர்த்தெழுந் தால்தான் நிலைமாறும்!

தமிழன் ஆட்சி தமிழில் இல்லை - அட
தமிழுக்குக் கல்வியில் தலைமையில்லை!
தமிழன் கோயிலில் தமிழில்லை - சீ
தமிழன் வாயிலும் தமிழில்லை!

வேர்க்குணம் நமது இனமானம் - உன்
விழிக்குள் வரட்டும் செவ்வானம்!
போர்க்குணம் நமக்கு உடையல்லவா - நாம்
புறநா னூற்றுப் படையல்லவா?

# விதைமொழியே தமிழ்தானே!


கோடுயர்ந்த மலைகளிலே
கொடிமரங்கள் நட்டவனின்
வீடுகளே தமிழ்மொழியை
விலக்கி வைக்கும் பெருங் கொடுமை!


வீட்டில் பழகும்மொழி
வேற்றுமொழி யானபின்பு
நாட்டு மொழியைப் பற்றி
நாம்பேசத் தகுதியுண்டா?

தாய்ப் பாலில் அன்னியமும்
தாலாட்டில் அயல்மொழியும்
நோய்போலப் பரவினால்
நலிந்துவிடும் தமிழ்ச்சாதி!

உலகமொழி அத்தனைக்கும்
ஊற்றுமொழி தமிழ்தானே!
வேற்றுமொழி அனைத்துக்கும்
விதைமொழியே தமிழ்தானே!

தமிழகம் உனது அன்னைநிலம்,
தமிழினம் உனது தண்டுவடம்;
தமிழ்உன் மூச்சின் மூலதனம் - நீ
தடைகள் தகர்க்கும் காளையினம்!







# முகவரி மீட்போம், வா!

எழுந்திரு இளந்தமிழா,
இனம்மொழி காப்போம்வா!
முழங்கிடு; முன்னே வா,
முகவரி மீட்போம் - வா!

உன் மூச்சு தமிழ்க்காற்று
உன் நாக்கு தமிழ் ஊற்று
உன் நரம்பில் இனமானம்
உன்னெழுச்சி படையெழுச்சி!

தாய்மொழியில் பேசுவதைத்
தரக்குறைவாய் எண்ணுவதா?
தாய் மொழியே வளர்ச்சிக்குத்
தடையென்று சொல்லுவதா?


தாய்ப்பால் மறந்தவுடன்
தமிழ்ப்பாலை மறக்கடித்து
வாய்ப்பாலாய்ப் பிள்ளைகட்கு
வணிகப்பால் ஊட்டுவதா?


சுவருக்கு மட்டுமே
சொந்தம் ஆக்கிவிட்டு
எவருமே தமிழை
எள்ளி ஒதுக்குவதா?

குழந்தையின் நாக்கிலில்லை
கோயில்மணி நாக்கிலில்லை!
அழகுதமிழ் தீர்ப்பிலில்லை;
அலுவலகக் கோப்பிலில்லை!

இடம்மாறி, சூழிமாறி
இனமான முகம்மாறித்
தடம்மாறும் தமிழனுக்குத்
தாய்மொழிமேல் பற்றுவர-

தடைகளை எற்றிவிடு;
தாய்மொழியை ஏற்றிவிடு!







# வேதம் தமிழிலுண்டு

தாயின் கருவறையில்
தான்படித்த செந்தமிழைக்
கோயில் கருவறைக்குள்
கொண்டுசெல்ல முடியாதா?


பொன்னியில் குளித்த
புனிதத் திருமொழியைச்
சன்னதியில் பாடினால்
சாமிக்கா தீட்டுவரும்?


தேவாரம் பிரபந்தம்
திருவாசகம் அருட்பா
நாவாரப் பாடினால்
நாதன் செவி கேளாதா?

தமிழறியும் பெருமாளும்
தமிழ்க் கடவுள் முருகனும்
அமுதத் தமிழ்கேட்டால்
ஆசிதர மறுப்பாரா?

சொற்றமிழால் பாடென்று
சுந்தரனை வேண்டிநின்ற
நெற்றிக்கண் ஈசனது
நேயர் விருப்பம் எது?

ஓதும் மந்திரங்கள்
உண்டெந்தன் தாய்மொழியில்;
வேதம் தமிழிலுண்டு!
வேற்றுமொழி எதற்கிடையில்?








# கற்பூரத் தட்டுக்குத் தமிழ் கற்றுத்தா!

'வழிபாடு தமிழிலா?
வரலாமா?' - என்று
மொழிபேதம் செய்து
முட்டுக் கட்டை யிடுவார்!

ஓதும்மந் திரத்தில்
ஊனமா நம்மொழிக்கு?
வேதம்என்ப தென்ன?
வெளிச்ச மனம்தானே!

திருக்கோயில் மணிஓங்கி
தமிழ் பேசாதா?
தேவாரத் தமிழ் இறைவன்
செவி ஏறாதா?

தாழ்திறவா மணிக்கதவும்
தமிழ்கேட்டுத் திறந்ததே!
வாய் திறவாத் தமிழனே
வழியறியா மயக்கமென்ன?






உண்மையில்நீ அஃறிணையா?
ஒப்பனையால் உயர்திணையா?
கண்ணிமைகடந்து கருமணி
களவு போகிறதே!

உள்ள எழுச்சியின்றி
உறங்கும் தமிழனே
பள்ளியறை பாசறையா?
பாய்சுருட்டி வா!

கருவறையைத் தமிழ்தொட்டால்
தீட்டாம்? வாவா
கற்பூரத் தட்டுக்குத்
தமிழ் கற்றுத்தா!





# தமிழ்ச்சாதி

யாரடா கீழ்ச்சாதி,
எவனடா மேல்சாதி?
எல்லாரும் ஒருசாதிதான்!


ஊரிலே தெருவிலே
உட்பகை இனியில்லை;
ஒருசாதி - தமிழ்ச்சாதிதான்!

என் ரத்தம் உன் ரத்தம்
இரண்டுமே தமிழ்ரத்தம்
எதற்காக நமக்குள் யுத்தம்?

உன் சுற்றம் என்சுற்றம்
ஊர் முற்றும் நம் சுற்றம்
ஒன்றடா தமிழன் முற்றம்!

எத்தனை தலைச்சாதி
இடைச்சாதி பிரித்தவன்
யாரவன்? ஆரியன்தான்! - அந்த

எத்தனின் சூட்சிகள்
எத்தனை! அவற்றைநீ
எரிக்கின்ற சூரியன்தான்!




# செந்தமிழா, ஒரு வார்த்தை!

செந்தமிழா ஒரு வார்த்தை
நில்லடா - உன்
சிந்தனையைப் புதுப்பித்துக்
கொள்ளடா!

அணுப்பொறியில்
உன் அறிவைத் தீட்டு - நீ
அறிவியலில்
உன்புகழை நீட்டு!
கணிப்பொறியில்
புதுமைகளைக் கூட்டு - உன்
கைத்திறனை
உலகறியக் காட்டு!
- செந்தமிழா...

தொழில் நுட்பம்
உன்தோளைத் தொழுதிடும் - பிற
துறை யாவும்
உன்காலைக் கும்பிடும்!
மழை உனது
குரல்கேட்டுச் சுரக்குமே - வான
மண்டலம் உன்
விரலசைவில் நடக்குமே!
- செந்தமிழா...





கனவல்ல
    கனவல்ல தமிழனே - இது
கற்பனையின்
    உச்சமல்ல நண்பனே!
புயல் வேகம்
    உன் நரம்பில் வரட்டுமே
புதுவேகச்
    சிந்தனைகள் பிறக்குமே!
        - செந்தமிழா...


செவ்வானம்
    உனைக்கேட்டு விழிக்குமே - அந்தச்
செவ்வாயும்
    உன் தமிழைப் படிக்குமே!
ஒவ்வாத
    போர்க்குணம் மறையுமே
உலகெங்கும்
    மனிதநேயம் மலருமே!
        - செந்தமிழா...


# சூரியன் முதுகில் பஞ்சுப் பொதியா?

ஒன்றுபடுவோம், தமிழினமே;
ஓடி மறையும் பகையினமே!
ஏமாளியாய் நீ
இருந்தது போதும் - இது
போராளியாகப் புறப்படும் நேரம்!

பஞ்சுப் பொதிகள்
சூரியன் முதுகில்
பல்லக்கேற விரும்புவதா? - பழம்
பஞ்சாங் கங்கள்
தமிழன் வீட்டுப்
பண்பா டுகளை விழுங்குவதா?

தமிழ்மொழி ஆளத்
தமிழினம் வாழத்
தடைகள் எத்தனை வரட்டுமே - நம்
இமைமயிர் கூட
ஈட்டிக ளாகி
எதிரிப் படையை விரட்டுமே!







எழுந்தால் கொடிமரம்
விழுந்தால் அடியுரம்
இதுதான் தமிழன் எனக் காட்டு!

பொறுத்தால் பனிமலை
கொதித்தால் எரிமலை
அதுதான் தமிழ்க் குணம் நிலைநாட்டு!

ஒன்றுபடுவோம்
தமிழினமே!
ஓடி மறையும் பகையினமே!


# தமிழை அரங்கேற்று


ஒருமொழியால் உலகாண்ட தமிழன் இன்று
ஒற்றைவாடைத் தெருவுக்குள் குறுகிப் போனான்!
தெருவெங்கும் பிறமொழிகள் முழங்கும்! வீட்டுத்
திண்ணையிலே தமிழ்படுத்து உறங்கும்; இங்கே-

வருமொழிகள் நிலைமொழியை மிதிக்கக் கண்டு
வாழ்த்துகிறோம் நாமவற்றை மதித்துக் கொண்டு!
தெருவெல்லாம் தமிழ்பரப்ப மறந்த தாலே
தெற்கைவந்து ஆள்கிறதே வடக்கும் மேற்கும்!

உழக்களவு தேசம்தான் இங்கி லாந்து;
உலகளவு தன்மொழியைப் பரப்ப வில்லை?
கிழக்களவும் மேற்களவும் நீண்டு சென்று
கீர்த்திபெற்ற தமிழ்இன்றோ கீரைப் பாத்தி!

மழைக்களவு மழைமானி காட்டும்; நல்ல
மண்ணளவு நதிநீட்டிக் காட்டும்; பேசும்
மொழிக்களவு கோல்-‘நாக்கு’, நமது நாக்கில்
மொழி ‘களவு’ போகிறதே! தடுக்க வேண்டாம்?







தமிழ்அறவே அலுவலர்க்குக் கசக்கும்; சொந்தத்
தமிழ்உறவை எழுத்தர்குலம் வெறுக்கும்; நாளும்
தமிழ்த்துறவு மேற்கொண்டு பற்ற றுத்துத்
தமிழிளைஞர் மேற்குநோக்கித் தவமி ருப்பார்!

தமிழர்களே 'தமிழ்ப்பகைவர்' ஆனார்; பாதித்
தமிழறிஞர் 'தமிழ்வணிகர்' ஆனார்; முக்கால்
தமிழ்க்கவிஞர் 'தமிழ்த்தரகர்' ஆனார்; நாட்டில்
தாழும்தமிழ், வாழும்தமிழ் ஆவ தெந்நாள்?

'பிள்ளைத்தமிழ்' படித்தவர்கள் கூடத் தங்கள்
பிள்ளை - 'தமிழ்' படிப்பதனை விரும்ப வில்லை!
உள்நாக்கே தாய்மொழியை ஒதுக்கும் போது
உதடுகளைக் கோபித்துப் பயன்தான் ஏது?

பிள்ளைகளை வெள்ளையராய் வளர்க்கத் தானே
பெற்றவர்கள் விரும்புகிறார்? தமிழ் வளர்க்க
உள்ளபடி பற்று கொண்டு உழைப்ப தற்கு
ஒருநூறு இளைஞர்களைத் தேடு கின்றேன்!

அயல்மொழிகள் அணிவகுப்பு தொடங்கும்போது
அணித்தலைமை தாய்மொழியே பெறட்டும்;
நாக்கில்
பயில்மொழிகள் அடக்கமுடன் வரட்டும்; கல்வி
பயிற்றுமொழி தமிழாக அரங்கே றட்டும்!


# தமிழ்ச்சிறகால்
# வானத்தை
# அளக்கலாம் வா!

என்னருமை இளந்தமிழா! கொஞ்ச நேரம்
என்னோடு தாய்மொழியில் பேச லாம்வா!
தன்னுரிமைத் தாய்மொழிமேல் பற்று வைத்தல்
தலைக்குனிவு என்றெதற்கு எண்ணு கின்றாய்?

அன்னையவள் தமிழாட்சி உனது நாட்டில்
அயல்மொழியின் அரசாட்சி உனது நாக்கில்!
கன்னிமையே மாறாத தமிழை உந்தன்
கண்ணிமையில் காப்பதற்கேன் மறந்து போனாய்?

நாடெல்லாம் வள்ளுவனை நகல் எடுக்கும்;
நகரெல்லாம் கம்பனது புகழ் விரிக்கும்;
ஏடெல்லாம் இளங்கோவின் நகல் பதிக்கும்;
எழுத்தெல்லாம் பாரதியைப் படம் பிடிக்கும்;

காடெல்லாம் பாவேந்தன் களம் அமைக்கும்;
கடலெல்லாம் கலம்மிதக்கும், ஆனால் தமிழன்
வீடெல்லாம் மட்டும்தான் தமிழ் விளக்கின்
வெளிச்சத்தை இருட்டடிப்பு செய்தி ருக்கும்!








அன்னைமொழி கற்பதற்கேன் தயக்கம்? மற்ற
அயல்மொழிமேல் உனக்கென்ன மயக்கம்? சீச்சீ
என்னஇது வேண்டாத வழக்கம்? இன்னும்
எத்தனைநாள் சோற்றுக்கு வணக்கம்? சொல்நீ!

அரசுகட்டில் வீற்றிருக்கும் தமிழ்த்தாய் உந்தன்
அரும்புகளின் தொட்டில்களை விரும்பு கின்றாள்;
முரசுகொட்டித் தேரிழுப்பாய்; அவளோ உந்தன்
முற்றத்தில் விளையாடக் காத்து நிற்பாள்!

மரியாதை உபசரிப்பை விடவும் உந்தன்
மழலைகளின் உச்சரிப்பை நேசிக்கின் றாள்!
உரியவளை 'உயிர்மெய்'யைத் தந்த தாயை
உதடுகளில் கொண்டுவர யோசிக் கின்றாய்!

'தாய்மொழியை மட்டும்நீ விரும்பு; மற்ற
தனிமொழிகள் பாராதே திரும்பு' என்று
வாய்மொழிக்கு வரம்புகட்ட மாட்டேன்! வயிற்று
வரவுக்குப் பிறமொழிதான் வழியென் றெண்ணி

தாய்மொழியை நோய்மொழியாய்க் கருதும் உந்தன்
தவறான போக்கைத்தான் கண்டிக் கின்றேன்;
தாய்மொழியுன் கட்டைவிரல்; அதனைச் சுற்றித்
தனிமொழிகள் பிறவிரல்கள் உணர்ந்து கொள்நீ!



ஊடுபயிர் போல்வேற்று மொழிகள் உந்தன்
உதட்டுவயல் தனில்விதைநீ; தமிழைக் கொண்டு
ஏடுகளில் தேன்கூடு கட்டு; வீணாய்
எழுத்துகளில் எதற்காகக் கரையான் புற்று?

தமிழ்தூறும், நரம்புகளில் தமிழ் படித்தால்;
அதுதானே நீ முதலில் குடித்த தாய்ப்பால்!
உமிழ்நீரில் தமிழ்ஈரம் சுரந்து வந்து
உதட்டோரம் நனைக்கிறதே சுவைத்துப் பார்நீ!

தமிழ்ப்பற்று வேண்டுமெனச் சொன்னால் கூடத்
தமிழன்தான் அதைமுதலில் 'வெறி'என் கின்றான்
இமையாக இருப்பவனே இதனைச் சொன்னால்
[illegible]யுள்ள 'புருவங்கள்' எதுவும் பேசும்!

தமிழ்உணர்வு பெற வேண்டும்; நரம்புக் குள்ளே
தமிழ்உணர்வு வரவேண்டும்; வீடு தோறும்
தமிழ்நினைவு இனிவேண்டும்; கல்விக் கூடம்
தமிழ்நிலைக்க விடவேண்டும்; விஞ்ஞா னத்தில்-


தமிழ்க்கனவு புகவேண்டும்; தொழில்நுட் பத்தைத்
தமிழ்க்கரங்கள் தொடவேண்டும்; இலக்கி யத்தில்
தமிழ்ப்புனைவு மிகவேண்டும்; கலைகள் யாவும்
தமிழ்நனையத் தமிழன்தான் முயல வேண்டும்!

தாய்க்கருவில் தமிழோசை கேட்டாய்; இன்று
தாய்மொழிக்கே உன்நாக்கால் தாழ்ப்பாள் போட்டாய்;
காய்மொழியாய்க் கருதுகிறாய்; போக்கை மாற்று;
கனிமொழியின் இனிமைகளை நெஞ்சில் போற்று

வாய்மொழிகள் வரிசையிலே முதலில் உந்தன்
'வாய்'க்காலில் தாய்ப்பாலே வரட்டும் தம்பி!
தாய்மொழியில் பாய்மரத்தை விரிக்கலாம் வா!
தமிழ்ச்சிறகால் வானத்தை அளக்கலாம் வா!



# தந்தையர் நாடு





# பாரதம் அன்றைய நாற்றங்கால்

புதுமைகள் செய்த தேசமிது;
பூமியின் கிழக்கு வாசலிது!


'இதுவரை எங்கள்
புகழ்வரும்' என்று
இமயம் விண்ணில் கொடியேற்ற -

இதிகா சங்கள்
ஏணிக ளாகி
இங்கே வானம் இறங்கிவர -

கீதை நாயகன்
ஊதிய சங்கம்
கிழக்கில் மேற்கை அழைத்துவர -

போதி மாதவன்
புனிதச் சுவடுகள்
புதிய உலகைத் திறந்துவிட -

புதுமைகள் செய்த தேசமிது;
பூமியின் கிழக்கு வாசலிது!





தெய்வ வள்ளுவன்
நெய்த குறள்தான்
தேசம் உடுத்திய நூலாடை!


மெய்களைப் போற்றிய
இந்தியத் தாய்க்கு
மெய்யுணர் வென்கிற மேலாடை!

காளி தாசனின்
தேனிசைப் பாடல்கள்
காவிரிக் கரையில் எதிரொலிக்க -

கம்பனின் அமுதக்
கவிதை களுக்குக்
கங்கை அலைகள் இசையமைக்க -

புதுமைகள் செய்த தேசமிது;
பூமியின் கிழக்கு வாசலிது!

கன்னிக் குமரியின்
கூந்த லுக்காகக்
காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!





மேற்கு மலைகள்
நதிகளை அனுப்பிக்
கிழக்குக் கரையின் நலம்கேட்கும்!

வானை முட்டும்
மலைகளைப் போல
தானியக் களஞ்சியம் குவிந்திருக்க -


ஆகாயம் தொடும்
அம்பா ரங்களை
மேகத் தட்டியால் மூடிவைக்க -

புதுமைகள் செய்த தேசமிது;
பூமியின் கிழக்கு வாசலிது!

புல்வெளி யெல்லாம்
பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!

கல்லைக் கூட
காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்!

அன்னை நாட்டின்
அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர -



அண்ணல் காந்தியின்
சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக -

புதுமைகள் செய்த தேசமிது;
பூமியின் கிழக்கு வாசலிது!


மரண வாயிலில்
கிடப்ப வனுக்கு
மண்ணே மருந்துக் கரைசல்கள்!

தருமம் நடந்த
தரையில் ஓடும்
தண்ணீ ரெல்லாம் தீர்த்தங்கள்!

'பாஸ்க ரா'வுக்கு
அன்றே முன்னோர்
பதியம் போட்ட மார்க்கங்கள்!

பற்பல நாட்டின்
விளைச்சல் களுக்கும்
பாரதம் அன்றைய நாற்றங்கால்!

புதுமைகள் செய்த தேசமிது!
பூமியின் கிழக்கு வாசலிது!



# பாரதம் ஒரு வீடு

மன்னும் 'பாரதம்' ஒருவீடு;
மாண்புறு 'இமயம்' கூரையடி!
மின்னும் 'பம்பாய்' வாசலடி;
'மைசூர்' சந்தன வாயிற்படி!
கன்னிக் 'குமரி' குளியலறை;
'காசி' என்றொரு பூசையறை!
இன்னும் 'ஜெய்ப்பூர்' பள்ளியறை!
இனிதாம் 'ஆக்ரா' மாடியறை!


போற்றும் 'தில்லி' கூடமடி!
'பீகார்' துளசி மாடமடி!
ஏற்றும் 'காஷ்மீர்' தோட்டமடி;
ஏர் 'தஞ்சை' உணவுக் கூடமடி!
மற்றும் உள்ள மாநிலங்கள்,
மனையில் உள்ள தனியறைகள்!
உற்றவர் அறுபது கோடியினர்;
உறவாய் வாழ்வது ஒருவீடு!


☐ சென்னை பாரதியார் சங்கம் நடத்திய அனைத்துக் கல்லூரிகளுக்கான கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை - 1976 ☐

மலைதரு 'கேரள' மணமகளை,
'வங்க' மாப்பிள்ளை கைப்பிடிப்பான்!
கலைவளர் 'தமிழ்த்'தாய் திலகமிட,
கவின்'பஞ் சாப்'பிதா சீர்தருவான்!
அணி'புதுவை' அண்ணன் பூச்சூட்ட,
'ஒரிஸ்ஸா' நாத்தி விளக்கெடுப்பாள்!
'மணிப்பூர்' அத்தை வரிசைதர,
'மராட்டி' மாமன் பரிசளிப்பான்!

'அஸ்ஸா' மில்தே னீர்விருந்து;
'அந்த மானி'ல் மருவிருந்து!
இஸ்லாம் கிறிஸ்தவர் களியாட்டம்!
இந்திய மண்ணில் கொண்டாட்டம்!
'சிந்து' நதியில் தேனிலவு;
'சிம்லா' மடியில் முதலிரவு!
'ஆந்திர' நாட்டில் வரவேற்பு;
'அலகா பாத்'தில் வளைகாப்பு!

தோன்றும் பிரசவம் 'போபாலி'ல்;
தொட்டில் ஆடும் 'குஜராத்'தில்!
மூன்று கடல்களில் நீராட்டு;
மொழிபதி னெட்டில் தாலாட்டு!
உரிமை எல்லைக் கோடெல்லாம்,
உறவின் பற்றுக் கோடானால்
ஒருமை மனங்கள் ஒன்றுபடும்;
உலகில் பாரதம் வென்றுவிடும்!







# ஒருமைப்பாடு

நாடுகளால் பிரிந்தாலும் துடித்துப் பாயும்
நாடிகளால் மனிதர்நாம்! தாய்வ யிற்றுக்
கூடுகளால் பிரிந்தாலும் பொதுப் பிறப்பே!
கூடுறவே கூட்டுறவு! குறுக்கில் எல்லைக்

கோடுகளா இதயத்தைப் பிரிக்கும்? காம்பின்
கோணல்களா கனிச்சுவையைக் கெடுக்கும்? இங்கே
ஏடுகளால் நாம்மாறிப் பகைவ ளர்த்தால்,
இழிவுகளும் அழிவுகளும் தானே மிச்சம்?

புவிக்குள்ளே அமைதிவழி நாடா விட்டால்
புதியதொரு உலகெங்கே தோன்றக் கூடும்?
குவிக்கின்ற படைக்கருவி யாலே மாந்தர்
குடும்பம்போல் வாழ்வதற்கு மார்க்க முண்டா?

நவக்கிரகம் போலஎதிர்த் திசையைப் பார்த்து
நாடுகட்குள் பிளவுபட்டுப் போர்பு ரிந்தால்,
சவக்குழிதான் எல்லார்க்கும் பொதுமை வீடு;
சாம்பலில்தான் அனைவர்க்கும் ஒருமைப்பாடு!

# தொப்புள் கொடியுடன் தேசியக் கொடி!


இந்திய பூமியில்
சுதந்தர மாளிகை
எந்த விதமாய்
எழுப்பப்பட்டது?


சாவைத் தழுவிய
தியாகத் தலைவர்கள்
சாம்பல் இதற்கு
அடித்தளம் ஆனது!

வீரர்கள் தமது
விலாஎலும் பொடித்துக்
கூரை வேய்ந்தனர்;
கோபுரம் நிமிர்ந்தது!

மங்கையர் இந்த
மாளிகை எழுப்பக்
குங்குமச் சேற்றைக்
குழைத்துக் கொடுத்தனர்!

சின்ன அரும்புகள்
செங்கல் ஆயினர்;
தன்னலம் இன்றித்
தாய்நலம் காத்தனர்!







தோட்டப் பூக்களை
அல்ல, தோள்களில்
'தோட்டா'ப் பூக்களைச்
சூட்டிக் கொண்டனர்!

மறைந்த தலைமுறை
மரபும் மாண்பும்
மறந்து போனதே
இன்றைய தலைமுறை!

அன்னை நாட்டில்
பற்றுவைக் காமல்
அன்னியப் பட்டு
வாழ்கிறார்; இவர்க்கு -

உப்பிட்ட மண்ணின்
உயர்வைச் சொல்லி
உணர்த்துவோம்; இனிமேல்
பிறக்கும் குழந்தையின் -

'தொப்புள் கொடி'யை
அறுத்த கையோடு
'தேசியக் கொடி'யுடன்
முடிச்சுப்போடுவோம்!

நாடு என்பது
மண்ணும் மலையுமா?
நமது உடம்பின்
தசையும் எலும்புமே!

# ஆகஸ்டு 15


பாரதச் சுவர்தோறும்
படிந்திருந்த 'வெள்ளை'யினை
யாரும் விரும்பாமல்
அழுக்கென்று ஒதுக்கியநாள்!


துவைக்காத 'வெள்ளை' யினைத்
துக்கச் சின்னமென்று
புவிக்கெல்லாம் எடுத்துரைத்த
புனிதப்போர் முற்றியநாள்!

தொண்டர்கள் சுதந்தர
தாகம் தணிக்க
துப்பாக்கிக் குழாயில்
ரவையைக் குடித்ததை -

துப்பாக்கிக் குழாய்க்குத்
தாகம் எடுத்ததால்
தொண்டர்கள் நெஞ்சில்
ரத்தம் குடித்ததை -

நெஞ்சம் நினைக்கும்
நினைவுத் திருநாள்!







தீரம் மிக்க
தியாகத் தலைவர்கள்
அஸ்தியில் எழுந்தது
அஸ்திவாரம்!

சொந்த நாட்டின்
சுதந்தர மாளிகை
இந்த விதமாய்
எழும்பி நின்றது -

என்னும்
சிந்தனையில் மனம்
சிலிர்க்கும் திருநாள்!

# சுதந்தரச் சூதாட்டங்கள்!


பாரதம்நம் தாய்நாடு;
படத்தைப்பார், எலும்புக்கூடு!
யாரிதன் காரணங்கள்?
யார்?நானும் நீயும்தானே!


ஏந்தல்கள் வாழ்ந்த நாட்டில்
எதற்கெடுத் தாலும் இன்று
ஏந்தல் - கையேந் தல்கள்;
ஏனிந்தப் பலவீ னங்கள்?

அரசியல் அழுக்காட் டங்கள்,
அதர்மத்தின் களியாட் டங்கள்;
பிரிவினை வெள்ளோட் டங்கள்
பிற்போக்கின் தேரோட் டங்கள்!

சிறுமையின் சதிராட் டங்கள்,
சீர்கேட்டின் தொடரோட் டங்கள்,
வறுமையின் போராட் டங்கள்,
வன்முறை வெறியாட் டங்கள்!

சரிவிலே மனமாற் றங்கள்
சாதிக்குக் கொடியேற் றங்கள்;
சுரண்டலின் கொண்டாட் டங்கள்
சுதந்தரச் சூதாட் டங்கள்!





கவிஞாயிறு

தாராபாரதி

கவிதைகள்

# ஈரம் வற்றிப்போனது ஏன்?

எங்கள் தாயகம்
பாரத தேசம்;
ஏழையைத் திரும்பிப்
பாராத தேசம்!

தருமச் சக்கரத்தின்
தடம்புரண்டு போனதனால்
வறுமைச் சக்கரத்தில்
வாழ்க்கைத் தேர் உருள்கிறது!

அன்னை மணித்தேரின்
அசோகச் சக்கரத்தில்
கன்னக்கோல் தானா
கடையாணி ஆனது?


எங்கோ நடந்த சூதுகளால்
இவர்கள்பெற்றது தெருவாசம்;
இந்தத்தருமப் புத்திரர்க்கு
இந்தியநாடே வனவாசம்!

துப்புரவாக உடைமையெலாம்
துடைக்கப்பட்ட இவர்களிடம்
துடைக்காமல் இருப்பதொன்று
'துயரம்',அதனைத் துடைப்பதென்று?

எங்கள் தேசம்
பாரத தேசம்
ஏழையைத் திரும்பிப்
பாராத தேசம்!

பலியாடுகளே ஏராளம்
பாரதநாட்டில் எதனாலே?
புலியைத்தேசிய விலங்காகப்
புகுத்தினோமே அதனாலா?

சொந்தப்பிள்ளைகள் பாதிப்பேர்
சுற்றிப்பாலுக் கழும்போது
இந்தியத்தாயின் மார்பகங்கள்
ஈரம்வற்றிப் போனதுஏன்?





# இன்னொரு விடுதலை எப்போது?


ஒருமைப் பாடு குறைபாடு
உண்மை போனது சுடுகாடு!
தருமம் போனது வனவாசம்
தாயே இதுதான் உன்தேசம்!

'மாண்பு'கள் வாழும் திருநாடு
'மன்னர்'கள் கையில் திருவோடு!
வீண்புகழ் பேசும் வளநாடு
விடுதலை வந்தும் ஒளியேது?

'சிறுமை' களுக்குச் செல்லுபடி
'சில்லரை' களுக்குப் பல்லக்கு;
பெருமைக் குணங்கள் கல்லறையில்
பிரிவினைக் குரல்கள் கொடி நிழலில்!

பட்டப் பகலில் வழிப்பறிகள்
பலர்முன் னிலையில் படுகொலைகள்!
வெட்ட வெளியில் கற்பழிப்பு
வீதியின் நடுவில் மதுக்கடைகள்!

ஒழுக்கம் யாவும் தரைமட்டம்
ஊழல் களுக்குப் பரிவட்டம்!
அழுக்கு களுக்குப் பெரும்பதவி
அழுகல் சட்டம் அதற்குதவி!






அரசியல் கட்சிகள் விலைபோகும்
ஆண்டவன் கட்சிகள் நிலைமாறும்!
சரிவை நோக்கி நடைபோடும்
சாதிக் கட்சிகள் வலையாகும்!

ஏய்ப்பவ னெல்லாம் கோபுரத்தில்
ஏமாந்த தவர்கள் ஓர்புரத்தில்!
மேய்ப்பவ னெல்லாம் புலியாக
மேயும் ஆடுகள் பலியாக!

பத்துப் பேர்க்குச் சோலைவனம்
பாதிப் பேர்க்குப் பாலைவனம்!
எத்திப்பிழைக்கும் மீதிப்பேர்க்கு
இந்திய நாடு சொந்தநிலம்!

ஏனோ தானோ மனப்பான்மை
எங்கும் இதுதான் பெரும்பான்மை!
ஆணோ பெண்ணோ என்றாலும்
அவரவர் தொழிலில் பொறுப்பின்மை!

நானோ நீயோ உழைக்காமல்
நமது கூரை வழியாக
வானோ மண்ணோ வழங்குமென
வாசல் திண்ணையில் காத்திருப்போம்!






பொம்மைகள் தானா பொதுமக்கள்?
பொய்யர்கள் தானா தலைமக்கள்?
நம்மை நாமே சுரண்டுவதா?
நகமே விரலை விழுங்குவதா?

சின்னக் கோல்களின் ஏவலுக்குச்
சேவகம் செய்யும் செங்கோல்கள்!
அன்னை கால்களின் விலங்குகளை
அகற்றப் போவது யார்கைகள்?

சுதந்தர தேவி 'நாற்பதிலே'
சூதாட் டத்தில் பலியாடு;
இதந்தரும் விடியலைக் கொண்டுவர
இன்னொரு விடுதலை எப்போது?




# கொடி மரமே...

அன்னை நாட்டின் மானம் காக்கும்
அற்புதக் கொடிமரமே - நீ
ஆடைகாய்க்கிற உடைமரமாக
ஆவது எப்போது? - உன்

சின்னச் சீலை சேலைக ளாக
நீள்வது எப்போது? - அட
உன்னைச்சுற்றும்
புதல்விகள் மேனியைச்
சுற்றுவ தெப்போது?

பஞ்சா லைகளில் - எங்கள்
பாரதப் பாஞ்சாலிகள்
பருத்தி நூலுக்கு
விருத்தியுரை எழுதிவிட்டு
தரித்திருப்ப தென்னவோ
தரித்திர ஆடைதான்!

அன்னை நாட்டின் மானம் காக்கும்
அற்புதக் கொடிமரமே - நீ
ஆடை காய்க்கிற உடைமரமாக
ஆவது எப்போது?





# இரைப்பைகளிலே எழுதுங்கள்!

விதவித மான முன்னேற் றங்கள்
விண்ணைத் தொடுகிற நம்நாட்டில் - பல
வெறும்வயி றுகளோ மண்மேட்டில்!


சுதந்தர தினத்தில் காய்ச்சிய கஞ்சி
சுப்பன் வயிற்றுக்குப் போகவில்லை - அது
சுவரொட் டிக்கே போதவில்லை!

வறுமை தீர்க்கும் வளர்ச்சிப் பணியில்
வாக்குப் பெட்டியில் சோறுவரும் - தினம்
விளம்பரத் தட்டியில் வீடுவரும்!

தருமம் வளர்த்த தாய்த்திரு நாட்டில்
தருமச் சோறு ஒருகவளம் - அது
தவணை முறையில் வரும் அவலம்!

கூரையின் உச்சியில் ஏறிய கட்சிக்
கொடிமரங் களுக்குப் புத்தாடை - தந்தை
கூலியில் வாங்கிய சிற்றாடை!

கூரையின் கீழே சந்ததிகளுக்குக்
கொடியின் நிழலே மேலாடை - தெருக்
குப்பைப் புழுதி மெய்யாடை!






'வந்தது விடுதலை' என்பது பாதி
வயிறு களுக்குத் தெரியாது - அதன்
வாரிசு களுக்கும் புரியாது!

இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டை
இதயங் களிலே எழுதாதீர் - ஏழை
இரைப்பை களிலே எழுதுங்கள்!

உரிமைப் பாட்டைப் பசியாய்ப் பாடும்
உணவுக் குழாயை நிரப்புங்கள் - அது
ஒருமைப்பாட்டை வளர்க்கச் சொல்லி
உதிரக் குழாயை எழுப்பிவிடும் -பின்பு

தெருவோ ரங்கள் எழுந்து நின்று
தேசிய கீதம் பாடிவரும் - அன்று
'ஒருநா டெங்கள் திருநா' டென்று
ஒவ்வொரு இதயமும் கூடிவரும்!





# தேசப்படத்தில் கறை


கூரையில் கோத்திரங்கள் - நடுக்
கூடத்தில் சாத்திரங்கள்
சேரிகள் ஊர்ப்புறத்தில் - வெறும்
சேர்க்கைகள் காகிதத்தில்!

மெத்தப் படித்துமென்ன? - பெரும்
மேதைகளா கியென்ன?
எத்தனை சாதிச்சனம்? - இன்னும்
ஏனிந்த சண்டித்தனம்?

நால்வகைத் தர்மங்களா? - நாடி
நரம்பிலும் வர்ணங்களா?
கால்நடைச் சந்தைகளா? - அதைக்
காத்திடச் சங்கங்களா?

மேல்வகை வாய்க்கணக்கு - தினம்
மிதிபடும் கீழ்க்கணக்கு
நால்வகைப் பொய்க்கணக்கு - தப்பாய்
நம்மவர் மனக்கணக்கு!

கருவில் விழுந்தவிதை - இது
கல்லறை போகும்வரை
தெருவில் வளர்ந்தகுறை - நம்
தேசப் படத்தில் கறை!



மங்கலத் தாலிவரும் - அதன்
மஞ்சளில் சாதிநிறம்!
தங்கிய தாயின்மடி - அங்கும்
தனித்தனி சாதிக்கொடி!


தொட்டிலில் பிரிவினைகள் - நம்
தொழுகைக்குப் பலநிறங்கள்
பட்டியில் குலச்சிறைகள்
பள்ளிப் படிப்பிலும் பலமுகங்கள்!

சன்னதித் தீர்த்தங்களும் - இங்கு
சாதியை வளர்க்குமெனில் - அவை
புண்ணிய தீர்த்தமல்ல - வெறும்
புல்லிய சாக்கடைகள்!

கீழ்த்திசை வெளுக்கவில்லை - சாதிக்
கீழ்மையை விலக்கவில்லை
வாழ்த்திசை கேட்கவில்லை - கூட்டு
வாழ்க்கையை ஏற்கவில்லை!

யாரிங்கு தலையெடுப்பார்? - இனி
யாரிந்தக் களையெடுப்பார்?
ஊர்மனம் திறப்பதென்று? - நம்
உதிரங்கள் கலப்பதெந்நாள்?

சாதிச் சழக்குகளை - பொய்ம்மைச்
சாத்திரக் குப்பைகளை
வீதியில் தூக்கியெறி - பொது
வேள்விக்குத் தேதிகுறி!





# வேரில் பழுதா, விழுதில் பழுதா?

உரமும் திறமும் உள்ளவர் இருந்தும் - நம்
தரம் உயர்வதற்குத் தடைகள் எங்கே?

இலக்கை முழுதாய் எட்டிட வில்லையே;
இலட்சியத் தரத்தைத் தொட்டிட வில்லையே!

வேரில் பழுதா, விழுதில் பழுதா?
யாரிடம் பழுதென ஆராய்ந் திடுக!


நடைமுறை களிலா, விதிமுறை களிலா?
கடைநிலை வரைக்கும் கண்டறிந் திடுக!

அனைத்துத் தரப்பையும் தொற்றிக் கொண்டு
மெத்தனம் வந்து ஒத்திகை நடத்தும்!

ஆர்வம் இருந்தும் அதற்குக் குறுக்கே
சோர்வு வந்து சொக்கட்டான் ஆடும்!

சோர்வுகள் நமக்குப் போர்வைகள் அல்ல;
வேர்வையும் தொண்டுமே வேட்டி சட்டைகள்!

உள்ளம் எழுச்சி பெறுவதற் காகநாம்
பள்ளி யெழுச்சி பாடுதல் வேண்டும்!





பொன்முட் டையிடும் முதல்தே தியினை
எண்ணும் போதே இதயம் களிக்கும்!

வந்த ஊதியம் கணக்குப் பார்க்கையில்
சிந்திய வியர்வையைச் சிந்தனை செய்க!

மனச்சான் றுக்கு மதிப்புதந் துழைத்தால்
மனிதச் சாதி நம்மை வாழ்த்துமே!

சிக்கனம் தேவை, உழைப்பில் அல்ல;
சேமிக்க வேண்டும், வியர்வையை அல்ல!

ஆக்கப் பணியில் ஊக்க மிருந்தால்
'தேக்கம்' என்பதைத் தீர்த்து வைக்கலாம்!

உயர்த்தும் ஆர்வம் ஊற்றாய்ச் சுரந்தால்
'வியர்த்தம்' என்பதை விரைவில் நீக்கலாம்!

துறைப்பணி சிறக்கத் தொண்டு நோக்குடன்
அறப்பணிக் கும்மை அர்ப்பணித் திடுக!

முன்னிலைப் படுத்தும் முனைப்புடன் எழுக
தன்னல மற்ற நினைப்புடன் வருக!





## கன்னியாகுமரி

அன்னைத் திருநாட்டில்
ஆயிரம் வளமிருந்தும்
கன்னியா குமரியின்னும்
கன்னியாய் இருப்பதுஏன்?

இமயத்துச் சீதனத்தை
ஏந்திவந்த கங்கையன்னை
குமரிக்குக் கொண்டுபோய்க்
கொடுக்காத காரணத்தால் -

கன்னியா குமரியின்னும்,
கன்னியாய் வாழும்நிலை!
தண்ணீர் முடிச்சுபோடத்
தாய்ச்சீர் கிடைக்கவில்லை!

நேர்க்கோடு போலிங்கு
நீர்க்கோடு போட்டால்தான்
தீர்க்கமுடியா வறுமைத்
தீக்கோடு மறைந்துவிடும்!

தண்டுவடம் போலந்தத்
தண்ணீர் வடம்போட்டு
பண்டைய சிறப்போடு
பாரதத் தேரிழுப்போம்!


# ஒரு வயிற்றின் ஈவுகள்!


தோன்றிய மாந்தர்களின்
தொட்டில்களை ஒப்பிட்டால்
ஈன்ற ஒரு வயிற்றின்
ஈவுகள் நாம்; நமக்குள்ளே

உச்சங்கள் என்று
உயர்ந்தவர்கள் யாருமில்லை;
எச்சங்கள் என்று
இழிந்தவர்கள் எவருமில்லை!

'ஆதாமின்' வாரிசுகள்
அனைவருமே எனும்போது
'ஏதேன்' தோட்டம்
எல்லார்க்கும் பொதுதானே!

ஏதேனில் ஏழைக்கு
இடமில்லை எனத்தள்ளி,
'ஏதேனும் கிடைக்காதா?'
என்றேங்க விட்டதுயார்?







# எல்லைகளா வேலி?

விண்ணுக்குள் வீடுகட்டும் வித்தை கற்றும்
வேரழிக்கும் போர்முறையை நாட லாமா?
மண்ணுக்குள் தெய்வத்தின் பிறப்பை யெல்லாம்
மண்வெறியால் கொல்லுவதா மனிதப் பண்பு?

வர்க்கமுறை ஆதிக்க வெறியின் போக்கால்
வளமான சோலைகளை எரிக்கலாமா?
சொர்க்கத்தைப் படைக்கின்ற தோளின் சக்தி
சுடுகாட்டுச் சூனியத்தை ஆக்கலாமா/

என்னாடு உன்னாடு எனப்ப குத்து
இந்நாடு அந்நாடு எனப்பி ரித்து
தன்னாடு தன்மக்கள் என்னும் போக்கைத்
தள்ளிவைப்போம் மனக்கதவம் திறந்து வைப்போம்

எல்லைகளா நமக்கிங்கு வேலி? அன்பு
இதயந்தான் மானுடத்தின் காவல் வேலி!
எல்லையெலாம் சமத்துவத்தின் வாயில்; மாந்தர்
இதயமெலாம் சத்தியத்தின் கோயில் செய்வோம்!

# உதடுகளின் மோதல்


'ஒருலகம் காண்போம்'
உச்சி மாநாட்டில்
நாநுனியில் ஒப்பந்தம்
நகநுனியில் தீப்பந்தம்!


கலகம் தீர்ப்பதற்குக்
கருத்தரங்கம் கூட்டி
உலக சமாதானம்
உச்சரித்து முடிக்குமுன்பே

உதடுகள் இரண்டுக்கும்
உட்பூசல் வருகிறது;
கதவுகள் சன்னல்மேல்
கடும்போர் தொடுக்கிறது!

கரங்கள் ஒன்றென்று
கைகுலுக்கும் போதே
விரல்கள் பிரிந்து
வெவ்வேறு அணியமைக்கும்!

'அகிலம் முழுவதிலும்
அமைதியைக் காப்போம்'
முகத்தில் வாசகங்கள்,
முதுகில் ஆயுதங்கள்!







பூமிக்கும் வானுக்கும்
புதுப்பாலம் போட்டுவிட்டு
நாமிங்கே வீட்டுக்குள்
நடுநடுவே சுவர்வைத்தோம்!

இரண்டு உதடுகளும்
எதிர்எதிரே மோதினாலும்
திரண்டுவரும் ஓசை
தேன்மொழியாய் ஒலிக்கிறது!

பொதுக்கருத்து காண்பதிலே
பூசல்கள் வந்தாலும்
உதடுகளைப் போல்மோதி
ஒத்தகருத் தைக்காண்போம்!

# பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்!


நாடு விட்டு நாடு
நதிநடந்து போனதென்று
நாடு கடத்திய துண்டா
நதிகளை எவரேனும்?


வேற்று நாட்டுப் பக்கம்
வேலி தாண்டிய தென்று
காற்றினை யாரேனும்
கைது செய்ததுண்டா?

மேலூரில் பொழிந்துவிட்டு
கீழூரில் பெய்யவரும்
சூல்மேகத் தைஎல்லைச்
சுவர்கள் தடுத்ததுண்டா?

எல்லைப் புறமரங்கள்
அண்டைநாட்டு நீர்க்குடித்தால்
வில்லங்கம் செய்ததென்று
வேர்களையா வெட்டுகிறோம்?

என்திக்கு இதுவென்று
எண்ணுவதேன் என்தோழா?
என்இலக்கு பொதுவென்று
எழுச்சிகொள், எழுந்துநில்!





# நேச மனங்களை நெசவு செய்!

கிழக்கோடு கைகுலுக்கு;
மேற்கோடு புன்னகை செய்!
வடக்கோடு சேர்ந்து நட;
தெற்கோடு கூடிஉண்!

சூழ்ந்துள்ள திசையெல்லாம்
சுற்றம்தான் தழுவிக்கொள்!
ஏழ்கடல்தான் பொதுஎல்லை;
எழுதிக்கொள் இதயத்தில்!

சிக்கல்வரும் அதைச்சின்ன
விக்கல்போல் விரட்டியடி!
தொக்கிநிற்கும் பிரிவினைகள்
தும்மல்போல் துரத்தியடி!

மனிதநகம் கீறியொரு
மனிதன்இறந் தானென்று
இனி எந்த வரலாறும்
எழுதி வைக்கக் கூடாது!


பூசல்களை நீக்கிப்
போர்க்குரலுக் கோய்வுதந்து
நேசமனங் களையே
நெசவுசெய்யப் புறப்படுநீ!

## ‘பாதை ஒண்ணுதான்!’

பொறந்த நாடு பொன்னாடுன்னு
புரிஞ்சுக்கோ, நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போற பாதை ஒண்ணுதான்னு
தெரிங்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!

உருவம் வேறு உயரம் வேறு
விரல்கள் ஐந்திலே - அவை
ஒன்றுபட்டு கூடுவது
உள்ளங் கையிலே!
இந்தியாவின் வயிறுகள்தான்
எத்தனை கோடி!
இதயம்மட்டும் ஒன்று என்று
இசைத்திடும் பாடி!

பொறந்தநாடு பொன்னாடுன்னு
புரிஞ்சுக்கோ, நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போறபாதை ஒண்ணுதான்னு
தெரிஞ்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!








‘பாத்தியா’ வை ஓதும் ஒலி பள்ளிவாசலில்
‘அல்லாஹூ அக்பர்...’
பரிசுத்த வேதஒலி தேவன்கோயிலில்
‘பரமண்டலத்தில் இருக்கும்...’
ஓதுகின்ற மந்திரங்கள் ஆலயங்களில்
‘ஓம், நமச்சிவாயம் வாழ்க...’ இந்த
ஒலிகளெல்லாம் கூடுவது இதய வானிலே!

பொறந்த நாடு பொன்னாடுன்னு
புரிஞ்சுக்கோ, நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போற பாதை ஒண்ணு தான்னு
தெரிஞ்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!

ஈசனுக்கும் ஏசுவுக்கும் தனிவழிபாடு - நம்
தேசமென்ற கோயிலுக்குப் பொதுவழிபாடு!
தெய்வபக்தி செய்யும்போது தனித்தனியாக - நாங்க
தேசம்காக்கச் சேர்ந்து நிற்போம் அணியணியாக!

பொறந்த நாடு பொன்னாடுன்னு
புரிஞ்சுக்கோ, நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போற பாதை ஒண்ணுதான்னு
தெரிஞ்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!

☐ பள்ளிப் பிள்ளைகளுக்கு... ☐




# பூவும் நாரும் பூசலிட்டால்...

பொறந்த நாடு பொன்னாடுன்னு
புரிஞ்சுக்கோ - நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போற பாதை ஒண்ணு தான்னு
தெரிஞ்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!

வேர்களோடு விழுதுக் கென்றும்
பகைமையில்லையே!
விழிகள் மீது இமைகளுக்கு
வெறுப்பு இல்லையே!
பூவும் நாரும் பூசலிட்டால்
மாலை தோன்றுமா? - இதைப்
புரிந்து கொண்டால் நமக்கிடையே
பிரிவு தோன்றுமா?

ராமனோடு ராபர்ட் சேர்ந்து
ஒரே இலையிலே
ரஹீமோடு விருந்து உண்டார்
ரம்ஜான் நாளிலே!
கிருஷ்ணன் தாமஸ் காதர் மொய்தீன்
ஒன்றுகூடியே
கிறிஸ்துமஸைக் கொண்டாடுவார்
ஆடிப்பாடியே!





திசையைத் தொழும் தாவூத்தீனும்
    தீபஒளியிலே
தேன்மொழியை வாழ்த்து கின்றான்
    தீபாவளியிலே!
ஒன்றுபட்டு சீக்கியரும்
    இந்து வீட்டிலே
ஓகோவென்று களித்திருப்பார்
    ஹோலி தினத்திலே!

ஓரினமாய்ச் சேர்ந்து உண்போம்
    பொங்கல் விருந்து - தேசம்
ஒன்றுபட அன்புதானே
    நல்ல மருந்து!

பொறந்த நாடு பொன்னாடுன்னு
    புரிஞ்சுக்கோ நீயும் புரிஞ்சுக்கோ - நாம
போறபாதை ஒண்ணுதான்னு
    தெரிஞ்சுக்கோ நீயும் தெரிஞ்சுக்கோ!

□ பள்ளிப் பிள்ளைகளுக்கு... □






# பூமியின் அச்சு

மனிதா,

பூட்டிய இதய வீட்டுச் சுவரில்,
புன்னகை என்றொரு சன்னல் வை!
மூட்டிய நெருப்பு மூச்சில் எதற்கு?
முகத்தில் தென்றலை உலவச் செய்!

கதிரெழும் கிழக்கு ஒளிபுக உனது
கண்ணிமைக் கதவைத் திறந்து விடு!
புதிய அச்சில் பூமிப்பந்தை - உன்
புருவ மத்தியில் சுழல விடு!





## எங்க நாடு ஏழைச் சந்தையா?


இடுப்புக்கொரு கந்தையில்லே
குடிப்பதற்குக் கஞ்சியில்லே
இதுதானே பாதிஇந்தியா - அட
எங்கநாடு ஏழைச்சந்தையா?

குந்தஒரு குடிசையில்லே
கும்பலுக்குக் குறைச்சலில்லே
குடியிருப்பு சாலைச்சந்தியா? - எங்க
கூட்டமென்ன ஆட்டுமந்தையா?

சுதந்தரத்தை வாங்கிவிட்டு
சூட்சுமத்தைத் தெரிஞ்சுகிட்டு
சொத்துக்காக தலைச்சன்புள்ளைக - பிச்சைச்
சோத்துக்காக இளைச்சபுள்ளைக!

மந்திரிங்க, மவராசர்
தலைவருங்க பெரியசனம்
செல்வாக்கு கொஞ்சம் இல்லீங்க - அவுக
செத்தாலும் காணிநிலங்க!

அனாதையா தெருவோரம்
அலையுறமே உயிருவாழ
அங்குலமும் சொந்தமில்லீங்க - ஆனா
எங்கநாடு ரொம்பப் பெரிசுங்க!





பட்டினிதான் எங்களுக்கு
ஆயுள் தண்டனை - இந்தப்
பாழும்பசி சாகும்வரை
பெரியசோதனை!


வீதியோரம் உங்களுக்குக்
குப்பைத் தொட்டிங்க -எங்க
வெறும்வயித்துக் கதுவும்கூட
கஞ்சித்தொட்டிங்க!

பழம்பெருமை வாய்ச்சபூமி
நம்மநாடுங்க - எங்க
பசியும்கூட நாட்டைப்போல
பழசுதானுங்க!


புல்லுபூண்டு கிழங்குகூட
தீர்ந்துபோச்சுங்க - அட
பூமித்தாயி வயிறுகூட
காஞ்சிபோச்சுங்க!

மண்புழுவா பொறந்திருந்தா
மண்ணைத் திங்கலாம் - நாங்க
மனுசங்களா பொறந்துவிட்டோம்
என்ன செய்யலாம்?

சுதந்தரத்தை சோத்துப்பானை
பார்க்கவேணுமாம் - கொஞ்சம்
சுருக்காக யாராச்சும்
கூட்டி வாங்களேன்!



# சமுதாய வீதி




கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்

# சாதிக்காய்

சாதிக்காய் மருந்தாகும் சமுதா யத்தில்
'சாதி'க்காய் எட்டிக்காய் போன்ற தாகும்!
சாதிக்கா பிறந்தவர் நாம்?புதுமை தன்னைச்
சாதிக்கப் பிறந்தவர்கள்! என்ன செய்தோம்?
சாதிக்கு ஒருநீதி வழங்கு மிந்தச்
சமுதாயம் தனைமாற்ற முயன்றிடாமல்
சாதிக்கு வீதிதோறும் சங்கம் வைத்தோம்
'சங்ககாலம்' ஒருவகையில் தோற்று வித்தோம்!

புதுவழியில் சாதிகளின் கிளைபி ரித்து
பொதுவயலில் களைகளையே வளர்க்க லானோம்!
உதவிகளைத் தருகையிலே வர்ண பேதம்;
ஓட்டுகளைப் பெறுகையிலே இனத்தின் பற்று;
பதவிகளில் பங்கீட்டில் சாதி பேதம்;
பணியிடத்தில் தனியிடத்தில் பாகு பாடு:
சதவீதம் சாதிகளைப் பிரிக்கும் போது
சமதருமம் எப்படித்தான் உருவெ டுக்கும்?





# நச்சு விதைகள்

ஆதியிலே வந்ததல்ல
சாதிப் பிரிவுகள் - இந்த
அசைநிலைகள் நடுவில்வந்த
சூதுப் பிரிவுகள்!

பாதியிலே தீட்டிவைத்த
நால் வருணங்கள் - பொதுப்
பாதையிலே தூவிவிட்ட
நச்சு விதைகள்!


கருவறையில் வர்ணபேதம்
போகவில்லையே - இங்கு
கல்லறைகள் கூட ஒன்று
சேர வில்லையே!


ஆதிமகள் ஓரன்னையின்
ஈவுகள் தானே - அந்த
நீதியினை மறந்தால்நாம்
தீவுகள் தானே!

# தொடு கோடுகள்

ஆதிகுலம் அரிசனத்தைத் தொட்டால் போதும்
ஆண்களுக்கும் தீட்டுவரும் இந்த நாட்டில்
சேதியிது சிரிப்பல்ல; வயிற்றெ ரிச்சல்!
சீர்கேடு அகலாமல் தினம்பு கைச்சல்!
ஆதிக்க வெறியர்களால் தாழ்த்தப் பட்டோர்
அவலமுறும் கதையின்னும் தொடர லாமா?
தேதிக்கா காத்திருப்பார் திருந்து வோர்கள்?
தீண்டாமைத் தீயணைப்பு செய்வ தெந்நாள்?

ஏற்றத்தாழ் வில்லாமல் மனிதர் எல்லாம்
'இணை கோடாய்' வாழுவதை விரும்பா மூடர்
வேற்றுமையை விதைத்தார்கள், கோட்டுக் கப்பால
வெளியேற்றித் தீண்டாமல் விலக்கி வைத்தார்!
தோற்றத்தால் ஒன்றென்னும் திருக்கு லத்தார்
'தொடுகோடு' இல்லாத 'தனிவட் டம்'தான்!
ஏற்றங்கள் தரஅந்த வட்டத் திற்கு
இதயங்கள் தொடுகோடு போட வேண்டும்!








# நெருப்புத் திருவிழா

அடுப்புக்கு நெருப்பின்றி
அவதிப் பட்டவர்க்கு
'கொடுக்கிற தெய்வம்' நீர்
கூரைவழி தீயளித்தீர்!

தொடுத்தது வெண்மணியில்
தொடர்ந்தது விழுப்புரத்தில்;
அடுத்தது பலதிசையில்
அக்கினியின் திக்விஜயம்!

தீட்டுப் பட்டால்நீங்கள்
தீர்த்தத் தில்மூழ்குவீர்;
தீட்டுக் குலம்தொட்டால்
தீர்த்தமும் தீட்டென்பீர்!

தீட்டை அகற்றுகிற
தீர்த்தமும் தீட்டானால்
தீட்டை விலக்குதற்கு
தீக்குளிக் கப்போவீரா?




# எலும்பு மாளிகை?

கொடியவர்கள் வைத்த தீ
கூரைகளைச் சுட்டது;
குடிசைகள் சூளையாகிக்
குடும்பங்கள் வெந்தது!

பட்ட மனிதர்களின்
பச்சை உடம்பெரித்து
சுட்ட எலும்புகள்தாம்
சூளைகளில் மிஞ்சியவை!

எந்தக் கட்டடத்தை
எழுப்புதற்குத் தேவையென்று
இந்த எலும்புகளை
இங்கே குவித்தீர்கள்?

சந்ததமும் பேசிவந்த
சமதர்ம மாளிகைக்கு
அந்த எலும்புகள் தாம்
அஸ்திவாரம் ஆகிறதோ?





# பூமி முட்டை பொரித்த குஞ்சுகள்

தேம்ஸ் நதியைத்
தீண்டிய காற்று
காங்கோ நதியில்
தீட்டுப் படுமா?

கறுப்பு வெளுப்பில்
கண்ணா மூச்சா?
கறுப்பு வெறுப்பா?
கவனி உன்மேனி!

வெள்ளைத் தோலில் - பார்
கறுப்பு மச்சம்;
வெட்டி எறியேன்
ஏனடா அச்சம்?


வெளித்தோல் நிறங்களில்
வேறு பட்டாலும்
வெள்ளை எலும்பே
எல்லா உடம்பிலும்!


வெள்ளை உன்னுடல்;
வெள்ளையா விழும்நிழல்?
விலக்கிவைப் பாயா
உனதுநிழலை? இயலுமா?

நீங்காத உன்னிழலும்
கறுப்புத்தானே?
நிழலைச் சலவை
செய்ய முடியுமா?

புவியில் வாழும்
மனிதப் பிஞ்சுகள்
பூமி முட்டை
பொரித்த குஞ்சுகள்!

பூகோ ளத்தின்
எல்லைக் கோடுகள்
பூக்கோ லத்தின்
வெள்ளைக் கோடுகள்!







# சம(ய)க் குறிகள்


நெறிகள் ஒன்றென்று
        நிகழ்த்தும் சமயங்கள்
குறிகள் வெவ்வேறாய்க்
        கோடிட்டுக் காட்டிவிடும்!

நெற்றியில் வெளிப்பூசல்;
        நித்தமும் உட்பூசல்!
உற்ற மதக்குறிகள்
        ஒவ்வொன்றும் தினப்பூசல்!

சமயக் குறிகளுக்குச்
        சமக்குறியே தெரியாதா?
சமயத் துறைகளுக்குள்
        சச்சரவே தீராதா?

காசைத் தந்தால் கடவுளுடன்
        கலந்துரை யாடல் நடக்கிறது!
ஆசைப் பட்ட பொருள்யாவும்
        ஆண்டவன் பெயரில் கிடைக்கிறது!

பகல் வேடங்கள் உள்ளவரை
        பக்தி விளம்பரப் பொருளாகும்;
நகல்கள் அப்பால் நகர்ந்தால்தான்
        நம்பிக் கைகள் உருவாகும்!




# அரசியல் வியாதிகள்

அந்தந்தக் கட்சியில்
வந்திங்கு பரவிடும்
ஆயிரம் தொற்று நோய்கள்;
அரசியல் வாதிசிலர்
அரசியலில் வியாதிகள்
ஆனதால் வந்த வினைகள்!
சொந்தத்தில் ஒரு கட்சி
தொடங்குவார்; பின்னதனை
சோற்றுக்கு விற்று விடுவார்;
சுகமான பதவிகளும்
வெகுமானம் பரிசுகளும்
சுயமானம் இழந்து பெறுவார்!

எந்தெந்தக் கட்சியில்
எத்தனைநாட் களிவர்
இருந்தார்கள் என்ற கணக்கு,
எவராலும் அறிதற்கு
ஒருநாளும் முடியாது
ஏனந்த வம்பு நமக்கு?

சிந்திக்க மறுத்திவர்
செல்வாக்கு தேடியே
சேரிடம் அறிந்து சேர்வார்;
சீரான முன்னேற்றம்
நேராமல் போனதிவர்
செய்கையென அறிக மனமே!



# அரசியல் அரிச்சுவடி

அரசியல் அரிச்சுவடி
அதுபுதிய ரகமாகும்.

'ஊரை ஏய்' - என்பதுதான்
உயிரெழுத்து;

'உடம்பெல்லாம் பொய்'-அதுதான்
மெய்யெழுத்து;

'ஊழலும் இலஞ்சமும்'
உயிர்மெய் யெழுத்தென்றால்,

'அடிஉதை' என்பதுதான்
ஆய்த எழுத்தாகிறது!

அகராதி நூறுபவுன் வாங்கினால், அரிச்சுவடி
ஆறுபவுன் வாங்கிடாதா?
அமைச்சருக் கொருகோடி; அதிகாரிக் கோர்லட்சம்
அடியாட்கு ஓராயிரம்!
அரசாங்கப் படிக்கட்டு 'படி -கட்டு' எனும்போது
அதைச் செய்தல் மக்கள் 'கடன்!'

# சுயநலப் பாடங்கள்


எங்கள் வீட்டுக் கூடங்கள் -அதில்
எங்கும் சுயநலப் பாடங்கள்;
எங்கள் ரத்த நாளங்கள் -அதில்
எத்தனை குப்பைக் கூளங்கள்!

அடுத்த வேளைச் சோற்றுக்கு
அமைச்சர் பின்னால் சுற்றியவன்
அடுக்கு மாடி உணவகம்கட்டி
ஆகாயத் தைத் தொடுகின்றான்!

மாற்றுக் கட்டு வேட்டியின்றி
சோற்றுக் கட்சி தொடங்கியவன் -
நேற்று தொட்டு நவீனமயமாய்
நெசவா லைகளைத் திறக்கின்றான்!

கருங்கா லிக்குக் கூடஇங்கே
கௌரவ மான நாற்காலி!
முருங்கை மரத்து முக்காலிக்கும்
முண்டி யடிக்கிறது கைக்கூலி!

எங்கும் எதிலும் சுருட்டல்கள்;
எல்லாம் சில்லரைத் திரட்டல்கள்!
பங்குச் சந்தைக் கொள்ளைகளில்
பாரதம் கூறு போடுகிறார்!





# கருப்பை கூட நாணமுறும்!


தூய்மையும் ஒழுக்கமும் அரசியல் வாதிகள்
தொடவிரும் பாத சங்கதிகள் - அவர்
தொடர்பில் லாத சந்ததிகள்!

தாய்மண் புகட்டிய அறங்களை யெல்லாம்
தாய்ப்பா லோடு மறந்தவர்கள் - பலர்
தன்மா னத்தைத் துறந்தவர்கள்!

'வாய்மை வெல்லும்' வாசகம் வீட்டு
வாசலில் மட்டும் இருக்கிறது - இவர்
வாயில் நுழைய மறுக்கிறது!

வாய்மை வளர்த்த அரிச்சந்திரனின்
வாரிசு என்கிற முக்காடு - இவர்
வாழ்வில் பொய்யே முதலீடு!

பொய்களை உடுத்திய நாக்குக ளுக்குப்
போசனம் நிறையக் கிடைக்கிறது -அதைப்
பொதுசனம் தேடிக் கொடுக்கிறது!






மெய்களை விலக்கிய பாதங் களுக்கு
மேல்வழி கூட திறக்கிறது -அட
மெய்யே பணிவிடை செய்கிறது!

உமியைக் கூட விதையெனச் சொல்லி
ஊரை நம்பச் செய்பவர்கள் -அதை
உலையில் பொங்கித் தருபவர்கள்!

சமயம் தேடிப் பதவியை நாடிச்
சந்ததி களையும் விற்பவர்கள் - பல
சாகசக் கலைகள் கற்றவர்கள்!

இரைப்பை நிரப்பவும் உறுப்பை வளர்க்கவும்
இதயம் எல்லை தாண்டிவிடும் -இவர்
எலும்பும் தசையும் ஊழல் மயம்!

கருப்பை வளர்க்கும் இவரைச் சுமந்த
'கருப்பை' கூட நாணமுறும் -அதை
நெருப்பில் தீய்க்கக் கோபம் வரும்!





# சுவரொட்டிகள்

மனசாட்சியை விற்கும்
மக்களின் தலைவர்கள்
கனவான் அச்சகத்தின்
கையடக்கப் பதிப்புகள்!


தேர்களை உடைத்துத்
தீக்குச்சி செய்பவர்கள்;
வேர்களைப் பறித்து
விறகாக் குபவர்கள்!


பாரத மாளிகையைப்
பழுதுபார்க்க இயலாமல்
சுவர்களின் விரிசல்களைச்
சுவரொட்டியால் மறைப்பவர்கள்!

# கள்ளழகர் சேவை...

தலைவர்கள் மணிமுள்போல்
        தனிச்சுற்று போய்வருவார்
நிலையில்லாத் தொண்டர்களோ
        நிமிடமுள் போல்சுழல்வார்!
அலைவீச்சுக் கேற்றபடி
        அந்தந்தக் கட்சிசெல்வார்
வலைவீச்சுக் குகந்தபடி
        வாய்ப்பான பதவிகொள்வார்!

கொள்முதலுக் குரியபடி
        கொள்கைகளை மாற்றிடுவார்;
தள்ளுபடி விகிதத்தில்
        தரகர்களாய் மாறிடுவார்!
உள்ளபடி நாட்டையிவர்
        உருப்படுத்த நினைப்பதில்லை;
கள்ளழகர் இவர்சேவை,
        காசுக்கே பொதுச்சேவை!







# கட்சி யாத்திரை


வெள்ளிக் காசுகளில்
விலாசம் மாறுகின்ற
புள்ளிகள் நடத்துவதோ
புதுக்கட்சி யாத்திரைகள்!

விக்கிர மாதித்திய
வித்தைகளைப் பயின்றவர்கள்
தக்க சமயத்தில்
தான்கூடு பாய்கின்றார்!

காவலில் இவர்களைக்
கட்டிவைத் திருந்தாலும்
தாவலை மட்டும்நாம்
தடுக்கவே முடியாது!

காலையில் ஒரு கட்சி
கடும்பகலில் மறுகட்சி,
மாலையில் தனிக்கட்சி
மறுபடியும் தாய்க்கட்சி!

இரவில் இவர்கட்சி
இவருக்கே மறந்துவிடும்
வரும்கனவில் இவர்காணும்
வானவில்லில் நூறுநிறம்!






சற்றும் கூச்சமின்றி
சர்வ கட்சிகட்கும்
சுற்றுலா போய்வருவார்
சுகமெங்கோ, அங்கிருப்பார்!

தண்டல் செய்வதற்குத்
தன்னிருகை போதாமல்
பன்னிருகை வேலவனைப்
பார்த்தேங்கிப் புலம்புகிறார்!

ஆதிசேடன் அடியவரோ
'ஆயிரம் கைகளி'லே
பாதியைப் பங்குகேட்டுப்
படையல்கள் போடுகின்றார்!

தடையின்றி வரும்பொருளைத்
தண்டல்செய்ய இவர்களுக்கு
உடலெங்கும் கைகள்!
உடையெங்கும் பைகள்!

அரசியல் வாதிசிலரின்
அலங்கார மாளிகைகள்
பரிசிலாய் நாம்கொடுத்த
'பைசாக் கோபுரங்கள்!'





# இவன் ஒரு கட்சி,
# நிழல் ஒரு கட்சி!


அம்மா, தாயே! பாரத தேவி!
அரசியல் என்பது மணியாரம்!
அம்மம் மாஉன் பிள்ளைகள் கையில்
அதில்தான் எத்தனை அலங்கோலம்!

சும்மா இருப்பவ னெல்லாம் நாட்டில்
சொந்தக் கட்சி தொடங்குகிறான்;
சிம்மா சனத்தில் ஏறுவ தற்குச்
சிரசா சனங்கள் பழகுகிறான்!

விற்பதற் கென்றே கட்சியைத் தொடங்கும்
வேடிக்கை இங்கு வாடிக்கை;
முற்பகல் பிற்பகல் கட்சித் தாவல்கள்
முடிவில் லாத கேளிக்கை!

நிற்கும் இவனொரு கட்சிக்குள்; இவன்
நிழலோ வேறொரு கட்சிக்குள்!
கற்கும் பாடம் தினசரி மாறும்
காசுக் கேற்ற விகிதத்தில்!

மகன் ஒரு கட்சி; தாய் ஒரு கட்சி
மனைவி ஆளுங் கட்சியிலே!
முகங்கள் மாறும் அரசியல் குடும்பம்
முக்கோ ணத்தின் உச்சியிலே!






மூன்று 'காலிகள்' சேர்ந்தால் போதும்
முளைக்கும் புதிதாய் ஒரு கட்சி;
தான்தோன் றிக்குத் தலைவர் பதவி;
தண்டல்கள் செயலர், பொருளாளர்!

முக்கா லிகளோ ஊரை ஏய்த்து
நாற்கா லிக்கு மாறுகையில்
உட்கா ருவதில் சிக்கல் வந்து
ஒருவன் கட்சியை உடைக்கின்றான்!

கட்சித் தாவல் சட்டம் இவனைக்
கைது செய்ய முடியாதாம்!
கட்சியில் பிரிந்தவன் மூவர் கட்சிக்
கணக்கில் மூன்றில் ஒருபங்காம்!

பொருட்பால் இவர்க்கு மனப்பாடம்; பெரும்
பொய்கள் இவர்க்குக் குருபீடம்!
புரட்டல் அரசியல் கலையாகும்; வெறும்
போலிகள், கொள்ளையர் கூடாரம்!

ஆத்திகன் தூக்கும் காவடி போல
அரசியல் காவடி இருக்கிறது;
நாத்திகன் கூடக் காவடி தூக்கும்
நாடகம் இங்கே நடக்கிறது!





# முடிவடையாத இதிகாசங்கள்

இந்திய நாட்டின்
இன்றைய குடிமகன்
இதிகாசங்களைத் தொடர்கின்றான்!

சந்ததி போற்றும்
இலக்கியங்களிலே
சாதகப் பட்டதைப் படைக்கின்றான்!

உவமானத்துடன்
இராமாயணக் கதை
உருக்கமாகக் கேட்ட பின்பு

அவனவன் வீட்டுத்
தோட்டங்களிலே
அசோக வனங்கள் அமைக்கின்றான்!

பாஞ்சாலிக்கு
ஆடைவழங்கிய
பரந்தா மன்பேர் பாடிவிட்டு

நோஞ்சான் கூட
துச்சா தனனாய்
நூறு பாஞ்சாலி துகிலுரிவான்!

உபரிச் சதையைக்
குறைப்பவ னெல்லாம்
'சிபி'யெனத் தன்னைச் சொல்கின்றான்!

காவல் கைதியின்
கற்பைக் கெடுத்தவன்
கோவலன் என்று கூறுகின்றான்!


தீயில் விரலைச்
சுட்டுக் கொண்டவன்
'தியாகி' பட்டம் தேடுகின்றான்!

உள்ளங் கைகளில்
ஆயுதம் மறைப்பவன்
வள்ளுவன் தந்தது என்கின்றான்!

துஷ்யந்த னாகத்
துடிக்கும் சிலரால்
சாகுந் தலைகளின் கதைதொடரும் - அட
சாகும் தலைகளின் கதைதொடரும்!

முடிவடையாத
இதிகா சங்கள்,
முற்றுப் பெறாத இலக்கியங்கள்!

இந்திய நாட்டின்
இன்றைய குடிமகன்
இதிகா சங்களைத் தொடர்கின்றான்!



# புனை வேடங்கள்!

காலை நேரம்
சாதி ஒழிப்புக்
கருத்தரங் குகளில் முழங்குகிறார் -இவர்
மாலை நேரம்
சாதிச் சங்க
மாநா டுகளைத் தொடங்குகிறார்!


தாலிக் கயிற்றில்
சாதிமஞ்சளைத்
தடவித் தருவார் மகளுக்கு - தம்
தானைத் தொண்டனின்
கலப்பு மணத்தில்
தலைமை ஏற்பார் புகழுக்கு!


வீதி முனையில்
'ஒன்றே சாதி
வேற்றுமை இல்லை' என்கின்றார் - தம்
வேட்பு மனுவைச்
சாதிப் பெயரில்
விண்ணப் பித்துக் கொள்கின்றார்!

சாதிச் சண்டை
சமயக் கலகச்
சம்பவங் களுக்குத் துணைபோவார் -அவை
மோதும் போது
வழியும் குருதியை
முகந்து குடிக்கும் நரியாவார்!


உப்புக் கடலின்
வயிற்றுக் குள்ளே
நதியின் உடம்பைத் தேடுகிறார் - அட
சிப்பியின் வயிற்று
முத்திலும் சாதிச்
சித்திரம் தீட்டிக் காட்டுகிறார்!

சந்ததி வளர்க்கும்
கருப்பை என்பது
சாதிப் பாம்புப் புற்றல்ல - இனி
எந்த மனிதனும்
சாதிப் பந்தியின்
இலையில் அமர்வது சரியல்ல!





# இளைய பாரதம்





# வேலைகளல்ல,
# வேள்விகளே!


'வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!'
கருங்கல் பாறையும் நொறுங்கிவிழும் - உன்
கைகளில் பூமி சுழன்றுவரும்!

தோள்கள் உனது தொழிற்சாலை - நீ
தொடுமிட மெல்லாம் மலர்ச் சோலை!
தோல்விகள் ஏதும் உனக்கில்லை - இனி
தொடுவா னம்தான் உன்எல்லை!

விழிவிழி உன்விழி நெருப்புவிழி -உன்
விழிமுன் சூரியன் சின்னப்பொறி!
எழுஎழு தோழா! உன்எழுச்சி -இனி
இயற்கை மடியில் பெரும்புரட்சி!

விரக்தி யென்னும் சிலந்தி வலைக்குள்
வேங்கைப் புலிநீ தூங்குவதா? -நீ
இருட்டைக் கிழிக்கும் வெளிச்சக் கீற்று
எங்கே கிழக்கெனத் தேடுவதா?

மூலையில் கிடக்கும் வாலிபனே - தினம்
முதுகில் வேலையைத் தேடுகிறாய்!
பாலை வனம்தான் வாழ்க்கையென - வெறும்
பல்லவி எதற்குப் பாடுகிறாய்?






நீட்டிப் படுத்தால் உலக உருண்டையில்
நீதான் பூமத் தியரேகை - நீ
போட்டுக் கொடுக்கும் நிகழ்ச்சி நிரல்தான்
பூமி வலம்வரும் புதுப்பாதை!

கட்டை விரலை விடவும் இமயம்
குட்டை என்பதை எடுத்துச்சொல் - உன்
சுட்டு விரலின் நகமாய் வானம்
சுருங்கியதென்று முழங்கிச் செல்!

கால்நகம் கீறிய கோடுகள் வழியே
கங்கையும் சிந்துவும் ஓடிவரும் -உன்
தோள்க ளிரண்டும் தெற்கு வடக்காய்த்
துருவங் களுக்குப் பாலமிடும்!

மண்புழு வல்ல மானிடனே - உன்
மாவலி காட்டு வானிடமே!
விண்ணிலும் மண்ணிலும் விளைவுகளே - இவை
வேலைக ளல்ல; வேள்விகளே!






# பூமியை உயரமாக்கு!

இளைஞனே-

வழிவிடு; புதிய காற்றை
        வரவிடு; அழுக்கு நெஞ்சைக்
கழுவிடு; பகைநட் பாக்கிக்
        கைதொடு! பொதுவில் வாழப்
பழகிடு; பொய்ம்மை யாவும்
        பலியிடு! அன்னை தேசம்
தொழுதிடு; அமைதி வாழ்வைத்
        தொடங்கிடு, தோழா இன்றே!

தோழனே-

ஏசலை நிறுத்து; மாற்றார்
        ஏற்றத்தை முன்னிறுத்து!
நேசமே முன்னெடுத்து
        நெஞ்சிலே நிலை நிறுத்து!
வாசலை அகல மாக்கு;
        வார்த்தையை இனிமை யாக்கு!
பூசலைப் புழுதி யாக்கு;
        பூமியை உயரமாக்கு!





# காற்றுக்குப் புதிய திசை காட்டு...

இளைஞனே!


வீட்டுக்கு உயிர்வேலி,
வீதிக்கு விளக்குத்தூண்;
நாட்டுக்குக் கோட்டைமதில்,
நடமாடும் கொடிமரம்நீ!

வானுக்கும் பூமிக்கும்
வைக்கப் பட்டிருக்கும்
ஏணி -உன்மேனி,
இளைப்பறியா நீதேனீ!

திசைகாட்டத் தெரியாத
திண்ணைப் பேச்சுகளை
அசைபோட்டுக் கொண்டிருக்கும்
அஃறிணையாய் மாறாதே!

உன்னுடைய தேகத்தின்
உறுப்புகளை வளர்க்கும்நீ
உன்னுடைய தேசத்தின்
உயர்வுக்குச் செய்ததென்ன?

சோற்றுக்கா உன்னுடம்பு?
சோம்பலுக்கா நீவிருந்து?
காற்றுக்குப் புதியதிசை
காட்டலாம் வாஎழுந்து!






வீதிக்கு வீதியிங்கே
வேர்விட்டுக் கிளைபரப்பும்
சாதிக் கொடிமரத்தைச்
சாய்க்கவரும் கோடரிநீ!

தேசியக் கொடிவிற்றுத்
தின்பண்டம் திரட்டுகிற
மோசடியை முறியடிக்க
முழங்கிவா இளம்புயலே!

புல்லின் நுனிமீதும்
பூமிப்பந்தை நிறுத்தும்
வல்லமை படைத்தவன்நீ
வரிப்புலியே வாவெளியே!

புதுவேகத் தோடு
புறப்படு!உன் உள்ளங்கை
விதிரேகை என்பதை
விஞ்ஞான ரேகையாக்கு!

செவ்வாயில் செங்கரும்பு
சீக்கிரமாய் முளைக்கச்செய்!
எவ்வாய்க்கும் நிலாச்சோறு
இன்றைக்கே கிடைக்கச் செய்!






உன்எடைக்கு முன்னே
உமிஎடைதான் இமயமலை;
உன்நடைதான் இன்றுமுதல்
உலகநடை; எழுந்துநட!

உன்னுயரம் தெரியாமல்
உணர்வின்றிக் கிடப்பதனால்
மண்ணுயரம் அதுகூட
மலையுயரமாய்த் தெரியும்!

என்னுயரம் இதுவென்று
எழுந்துநில்! அப்போது
விண்ணுயரம் கூடஉன்
விலாவுக்குக் கீழேதான்!

தசைகளுக்குக் கொஞ்சம்
தன்மானப் பயிற்சிகொடு
திசைகளைத் திருத்திநீ
தேசத்தைப் புதிதாக்கு!






# அச்சம் தவிர்

மழைவெள்ளம்
வரும் வரையில்
மண்குதிர்கள் தம்மை
மலையென்று
நினைத்திருக்கும்!

கதிர்களை அடித்துக்
கைது செய்து
பதர்கள் கூடிப்
பஞ்சாயத்து பேசும்!

குதிர்களாய் மக்கள்
குந்தியிருக்கும் வரை
உதிரிகளுக்குத் தான்
உச்சக்கட்டம்! இந்த

ஓடுகாலிகள்
கருங்காலிகள்;
இவர்களுக்குத் தேவை
நாற்காலிகள்!






தும்மலுக்குப் பிறர்
சம்மதம் கேட்டும்
விக்கலுக்கு அவரிடம்
விண்ணப்பம் போட்டும்

விம்மலே வாழ்க்கையென
வெம்பிக் கிடப்பவனே

அச்சம் தவிர் -
ஆண்மை தவறேல்! - இது
துச்சம் - தூ வெனத்
துணிந்து நில்!

உச்சம் நீதான் - புகழின்
மிச்சம் நீதான்!
அதனால் -
'அச்சம் தவிர்!'





# நெற்றியை வானமாக்கு!


நெடிதாக விரிந்த வானம்
‘நிலத்திற்கு மழை கொடுக்க
முடியாது’ எனம றுத்தால்
முற்றும் நீகலங்க வேண்டாம்!

வெறும்பரப் பான வானம்
விலகிடும் போதில் உந்தன்
சுறுசுறுப் பான நெற்றி
சுருங்கிய வான மாகும்!

பொய்க்கின்ற அந்த வானம்
போகட்டும்; இனிஎன் றைக்கும்
பொய்க்காத உனது நெற்றி
பூமிக்குச் சின்ன வானம்!

எழுகின்ற வியர்வை வெள்ளம்
இமயத்தை மூழ்க டிக்கும்
வழிகின்ற துளியில் கொஞ்சம்
வானமும் குடிக்கக் கேட்கும்!

கொடுதோழா; உன் உழைப்பைக்
கொடுத்தாலே நிலம்சி வக்கும்!
நெடுவானம் வறண்டா லும்உன்
நெற்றியில் மழைசு ரக்கும்!






வெப்பத்தால் பிளந்த பூமி
வெடிப்பையே கரைக ளாக்கி
உப்புநீர் வியர்வை ஆறு
ஓடியே வெடிப்பை மூடும்!

நெற்றியின் நதிகள் ஓடி
நிலமங்கை தாகம் தீர்ப்பாள்;
வெற்றியின் படியில் பூமி
விளைச்சலைக் கொண்டு சேர்ப்பாள்!

பூமியின் வயிற்றில் தண்ணீர்ப்
புதையல்கள் உண்டு தம்பி!
பூமியைக் கடைந்தால் போதும்
புதியதோர் அமுதம் ஊறும்!

களர்நிலம் கூடத் தோண்டு;
கடப்பாரை ஆக்கு கையை!
கிளறுவாய் நிலம்மு ழுக்கக்
கிணறுவாய் திறக்கச் செய்வாய்!

மண்ணடி நீரைப் பாய்ச்ச
வழிவிடும் கிணறு கூட
'மண்ணுக்கு மதகு' தானே!
மனிதாஉன் முயற்சி தானே!






கீறிய புதுக்கி ணற்றில்
கீழூற்று சுரக்கும் முன்பே
ஊறிய நெற்றி நீரை
ஊற்றுநீ முதல்ஊற் றாக!

ஊற்றுவாய்; அதனை வாங்கி
உயிர்பெற்றுச் சிலிர்த்த பூமி
ஊற்றுவாய் திறக்கும்; இந்த
உலகுவாய்ப் பசியைப் போக்கும்!

கடுகாக உன்னை எண்ணிக்
கைகொட்டிச் சிரித்த வானம்
அடிதேடி உன்னை வாழ்த்த
ஆரத்தித் தட்டாய் மாறும்!

ஆமடா! உந்தன் நெற்றி
ஆகாயம் ஆன தற்குப்
பூமித்தாய் தன்னைச் சின்னப்
பொட்டாக்கி இட்டு வைப்பாள்!





# நீ ஒரு நெருப்புப் பிழம்பு!

பின்னுக்குப் போகும் நாட்டின்
பிழைகளைத் திருத்தம் செய்ய
'என்னாலா முடியும்?' என்று
ஏனின்னும் தயங்கு கின்றாய்?

தன்னாலே முடியும் என்ற
தத்துவம் பேச வேண்டாம்!
உன்னால்தான் முடியும் தோழா,
உரிமைக் குரல் எழுப்பு!

முன்னாலே வந்து நீநில்
முற்போக்கு முழக்கத்தைச் சொல்
பின்னாலே இளைஞர் கூட்டம்
பேரணி திரளும் வா,வா!

நீ ஒரு நெருப்புப் பிழம்பு;
நெஞ்சை நிமிர்த்திக் கிளம்பு!

# ஈர வயிறுகள்


எழுக இளைஞனே,
இனிய தமிழனே!


புதிய விடியலில்
பூமி சுழலுமே;
உதய வேளையில்
உயிர்கள் மகிழுமே!

மலர்க மலர்கஉன்
மனித உறவுகள்;
உலகின் கூரையில்
உனது சிறகுகள்!

வேலி யில்லைஉன்
வியர்வை ஊற்றுதான்
பாலை வனங்களில்
பாயும் நதிகளே!

விரைக விரைக உன்
விரல்கள் உழுபடை;
தரிசு நிலங்களில்
தங்க அறுவடை!








பங்கு தரட்டுமே
பாதி முதுகுகள்;
எங்கு நோக்கினும்
ஈர வயிறுகள்!

எழுக இளைஞனே,
இனிய தமிழனே!

ஈழத் தீவிலே
ஏறும் புலிக்கொடி;
இழந்த தீவுகள்
மீளும் மறுபடி!

தூக்குக் கயிறுகள்
போகி நெருப்பினில்
தீக்குளிக்கும் நாள்
தித்திக் கின்றநாள்!

கட்டை விரல்நகம்
அளவில் கணிப்பொறி
திட்டமிட்டுச் செய்
தெற்குத் தமிழனே!





பஞ்சம் நீக்கிட
பசியைப் போக்கிட
கஞ்சி காய்ச்சுமே
கணினி எந்திரம்!


ஆயு தங்களை
அழிக்கும் ஆயுதம்
நீயறிந் தெடு
நிலைக்கும் மனிதமே!

இலகும் அறிவியல்
இணைய வலையினில்
உலகம் முற்றுமே
உனது சுற்றமே!

எட்டுத் திசைகளும்
இணைந்து நட்புடன்
பொட்டல் வெளியிலும்
பொங்கல் வைக்குமே!

புதிய விடியலில்
பூமி சுழலுமே
உதய வேளையில்
உயிர்கள் மகிழுமே!

எழுக இளைஞனே,
இனிய தமிழனே!





# நம் கைகள் வானை மோதும்!

தம்பீ,கை குலுக்க லாம்வா -நம்
தாய்நாட்டைக் காக்க லாம்வா!

தேரிங்கே நகர்ந்தும் என்ன?
திருவிழா நடந்தும் என்ன?
பாரிங்கே பாதி தேசம்
பகலையே பார்க்க வில்லை!


வேரிங்கே நோயில் வாட
விழுதுக்கா பழுது பார்த்தல்?
யாரிங்கே நாட்டைக் காக்க?
நானென்று எழுந்து வா,நீ!


உன்னால்தான் முடியும் தம்பி;
ஊக்கமாய் எழு; முழங்கு!
பின்னாலே இளைஞர் கூட்டம்
பேரணி திரட்டிக் காட்டும்!

தும்பிகள் சேனை யாகத்
துணிவுடன் எழுந்தால் போதும்;
தும்பிக்கை யானை கூடத்
தோற்றுப் பின்வாங்கும் இங்கே!

நரம்பிலே நாணைக் கட்டு,
நம்பிக்கை முரசு கொட்டு;
அரும்புகள் முன்னே எஃகு
அம்புகள் தூள்தூ ளாகும்!

நம்பிக்கை வந்தால் போதும்
நகைகள் வானை மோதும்!
தம்பீ,கை குலுக்க லாம்வா -நம்
தாய்நாட்டைக் காக்கலாம் வா!







# திண்ணையை இடித்துத் தெருவாக்கு


உட்கார் நண்பா, நலந்தானா? - நீ
ஒதுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டு விரல் நீ சுருங்குவதா? - உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?

'புல்லாய்ப் பிறந்தேன் நானெ'ன்று - நீ
புலம்ப வேண்டாம்; நெல்கூட
புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் - அது
பூமியின் பசியைப் போக்கவில்லை?

'கடலில் நான்ஒரு துளி'யென்று - நீ
கரைந்து போவதில் பயனென்ன?
'கடலில் நான்ஒரு முத்தெ'ன்று - நீ
காட்டு; உந்தன் தலைதூக்கு!

வந்தது யாருக்கும் தெரியாது - நீ
வாழ்ந்ததை உலகம் அறியாது;
சந்ததி கூட மறந்துவிடும் - உன்
சரித்திரம் யாருக்கு நினைவுவரும்?

உணவு, ஆடை, வீடென்று -உன்
உடைமையைப் பெருக்கிக் கொள்ளாதே!
மனைவி, மக்கள், உறவென்று - உன்
மனத்தின் எல்லையைச் சுருக்காதே!






திண்ணை தானா உன்தேசம்? - உன்
தெருவொன் றேயா உன்னுலகம்?
திண்ணையை இடித்துத் தெருவாக்கு -உன்
தெருவை மேலும் விரிவாக்கு

எத்தனை உயரம் இமயமலை! - அதில்
இன்னொரு சிகரம் உனதுதலை!
எத்தனை ஞானியர் பிறந்ததரை - நீ
இவர்களை விஞ்சிட என்னதடை?

பூமிப் பந்து என்னவிலை? - உன்
புகழைத் தந்து வாங்கும்விலை!
நாமிப் பொழுதே புறப்படுவோம் - வா
நல்லதை எண்ணிச் செயல்படுவோம்!






# விதிரேகையல்ல...
# விஞ்ஞான ரேகை!

புது வேகத்தோடு, நீ
புறப்படு -உன் உள்ளங்கை
விதிரேகை என்பதை
விஞ்ஞான ரேகையாக்கு!

அறிவியல் தமிழனாய் நீ
அவதாரம் எடுத்தால்தான்
பொறியியல் உலகம்உன்
புலமையைப் பாராட்டும்!

கலியுகம் அல்லஇது
கணியுகம்! இணைய
வலைப்படுத்து; ஆற்றல்
வசப்படுத்து, வகுப்பெடுத்து!

விளைந்த நெல்லில்
விதைநெல்லாய் நீ இருப்பாய்;
களைந்த நெல்லில்
கருக்காயாய் இருக்காதே!






தோத்திரங்க ளாலேயே
தோற்றது போதும்!
சாத்திரங் களாலேநீ
சரிந்து கிடந்ததுபோதும்!

அச்சமா? அதை உனது
அகராதி உதறிவிடும்! நீ
எச்சிலைத் துப்பினால்
எரிமலையே அணைந்துவிடும்!

பிற்போக்குச் சக்திகளின்
பிடரியைப் பிடித்துலுக்கி
முற்போக்குச் சக்திகளை
முன்மொழி;புவி வழிமொழியும்!

புதுவேகத் தோடு நீ
புறப்படு! உன்உள்ளங்கை
விதிரேகை என்பதை
விஞ்ஞான ரேகையாக்கு!





# பூமியின் அச்சு நீங்கள்!


இளைய பாரதம் எழுக;
எழில்மிகு தேசம் வளர்க!
புதிய பாரதம் மலர்க;
புகழ்மிகு பயணம் தொடர்க!

புதியதோர் உலகு செய்யும்
பூமியின் அச்சு நீங்கள்!
புதுமைகள் புரியும் ஆற்றல்!
புவிஈர்ப்புத் தானம் நீங்கள்!

ஊற்றெடுக் கின்றஊழல்
உள்ளூர்ச் சாக்கடையின்
நாற்றத்தைப் போக்கிடநீர்
நாள்குறித்துக் கொண்டீரா?

மாநிலத்துக் கொருமனிதன்
மணியான ஓர் இளைஞன்
நானென்று எழுந்து வந்தால்
நாடெழுந்து நிற்காதா?

வடகோடி தென்கோடி
வாழுகின்ற பலகோடி
அடலேறு கள்கூடி
அணிவகுத்து வாருங்கள்!





# தோள்களை உயர்த்து வாலிபமே!


வெற்றியை எட்டும் நோக்கமிருந்தால்
ஒற்றைச் சிறகிலும் பறக்கலாம்! உன்னைத்
தொற்றிய சோம்பலைத் தூக்கி எறிந்தால்
தோள்களில் பூமியை நிறுத்தலாம்!

எட்டுத் திசைகளிலே
எந்தத் திசை உனதுதிசை? - உன்
சுட்டு விரலைக் கேள்
சூரியனைக் கேட் காதே!

சுட்டுவிரல் தொட்டால் அந்தச்
சூரியன் கூடச் சுருங்காதா? -உன்
கட்டை விரலால் கடைந்தால் அந்தக்
கடலும் வானமும் கலங்காதா?

பூகோளம் காட்டுகிற
பொதுத் திசைகள் கிடக்கட்டும்;
பூபாளம் பாடிஇனிப்
புதுத் திசைகள் படைப்போம்,வா!

விருப் பங்கள் இழுத்துப் போகும்
விதியை ஒதுக்கி விட்டு- புதிய
திருப்பங்கள் காண்ப தற்குத்
திசைகளைத் தீர்மா னிப்போம்!





# சிகரம் உன் சிம்மாசனம்

நாற்காலி ஆசைகள்
எதற்காக உனக்கின்று?
நலமல்ல என்தோழனே!


நாற்காலி என்பது
நல்லவனைக் கற்பழிக்கும்
நாலுகால் வேசிநண்பா!

நாற்காலி என்னடா
பழுதாகும் நாற்காலி
நாளைக்கு விறகாகுமே!

நாற்காலி விட்டுவா
நம்காலில் நிற்கலாம்
நம்பிக்கைச் சிறகாகுமே!

ஊர்ச்சேவை என்பது
உயரமாய் ஆசனத்தில்
உட்கார்ந்து செய்தால்தானா?

போர்க்கோலம் எதற்குநீ
பூண்கிறாய் இருக்கைக்கு?
புழுதியில் புரளலாம்வா!





வேர்க்காலை மண்ணிலே
ஊன்றித்தான் மரம்கூட
விண்ணோக்கி உயர்கின்றது!


ஏர்க்காலில் வந்ததை
இரையாகக் கொண்டுதான்
ஏவுகணை பறக்கின்றது!

காற்றாகி வீசிவா
கலியுகக் குப்பைகளைக்
கணப்பொழுதில் சுத்தமாக்கு!

நாற்றாகிப் புதுமைசெய்;
பொதுமைசெய்; வரலாற்று
நாற்காலி உனைஏற்குமே!

ஊற்றாகி உதவுநீ;
ஊர்மக்கள் இதயங்கள்
ஒவ்வொன்றும் நாற்காலிதான்!

சேற்றோரம் தொண்டுசெய்;
அப்போது எவரெஸ்டு
சிகரம் உன் சிம்மாசனம்!





# வால் நட்சத்திரங்கள்


இளைஞர்கள் -

நிகழ்கால உலகுக்கு
நெம்புகோ லானவர்கள்;
வளரும் தேசத்தின்
வருங்கால வைப்புநிதி!

'விளையாட்டுப் பயல்க'ளென்பார்
வீட்டிலுள்ள பெரியவர்கள்;
விளையாட்டில் பயல்கள் குவிக்கும்
வெற்றிகளைப் பாருங்கள்!

வாதிப்போர் சொல்வதுபோல்
வழிதவறுவோர் நாட்டில்
பாதிப்பேர் அல்ல; ஒரு
பத்துபேர் மட்டும்தான்!

வாலைப் பருவத்தில் - சில
வால்நட்சத் திரங்கள் - மனித
சாலைப் பயணத்தில்
சபலப்படு வதுண்டு!






கனி மரத்திலிருந்து - சில
காய்வெம்பி உதிர்ந்ததென்று
அடிமரத்தை வெட்டுதற்கு
அவசரப் படலாமா?

காமத்துப் பால்மட்டும்
கற்கவில்லை எம்இளைஞர்
பொருட்பாலையும்நன்கு
புரிந்துவைத் திருப்பதனால்

சொந்தக் காலில் நின்று
சுயமாகப்பொரு ளீட்டியபின்
பந்தக்கால் நடுவதற்குப்
பச்சைக்கொடி காட்டுகிறார்!

ஆலைகளில் பண்ணைகளில்
அலுவலகங்கள் தோறும்
வேலை செய்யும் இளைஞர்களின்
வியர்வைத் துளிகள்தான்

இந்திய வாகனம் நகர
எரிபொருளாய் ஆகிறது - உலகச்
சந்தையிலே பாரதத்தின்
சாதனைகள் படைக்கிறது!





# பால் மணம் மாறாத பிள்ளைகள்

ஏற்றங்கள் தருகின்ற கல்விக் கூடம்
  இளம்பயிரின் நாற்றங்கால்; பொதுவாய்ப் 'பருவ
மாற்றங்கள்' பயிர்நிலையைத் தீர்மா னிக்கும்;
  மக்களையும் அதுதானே தீர்மா னிக்கும்?
காற்றுகளே திசைமாறி வீசும்போது
  கட்டுப்பா டெல்லாமும் காற்றில் போகும்!
நேற்றுகளை உணராத தலைமு றைகள்
  நாளைகளை இன்றைக்கே காணப் பார்க்கும்!

அறியாத பருவத்தில் அரும்பா முன்பே
  அரும்புகளில் தேன்தேடித் திரியும் தம்பி;
புரியாத வயதிற்குள் புலன்கள் கெட்டுப்
  பூப்பதன்முன் காய்ப்பதற்குத் துடிக்கும் தங்கை;
தெரியாத திக்குகளில் சுவைகள் தேடித்
  திரிகின்ற பிள்ளைகளைத் திருந்த வைப்போம்!
நெறியாக 'பால்மணத்தை' மறக்க டித்து
  நேர்வழியில் நூல்மணத்தை நுகரச் செய்வோம்!


# இளைய பாரதம்


பெற்றவர் தலைகுனியப்
பிள்ளைகள் தலையெடுப்பார்;
கற்றவர் மனம்வருந்தக்
கற்பவர் மனங்களிப்பார்!

கலைபயிலும் வயதினிலே
கண்மூடிப் பழக்கங்கள்;
தலைமுறையைக் கெடுக்கும்
தவறான ஒழுக்கங்கள்!

'தந்தையர்' நாட்டின்மேல்
தாழ்வான மனப்பான்மை;
இந்தியப் பொருளென்றால்
இழிவான மதிப்பீடு!

'இந்தியன்' என்பதுவே
ஈனமெனும் ஓர் எண்ணம்;
இந்தத் தலைமுறைக்கு
இனிவேண்டாம் இவ்வெண்ணம்!







# வெளிச்சம் தேடுகிறோம்

பட்டதாரி இளைஞர்நாங்கள்
பரிதவிக் கிறோம் - இந்தப்
பாழ்வெளியில் வாழ்வொளியைத்
தேடி நிற்கிறோம்!

காடுவிற்றுக் கழனிவிற்றுக்
கல்வி தேடினோம் - வெறும்
காகிதத்துப் பட்டங்களைக்
கையில் வாங்கினோம்!

விதைநெல்லைக் கொடுத்துவிட்டு
உமியை வாங்கினோம் - நாங்கள்
விறகுகளை விற்றுவிட்டு
அடுப்பு வாங்கினோம்!


வீடுமனை விற்ற காசும்
தேறவில்லையே -அது
விண்ணப்பப் படிவத்திற்கே
போதவில்லையே!


வேலைகேட்டுப் படிவங்களைத்
தூத னுப்பினோம் - உடன்
விண்ணப்பக் கட்டணங்கள்
திறை செலுத்தினோம்!

கப்பம்கட்டும் சிற்றரசர்
கலங்கி வாழ்கிறோம் -இனி
எப்பொழுது விடியுமென்று
ஏங்கிச் சாகிறோம்!

மனுநீதி நாட்களுக்குக்
குறைவு இல்லையே - எங்கள்
மனுக்களுக்கு மட்டும்நீதி
கிடைக்க வில்லையே!

வெள்ளெழுத்து வந்தபின்பும்
நம்பிட லானோம் - தலை
வெள்ளிநரை யானபின்பும்
வேலையைக் காணோம்!








பேட்டிகளில் ஒதுக்குகின்ற
        கண்து டைப்புகள் - பணப்
பெட்டிகளில் பதுக்குகின்ற
        வேலை வாய்ப்புகள்!

மந்திரிக்குச் சொந்தக்காரர்,
        கட்சிக் காரர்கள் - அவர்
மட்டும்தானா இந்தியாவின்
        பங்கு தாரர்கள்?

பட்டத்துக்கு இங்கு யாரும்
        மதிப்புக் கொடுக்கல்லே - அட
பழைய பேப்பர்க் காரன்கூட
        எடைக்கு எடுக்கலே!


வேலைவாய்ப்பு அலுவலகம்
        எங்கும் இருக்கு - அங்கே
வெளிச்சமில்லை; பகலிலேயும்
        இருண்டு கிடக்கு!



விட்டுத்தள்ளு இன்னுமென்ன
விரக்தி உனக்கு? -புது
விடியலுக்கு நம்பிக்கைதான்
பச்சை விளக்கு!

ஆறுகடல் காடுமலை
தரிசு நிலங்கள் - அவை
அத்தனைக்கும் தேவையுந்தன்
தோளின் பலங்கள்!

சொந்தமாகத் தொழில்தொடங்கு
கைகளை நம்பி - இனி
சுற்றுமந்தப் பூமியுந்தன்
கால்களில் தம்பி!





# மரணத் தரகர்கள்!

உதிரம் ஓடும் நரம்பெல்லாம் - உன்
உடலின் சிவப்பு நதியாகும்
மதுவாய்க் காலாய் மாறுகையில் - அது
மரணம் வருகிற வழியாகும்!

மரணத் தரகர்கள் மாத்திரைகள் - வெறும்
மாயச் சுகம்தரும் நோய்விதைகள்!
புரட்டும் அழுக்குப் பொய்மான்கள் - உன்
புலன்களை அழிக்கும் கரையான்கள்!

அரும்பும் நாற்றங் காலுக்கு - தினம்
அக்கினித் திராவகப் பாசனமா?
சுருங்கிச் சுயஒளி மங்கிவர - ஒரு
சூரியப் பிஞ்சு வெம்புவதா?

நொடித்து நலிந்த எலும்புதசை - அவை
நோய்களின் நொறுக்குத் தீனிகளா?
சுடர்விட வேண்டிய வாலிபத்தில் - நீ
சுடுகாட்டுக்கா விருந்தாளி?


பகைக்கஞ் சாஉனை வீழ்த்தவரும் - பெரும்
பகை-கஞ்சா; அதன் உறவெதற்கு?
புகைக்குச் சாய்கிற கொடிமரமா? - நீ
போதையில் சரிகிற கோபுரமா?

நெடுவான் தொடுகிற உன்மேனி - அது
நெருப்பின் மேய்ச்சல் நிலமல்ல;
புடம்போ டத்தான் இளம்பருவம் - இது
புதைகுழி போகும் வயதல்ல!

நிமிரத்தான் உன் நிகழ்காலம் - நீ
நேரம் மறந்த கடிகாரம்!
சமயம் இதுதான் களையெடுக்க - நீ
சாதனை புரிந்து தலையெடுக்க!

'விதைநான்' என்று முளைத்தெழும்பு - உன்
விளைச்சலை உலகம் விலைமதிக்கும்!
'கதிர்நான்' என்று வெளிக்கிளம்பு -உன்
கைவிரல் நகமும் ஒளிகொடுக்கும்!






# போதைக் கிறுக்கில் வேதாளம்...

புதிர்தான் வாழ்க்கை என்றெண்ணி - தினம்
புலம்பித் தவிக்கும் வாலிபனே!
'பதர்' நான் என்று பதறுவதால் - வரும்
பயன்தான் என்ன மானிடனே!

வாழ்க்கை என்பது கேளிக்கை - இது
வாலிப வயதில் வாடிக்கை - என
சீழ்க்கை யடித்துப் பாடுகிறாய் - சில
சில்லரைச் சுகங்கள் தேடுகிறாய்!

திரிந்த பாலின் சுவைதேடி - தினம்
திரியும் பால்நீ ஏன் மோகம்?
புரிந்து கொண்டே பாழாகும் - நீ
போதைக் கிறுக்கில் வேதாளம்!

முப்பதைத் தொடுமுன் மூப்புதொட - உன்
மூச்சில் முதுமை வரலாமா?
தப்புகள் வந்து தங்கிவிட - உன்
தசையின் முகவரி தரலாமா?



உழைக்க வேண்டிய விரலிடுக்கில் - அட,
ஒட்டடை படிந்து கிடக்கிறதே
இழுக்கும் போதைச் சுழல்களிலே - உன்
இயக்கம் முடங்கிக் கிடக்கிறதே!

கவிழ்ந்தால் குழந்தையும் நிமிர்கிறதே - அட
காளைஉன் னால்அது முடியாதா?
சிவந்தால் கிழக்கின் முகம் தெரியும் - உன்
சிந்தனை தெளிந்தால் இருள் விலகும்!

புல்லைத் தொட்டுப் பூவாக்கி - வெறும்
புழுதியை உழுது பொன்னாக்கி
கல்லைப் பிளந்து நீரெடுப்போம் - வா
காற்றைப் பிழிந்து சாறெடுப்போம்!



# பெண்ணியம்

# தேனிலவு காணாத தேய்பிறை


மணப்பந்தல் இல்லாத
மலர்க்கொடி என்தங்கை!
தினப்பலனில் இவளுக்குத்
திருமண யோகமில்லை!


வானளவு பகற்கனவு
வளர்த்து முடிக்கவில்லை;
தேனிலவுப் பருவமிந்த
தேய்பிறைக்கு கிடைக்கவில்லை!

உள்ளத்தில் 'தங்கம்' இவள்;
உடலிலது குறைந்ததனால்
தள்ளுபடி ஆகின்றாள்;
தன்விதியை நோகின்றாள்!

ஏற்று நடவுசெய்ய
இடமில்லை என்பதனால்,
நாற்றங் கால்களையே
நாம்முற்ற விடுகின்றோம்!

மலையில் பிறந்தநதி
மண்ணில் இறங்காமல்
நிலையாய் மலைமீதே
நின்றுவிட்டால் விளைவேது?








# பூவாத தாவரங்கள்

பெண்ணாற்றில் பேரணைகள்,
பெருகும்வர தட்சணைகள்!
பெண்ணாறு தேங்கிவிட்டால்
பெரிதாகும் பிரச்சினைகள்!

பூப்படைந்த பின்புமிவர்
'பூவாத தாவரங்கள்!'
காப்பில்லை என்பதனால்,
கனியாத தனிமரங்கள்!

மாலைக்கு வழிபார்க்கும்
மல்லிகைப் பூவரிசை!
மாலைகளை வழிமறிக்கும்
மணப்பந்தல் சீர்வரிசை!

சோலைகளைத் தாண்டாத
சுகந்த மலர்களிவை;
காலைகளில் பூக்காமல்
கனவுகளில் பூத்திருக்கும்!




ஆள்காட்டித் தரகர்களோ
ஆசைகளைப் புதுப்பிப்பார்;
நாள்காட்டியில் இவர்கள்
நம்பிக்கை வளர்த்திருப்பார்!

அன்னை வீட்டிலிவர்
ஆயுட் கைதிகளாம்;
கன்னியர்க்குத் தாய்வீடே
கன்னிமடம் ஆகிறதாம்!

தண்ணீர்த் தேக்கங்கள்
தக்க பயிர்வளர்க்கும்
கண்ணீர்த் தேக்கங்கள்,
கன்னிப் பயிரழிக்கும்!

சீரணியாய் இளைஞர்களே,
சீர்வரிசை புறக்கணிப்பீர்!
பேரணியாய்த் திரண்டிடுவீர்;
பெண்ணாற்றின் அணையுடைப்பீர்!





# 'கனிச்சீர்' ஆவதெந்நாள்?

தங்கைக் கொடிமரத்தில்
        தாலிக் கொடியேற,
கங்கணம் வரதட்சணைக்
        கயிறும் தரவேண்டுமாம்!

'தங்க' மயில் வாகனனே!
        தணிகை மலைக்குமரா - என்
தங்கை மயில்களுக்கு
        'வாகனம்' தந்தால்தான்

மாப்பிள்ளைக் குமரன்கள்
        மாலையிட வருகின்றார்;
வாய்ப்பில்லை என்றாலோ
        வர(ம்) மறுத்துச் செல்கின்றார்!

குன்றனைய தங்கத்தில்
        குமரா உன் தேரோடும்;
குன்றிமணித் தங்கமின்றிக்
        குமரித்தேர் நகரவில்லை!

பூச்சீர் இவர்களெல்லாம்
        பொன்சீர் இல்லாமல்
காய்ச்சீரா யிருக்கின்றார்;
        கனிச்சீரா யாவதெந்நாள்?

# இளமையை நானே தின்னாச்சு...


▫ திருமணச்சீர் கொடுக்க இயலாமல், மணமாகாமலேயே மூப்படைந்த முதிர் கன்னியர் - நகர்ப்புறத்துப் பெண், நாட்டுப்புறத்துப் பெண் - இருவரின் மனக்குமுறல்கள்...▫

▫ ஆசையை நெஞ்சில் எரிக்கின்றேன் - அதை
ஆடைகள் கட்டி மறைக்கின்றேன்!
வாசலைத் தென்றல் தொடவில்லை - நான்
வசந்த மாலையைப் பெறவில்லை!

● காதுப் பொத்தலை மூடவில்லே - என்
கல்யா ணம்கை கூடவில்லே!
சீதனம் கொடுக்க ஏதுமில்லே - என்
சிரிப்பும் இப்போ மீதமில்லே!

▫ கற்பனை ஆயிரம் இருந்தென்ன - அவை
கன்னிக் கொடைக்கு உதவவில்லை!
கற்பும் அழகும் நிறைந்தென்ன -ஒரு
கணவனை வாங்க முடியவில்லை!

● ஒத்தைப் பாய்க்கும் வயசாச்சு - என்
உடம்பும் ரொம்பப் பழசாச்சு
வெத்துக் கூடா ஆனவநான் - ஒரு
விறகாப் போன பூமரம்தான்!





□ நிலவு முகத்தின் அழகெல்லாம் - ஒரு
நிலைக்கண் ணாடியில் தேய்கிறது!
மலரும் நினைவுகள் எனக்கில்லை - என்
மாலைக் கனவுகள் கணக்கில்லை!

● தலையில் பாதி நரைச்சாச்சு - என்
தலையணை கூடப் பஞ்சாச்சு!
இலையில் சோறும் மண்ணாச்சு - என்
இளமையை நானே தின்னாச்சு!

□ வாழ்க்கைத் துணைவன் வரக்காணேன் - நான்
வாசல் தூணின் துணையானேன்!
பாழ்கிண றுக்கு இடிந்தகரை - என்
பருவக் கனவுகள் முடிந்தகதை!

● பூசுற மஞ்சள் தேயவில்லை -என்
புடவையின் ஈரம் காயவில்லே!
பூசையும் வெறுத்துப் போயாச்சு - என்
புலன்கள் மரத்து நாளாச்சு!

□ கண்ணீர்த் துளிகள் முகம்கழுவும் - என்
கனத்த மூச்சுகள் எனைத்தழுவும்!
தண்ணீர் மீனின் தாய்வீடு - அது
தரைமீன் எனக்குச் சுடுகாடு!

● தாலி கழுத்தைத் தீண்டவில்லே - நான்
தகப்பன் வீட்டைத் தாண்டவில்லே!
மூலைக் கிழங்கள் ரெண்டோடு - நான்
மூணாங் கிழமா சேர்ந்தாச்சு!

# தந்தை சொத்தில் தாலி


பூப்படைந்த பெண்கள்
புரிந்த சுயம்வரம் போய்
மாப்பிள்ளை நடத்தும்
மரியாதைச் சுயம் வரங்கள்!


வரிசைக்கு வருந்துமிப்
பரிசில் வாழ்க்கையில்
பரிசில் பெற வருவோர்
பட்டத் தரசர்களே!

தந்தை சொத்தை விற்றுத்தான்
தாலி பெற முடிகிறது!
சந்தைத் தரகில் தானே
'சாந்தி'யே நடக்கிறது!

தாய்வீட்டை விற்றுத்தான்
தாயாக முடிகிறது!
வாய்ப்பில்லாக் கன்னியர்க்கு
வாழ்வெங்கே விடிகிறது?

தனிமரங்க ளாயிருப்போர்
கனிமரங்க ளாவதெந்நாள்?
இனிமாற்றம் இளைஞர்களின்
இதயத்தில் வரும்அந்நாள்!







# சீதனம் சுமக்கிற வாகனங்கள்?

மன்னர் சுயம்வர மண்டபத்தில் - அன்று
மங்கையர் கண்டது பெண்ணுரிமை!

இன்று சுதந்தர மண்டபத்தில் - இங்கு
எங்கள் சுயம்வரம் கொத்தடிமை!

பூவையர் அந்நாள் தேர்வுவைத்தார் - அங்குப்
போட்டி யிட்டார்பல ஆண்மகன்கள்!


முடியர சாட்சியில் முன்னுரிமை - இந்தக்
குடியர சாட்சியில் பெண்ணடிமை!

பூமாலை அன்றைக்குப் போதுமடி -இன்று
பொன்மாலை தந்தாலும் காணாதடி!

தங்கமும் வைரச் சுரங்கங்களும் - வெள்ளித்
தட்டுகளில் தர வேண்டுமடி!

தேன்கூடு கட்டாத பூங்கொடியை - இந்தத்
தேசத்தில் முடவனும் ஏற்பதில்லை!

சக்கர வர்த்திகள் மாப்பிள்ளைகள் - வெறும்
சிற்றரசர் பெண்ணைப் பெற்றவர்கள்!






தரகர் ஒருவர்தான் பெண்பார்க்கிறார் - பிறர்
தாம்பூலத் தட்டில்தான் கண்வைக்கிறார்!

கல்யாணப் பந்தலில் பாரடிநீ - அங்கும்
கையில் தராசுடன் சம்பந்திகள்!

சீர்கள் தருகிற சாதனங்கள - பெண்கள்
சீதனம் சுமக்கிற வாகனங்கள்!

கொட்டிக் கொடுக்கிற சீர்செனத்தி - ஒரு
கூண்டுக் கிளியாக மாறுதற்கோ?

கணவன் உறவும் விலைகொடுத்தா - சிறைக்
கைதியாய்ப் போகவும் கட்டணமா?





# எரிகின்ற பூஞ்சோலை


பகலிரவாய் அழுதழுது
பாவை வடித்த கண்ணீரில்
பாலைவனம் ஈரமானது - இவள்
பஞ்சுமனம் பாறையானது!

முகநிலவில் கொலுவிருந்த
குங்குமத்தின் தடயம்கூட
முழுவதுமாய் மறைந்துபோனது - இவள்
மூச்சுகளும் கரைந்துபோனது!

மூலையிலே நகர்த்திவச்ச
ஆளுயரக் கண்ணாடி
முதுகைமட்டும் பார்த்திருக்குது - இவள்
முழுமனசும் வேர்த்திருக்குது!

காலையிலே பூத்தமலர்
மாலையிலே உதிர்ந்திங்கு
காம்போடு வாடிக்கிடக்குது -ஒரு
கைசேரத் தேடித்துடிக்குது!

எலும்பெல்லாம் விறகாகி
தசையெல்லாம் தீயாகி
எரிகின்ற பூஞ்சோலைக்கு -வெறும்
ஈரச்சேலை போர்வை எதுக்கு?



# வழுவமைதி


எங்கள் இந்தியத்தாய்,
என்றும்நீ சுமங்கலியாம்!
இங்குன் பெண்கள்சிலர்,
இளவயது விதவைகளாம்!

முத்தாக உனக்குமட்டும்
மூவர்ணப் பேராடை;
உத்தமியுன் மகளுக்கோ,
ஒருவண்ணச் சீராடை!

நந்தவனம் குடியிருந்த
நங்கையிவள் கூந்தலுக்கு
எந்தவன மும்இன்று
ஏன்பூக்க மறுக்கிறது!

இலையுதிர் காலம்தான்
இவளுக்கு நிரந்தரமா?
நிலையாய் வசந்தத்தின்
நிழல்வந்து படியாதா?

நேரடியாம் முதலடியை
நெருப்பு விழுங்கியதால்,
ஈரடி வெண்பாவில்,
ஈற்றடியே எஞ்சியது!





இயற்கையின் முதல்பதிப்பில்
ஏற்பட்ட குறைநீக்கி,
முயற்சியுடன் மறுபதிப்பை
முன்வைக்க யார்வருவார்?

தேன்முல்லைக் கொடிகளுக்கு
தேவையிங்கு 'தேர்' களல்ல;
தான்படரப் 'பாரிகள்'தாம்
தாங்குதற்கு வரவேண்டும்!

கண்மணி வழுவாமல்
கால வழுவானாள்;
பெண்மணி இவள்வாழ்வில்
பெறட்டும் 'வழுவமைதி!'

# வெளுத்த வானவில்


கனிமரம் ஒன்று
தனிமரம் ஆனதே
காப்பது நம் கடமையல்லவா?


விதவை என்று
விலக்கி வைப்பது
சிதை வைப்பதற்கா?
சிந்தித்துப் பார்நீ!

விதவை வாழ்வுமலர
விதை - வை;
புதிய வழிசெய்;
புறப்படு தோழனே!

எருக்கம் பூவினைச்
சூடிடக் கூட
இறைவன் இருக்கிறான் - மனித
வருக்கம் வளர்க்கும்
வெள்ளைப் பூவிது
வாடிடலாமா? செம்மலராக்கு!

கணவனின் மறைவெனும்
சாவின் சலவையில்
வெளுத்த வானவில்; அதில்
வண்ணங்கள் ஏற்று - புதிய
வாழ்வினில் தேற்று!







# மறுபடி ஓர்
# ஆகஸ்டு புரட்சி

தெள்ளமுதாம் இல்லறத்தை இழந்த தாலே,
திருமதிகள் பிறைமதிகள் ஆகிவிட்டார்;
உள்ளத்தில் துணையிழந்த துயர வெள்ளம்;
உடல்மீது 'வெள்ளாடை' துக்கச் சின்னம்!
வெள்ளையர்கள் விடுதலையைத் தந்தார்;இந்த
'வெள்ளையர்க்கு' விடுதலைநாம் தரவேண் டாமா?
வெள்ளிகளைத் தொடரும்சனி பெயர்ந்தால் தானே
வெள்ளிகட்கு விடிவெள்ளி தோன்றக்கூடும்?

கண்ணற்ற மயிலுக்குத் தோகை மீது
கண்நூறு இருந்தாலும் பார்வை உண்டா?
எண்ணற்ற சமாதான வெண் புறாக்கள்
இவர்வாழ்வில் அமைதிக்குத் தூது உண்டா?
'வெண்மேகம்' உடுத்திருக்கும் 'செவ்வா னங்கள்'
விரைவிலொரு 'வானவில்'லை அணிய வைப்போம்!
மண்மீது 'வெள்ளை'களை அகற்று தற்கு
மறுபடியோர் 'ஆகஸ்டு புரட்சி' செய்வோம்!

# கலப்பு மணம்


அரசுக்கும் வேம்புக்கும்
கலப்புமணம் - இதை
ஆதரிக்கும் நாட்டிலுள்ள
ஆத்திகர் மனம்!


இருசாதி மரங்களுக்கு
இணைப்பு நடத்துவார்;
ஒருசாதி மனிதர்களைப்
பிரித்து வைக்கிறார்!

குறத்திமகள் குமரனுக்கு
மனைவி யல்லவா? - நந்த
கோபாலன் பாமாவை
மணக்க வில்லையா?

அரக்கன்மகள் சிவன்மனைவி
ஆகவில்லையா? - ஒரு
ஆண்டாளை அரங்கநாதன்
ஏற்க வில்லையா?

கடவுளுக்கு மட்டுமிங்கு
கலப்புமணம் செய்துவிட்டு
அடியார்கள் மட்டும் ஏன்
அடிமாறிச் செல்கின்றார்?







# உதிரக் கலப்பு


மனப்பொருத்தம் பார்த்து
மணமுடித்து வைக்காமல்
இனப்பொருத்தம் பார்த்து
ஏனழிந்து போகின்றீர்?

தங்கத்தில் கலப்புண்டு
தாலிக்கு விதிவிலக்கா?
சங்கப் பலகைகளில்
சாதிக்கு முதலிடமா?

பூந்தோட்டம் ஒருமுழப்
பூச்சரத்தில் கலக்கிறதே
கூந்தலில் வரும்கலப்பு
குடும்பத்துக் காகாதா?

சாதிக்கலப்பு செய்தவனுக்கு
சரித்திரம் கிடையாதா?
சாதிக்கட்டிலில் படுக்காவிட்டால்
சந்ததி வளராதா?

உரக்கலப் பில்இங்கே
உற்பத்தி பெருகுமென்றால்
உதிரக்கலப் புகளால்
உயராதா சமுதாயம்?





# பெண்ணெண்ணெய்

சீதையை எரிக்க ராமன் வில்லே
விறகாய் ஆகிறது;
சீதன மின்றித் தாய்வீடே சிலர்
சிறையாய் மாறியது!


சிதையில் எரியும் சீதைகள் -இவர்
சிறகுகள் தானா விறகுகள்?

கனவுகளோடு மூன்று முடிச்சைக்
கழுத்தில் ஏந்தியவள் -
கண்ணீரோடு ஒரு முடிச் சில்தன்
கதையை முடிக்கின்றாள்!

தாலிக் கயிற்றில் தண்டனை - ஒரு
தூக்குக் கயிற்றில் விடுதலை!

மண்ணெண் ணெய்க்குப் 'பெண்ணெண் ணெய்'என
மற்றொரு பெயருண்டா?
மருமக ளுக்கு 'எரிபொருள்' என்றொரு
மாற்றுப் பொருளுண்டா?

தென்றல் தொடாத அரும்புகள் - சிறு
தீக்குச் சிக்கா விருந்துகள்?





# தாம்பூலத் தரகுகள்


பெண்ணை மன்மதத்
தின்பண்டம் என்று
எண்ணியிருக்கிறார் ஆடவர் - அடியே,
கண்ணீரைத் துடைத்துவிட்டு வா -உன்
கண்ணிமையை உலர்த்திவிட்டு வா!

கல்யாணம் ஒன்று
தானா கழுவாய்?
கவலையை விலக்கிக்
களிப்பாய் எழுவாய்!

மூன்று முடிச்சு
ஏறா விட்டால்
முழுமை யுறாதா
பெண்மை? சிந்தி!

பூம்பாவைக் கனவுகள்
பூமியில் மெய்ப்பட
தாம்பூலத் தரகுகள்
தடையானால்,

'கல்யாணக் கப்பம்'
கட்ட மறுப்போம்;
'கல்யாண மறுப்புக்
கழகம்' தொடங்குவோம்!






# புருவம் உனக்கு மீசை!

யாரடி அங்கே?
என்னடி புலம்பல்!
பாரடி கண்ணே,
பாரதிப் பெண்ணே! - வைரக்

கம்மல் இல்லாமல்
கல்யாணம் நின்றதால்
விம்மல் ஏனடி வீணாய் - தோழி
விம்மலை உடனே நிறுத்து - சின்னத்
தும்மலைப் போலதைத் துரத்து!

மூலைச் சுவரில்
மூக்கைச் சிந்தி
முடங்கிக் கிடந்தது போதும் - உனது
மூளைப் புலத்தில்
புதிதாய்ச் சிந்தி!

கிளியா? இல்லை;
நீ புதிய
கீதை பாடும் கண்ணம்மா!
புலியாய் மாறு பெண்ணே -உன்
புருவம் உனக்கு மீசையடி!






# சூரியனைக் கூட சொக்கட்டான் ஆடலாம்!

பெண்ணே, நீ
பேதைப் பெண்ணல்ல; 'மேதைப் பெண்!'
பெண்ணே, நீ
பதுமைப் பெண்ணல்ல; 'புதுமைப் பெண்!'

முண்டாசு கட்டிய
முறுக்குமீசைப் புலவன்
கொண்டாடிப் பெண்ணுக்குக்
கூறிய வாசகங்கள்!

கோணல் வகிடெடுத்துக்
கூனிய நாணல்களை
நேர்வகி டெடுத்து
நிமிர்த்திய அன்னையவன்!

இரையெடுக்க ஆண்வயிறு
ஈன்றெடுக்கப் பெண்வயிறு!
தரையெடுத்த வாழ்க்கையிலே
தாய்வயிறு பொன்வயிறு!






ஈர மனங்கொண்ட
ஏந்திழையார் தாய்நாட்டின்
வீர இனத்திற்கு
விதைக்கோட்டை யானவர்கள்!

பாத்திரங்களைத் துலக்கும்
பாவையர்கள் பலநூறு
சாத்திரங்களை விளக்கும்
சகலகலா வல்லிகள்!

சாதத்தைப் பதம்பார்த்து
சமைக்கின்ற கைவிரல்கள்
வேதத்தைப் பதம்பிரித்து
விரிவுரைகள் எழுதவரும்!

அரிச்சு - வடிக்கும் பெண்கள்
'அரிச்சுவடி'க்கும் கண்கள்!
அரிசிஉலை இறக்கும்கை
அணுஉலையைத் திறக்கும்கை!

எண்ணறிவில் எழுத்தறிவில்
முன்வரிசை பெண்வரிசை;
நுண்ணறிவில் நூலறிவில்
ஆண்களுக்கு நிகர்வரிசை!





மையலுக்கு மட்டுமல்ல;
சமுதாயக் கிழிசல்களில்
தையல்கள் போடுகிற
'தையல்கள்' பெண்மணிகள்!

அஞ்ஞானம் என்றுநாம்
அடுப்பெரிக்க விட்டோமே
விஞ்ஞானம் இன்றந்த
வெண்டைக்காய் விரல்களிலே!

பூவைவிண் முற்றத்தில்,
விண்மீன் புள்ளிகளால்
பூக்கோலம் போடும்;
பூகோள ஆய்வுசெய்யும்!

சேற்றில் கால்பதித்து
நாற்றுநடும் கண்ணம்மா
காற்றில் கால்பதித்துக்
கனரகத் தொழில்புரிவாள்!

சூரியனைக் கூடயிவள்
சொக்கட்டான் ஆடுவதைச்
சுழலும் பூமிகண்டு
சொக்கத்தான் போகிறது!

# என் மதம்
# மன்மதம்?


பூப்பறி யாத பருவத்தே
பொதுமக ளாகப் போனவள்நான்;
யாப்பறி யாத கவிதையென்னை
யார்யார் யாரோ வாசித்தார்!


எல்லாச் சாதியும் தீண்டுகிற
எச்சில் சாதி என்சாதி;
எல்லா மதமும் கலக்கின்ற
'என்மதம் மன்மதம்' இன்பமதம்!

இனிப்புக் கடைநான் தசைப்பிண்டம்
எத்தனை பேர்க்குத் தின்பண்டம்;
குனிந்து வருகிற நீதிபதி
குற்ற வாளியும் அடுத்தபடி;

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி
அத்தனை பேரும் என்கட்சி;
நாளும் பொழுதும் கிடையாது;
ஞாயிறு விடுமுறை எனக்கேது?

தனயன் நுழைய முன்வாசல்
தந்தை நழுவப் பின்வாசல்!
முனிவர் களுக்கும் முறைவாசல்
மூடா திருக்கும் என்வாசல்!







மந்திர வாதியின் கைக்கோல்நான்;
மந்திரி மார்க்கு வைக்கோல்நான்;
அந்தப் புரங்கள் சலித்தவர்க்கு,
'அசைவ மனைவி' ஆனவள்நான்!


நிதம்ஒரு கணவன் குறைவில்லை;
நிரந்தரக் கணவன் வரவில்லை!
புதுமணப் பெண்போல் அன்றாடம்
பொய்க்கும் இளமை அலங்காரம்!

தத்துவ ஞானிகள் மத்தியிலே
'தசையவ தானம்' புரிகின்றேன்!
'உத்தம புத்திரர்' பலபேர்க்கு
'ஒருநாள் பத்தினி' ஆகின்றேன்!

மேடையில் பெண்ணறம் பேசியபின்,
மேதையும் என்னைத் தொட்டணைப்பான்!
ஆடைகள் கட்ட நேரமின்றி,
ஆண்களை மாற்றிக் கட்டுகிறேன்!

கூவம் நதிநான்; தினந்தோறும்
குளித்த பிறகு அழுக்காவேன்!
பாவம் தீர்க்க நாள்தோறும்
பத்துக் காசுக் கற்பூரம்!

உப்பு விலைதான் கற்புவிலை!
உலைவைக் கத்தான் இந்தநிலை!
தப்புத் தான்விட முடியவில்லை!
தருமம் சோறு போடவில்லை!



# விடியலைத் தேடும் இரவுகள்...

எண்மானம் கணிதத்தில் தேவை; வாழும்
இலக்கியத்தில் உவமானம் மிகவும் தேவை!
மண்மானம் காப்பதுதான் மக்கள் சேவை!
மனிதனுக்குத் தன்மானம் தேவை! நாட்டில்
பெண்மானம் அடமானம் வைத்து நாளும்
பெருமானம் வருமானம்! பிறந்தநாட்டின்
கண்-மானம்; களங்கத்தால் அரிமா னத்தால்
கரையாத அவமானக் கறைதீ ராதா?

கலங்கரையின் விளக்காக இருக்கத் தக்க
கண்மணிகள் சிவப்புவிளக் கானார்; இங்கே
நிலங்கலங்கி னாலும்தன் நிலைக லங்கா
நிறைமாதர் குலமாதர் விலைமா தானார்!
கலங்குகிறார் கரையேற வேண்டும் என்று!
கறையேற வாழ்கின்றார்! பசிய கற்ற
விலங்குகளின் கைவிலங்கில் நலிவார்; இந்த
வேதனைகள் தீருவது எந்த நாளோ?



# வறுமைக் கோடுகள்

# அனாமதேயங்கள்

ஏழைகள் -

அன்னை தேயத்தில்
அனாம தேயங்கள்!


பறவை களுக்குப் புகலிடங்கள்
பற்பல விலங்குக் காப்பகங்கள்
வறியவர் களுக்கோ தெருமுனைகள்;
வாழ்க்கையில் இவர்கள் கடைநிலைகள்!


சொந்த பூமியில் அகதிகளாய்
சுதந்தர நாட்டில் அடிமைகளாய்
தந்தையர்நாடு பலபேர்க்கு
தருமச் சத்திரம் ஆனதிது!

பிறந்த நாட்டில் இவர்கள் பெயர்
பிறப்பு இறப்புப் பதிவேட்டில்!
மறந்தி டாமல் இவர் பெருமை
மதிக்கப் படுவது இரண்டுமுறை!

முதன்முறை மக்கள் கணக்கெடுப்பு;
மறுமுறை தேர்தல் வாக்கெடுப்பு!
அதன்பின் இவர்நிலை இருட்டடிப்பு;
ஆயுள் வரைக்கும் புறக்கணிப்பு!

துப்புரவாக உடைமைகள் யாவும்
துடைக்கப்பட்ட இவரிடத்தில்,
துடைக்கப் படாமல் இருப்பதுஒன்று
'துயரம்!' அதனைத் துடைப்பதுஎன்று?





# மூலையில் முடங்கிய மூலதனம்

மூலையில் முடக்கிய மூலதனம் - வெறும்
மூச்சைச் சுமக்கிற ஏழையினம்!

பச்சிலை மருந்தில் உணவைக் கொடுக்கும்
பசிமருந் தில்லை நோய்தீர்க்க!
எச்சிலை விழுங்கி விழுங்கியிவர்க்கு
எத்தனை நாட்கள் உயிர்வாழ்க்கை?

கட்சிக் கொடியும் தேர்தலறிக்கையும்
கண்ணீர்ச் சாதியை நம்பும்வரை
'அட்சய பாத்திரம்' வரும்வருமென்பது
ஆரூ டம்தான் வேறில்லை!

தீர்க்கக் கோடும் அட்சக்கோடும்
தேசப் படத்தின் அடையாளம்;
தீர்க்க முடியா வறுமைக்கோடு
தேசத் திற்கொரு அவமானம்!

அஞ்சிக் கிடக்கும் இவர்கள்தேசம்
ஆலய மாவது எப்போது?
கஞ்சி வரதனும் கந்தய்யாவும்
கடவுள் ஆவார் அப்போது!

# கண்ணீர் விற்காத ஜாதி


உழைக்கும் இவன்கைகள்
உலகுக்கு உணவூட்டும்;
பிழைப்புக்கு மட்டும்
பிறரிடம் கைநீட்டும்!


முதுகின் உப்பையிவன்
முதலாளிக் களித்துவிட்டு
வதங்கி வயிற்றுக்கு
வாசலிலே காத்திருப்பான்!

தனது முதலாளியினைத்
தசைமண் டலமாக்கி
எனது தோழனிவன்
எலும்பு மண்டலமானான்!

மண்ணில் வியர்வைஉப்பை
மலிவாய் விற்கும்இவன்
கண்ணீர் உப்பைமட்டும்
காசாக்க முடியவில்லை!

இவன் முதுகு சுமைதாங்கி;
இருதோளும் இடிதாங்கி!
இவன்வயிறு அடிதாங்கி;
இருக்கிறான் உயிர்தாங்கி!







# சோற்றுப் பானைக்கு ஒரு வாய்


நோவான் ஏழைகொடும் பசியால் - குடல்
நோயால் பட்டினிக்கு இரையாய்!
போவான் தினமும்தெருத் தெருவாய் - ஒரு
பொழுதிலும் போதாத வருவாய்!

சோற்றுப் பானைக்கு ஒருவாய் - அதைச்
சுற்றிப் பகிர்ந்துண்ணப் பலவாய்!
ஆற்றிக் கொடுத்தசிறு உருண்டை - பிஞ்சு
'ஆகா, கோலி'யென விழுங்கும்!

'எனக்குக் கவளம்ஒரு பந்தாய்' - என
ஏந்தும் கைகளுக்குப் பங்காய் -

கணக்குப் பார்த்துத்தான் தந்தாள் - சிறு
கவளம் அல்ல; வெறுங் கஞ்சி!
கணவன் கைகளுக்குப் பங்காய் - தன்
கண்ணீர்த் துளிகளையே வார்த்தாள்!

கனக்கும் இரண்டிதயம் துடிக்கும் - வெற்றுக்
கலயம் தலைகவிழ்ந்து கிடக்கும்!
தனக்கும் வெறும்வயிறு என்றா? - சுற்றித்
தவிக்கும் வயிறுகளைக் கண்டா?





# கேலிச் சித்திரம்

கேலிச் சித்திரமாய்
கீழினத்தார் உள்ளவரை
மேலினத் தாரிடமிருந்து
மீட்சி கிடைப்பதில்லை!


அச்சமென்ன இன்னும் உந்தன் மனத்திலே - அது
அகன்றுவிடும் துணிச்சலான நினைப்பிலே!

எதிர்ப் பார்ப்பில் வருவதில்லை ஏற்றமே - உன்
எதிர்ப்புகள்தான் கொண்டுவரும் மாற்றமே!

இடையினம் நடைப்பிணமாய்
இயக்கமின்றிக் கிடப்பதனால்
உடையவர் உற்சவங்கள்
ஊர்வலமாய் நடக்கிறது!

காத்திருந்தால் பயனில்லை இனியுமே - உன்
கையுயர்ந்தால் வானம்கூட குனியுமே!

சிலந்தியாக வாழ்ந்த நாட்கள் போதுமே - ஒரு
சிறுத்தையாகப் புறப்படுவாய் தோழனே!





# சோற்றுக்கு திருவோடு

இரைப்பை எங்களுக்கு
இன்னொரு சுவாசப்பை!

காற்றையே உணவாகக்
காலமெலாம் சுவாசித்து
சோற்றுப்பை எங்களுக்குச்
சுவாசப்பை ஆகிறது!

சுவரொட்டி வாசகத்தில்
சோறுவரும் தேசத்தில்
விளம்பரத் தட்டிகளில்
வீடுபேறு கிடைக்கிறது!


அன்னக் கொடைதந்த
அமுதசுரபி இன்று
தின்னும் சோற்றுக்கே
திருவோடு ஆனதுஏன்?

ஒதுக்கித்தள்ளும் சிறுபான்மை;
ஒதுங்கிப் போகிற பெரும்பான்மை;
பதுக்கல்கூட்டம் தேர்ஏறும்;
பசித்தகூட்டம் தெருவோரம்!

# சுவரொட்டி வாசகங்கள் சோறு போடும்?

பாலுக்கும் ஆடையுண்டு; ஆனால் இந்தப்
பாமரர்க்கு அதுவுமில்லை; சாபக் கேடு!
நூலுக்கும் கஞ்சியுண்டு; ஆனால் இங்கு
நொடித்தவர்க்கு இதுவுமில்லை; வெட்கக்கேடு!
நாளுக்கும் பசிவயிற்றில் தீவி பத்து;
நனைகின்ற கண்ணீரால் தீய ணைப்பு!
வேளைக்கும் எரியாத வெற்ற டுப்பு;
வெறும்வயிற்றில் அணையாத பசிநெ ருப்பு!

வற்றிவிட்ட முகத்தின்மேல் வற்றாக் கண்ணீர்;
வறுமைக்கு முகவரியைச் சொல்லும் மேனி!
பற்றிவிட்ட சேதாரம் பொருளா தாரம்;
பற்றாத பருக்கைக்குப் 'பல'கை நீளும்!
குற்றுயிரோ விதியினையே நோகும்; அந்தக்
குறையுயிரோ வாழ்வினையே நோகும்; இங்கே
சுற்றிதினம் வயிறொட்டி வாடு வோர்க்கு
சுவரொட்டி வாசகங்கள் சோறு போடும்!






# பாலைவனத்தில் ஒரு பாத யாத்திரை!

ஏழை முதுகில் உப்புக்காய்ச்சி
இலட்சக் கணக்கில் சேர்த்தவர்கள்
ஏழை வயிற்றை வெற்றிடமாக்கி
இரும்புப் பெட்டியை நிறைத்தவர்கள்
சோலை வனத்தில் இவர்கள் தலைமுறை
சொர்க்க போகமாய் வாழ்கிறது!
பாலை வனத்தில் ஏழைக்குடும்பம்
பாத யாத்திரை போகிறது!

நிதமும் வேர்வையில் வளர்ந்த மரங்கள்
நிழலைத் தரவும் மறுக்கிறது!
உதிரம் குடித்து விளைந்தபயிர்கள்
உணவைக் கொடுக்க மறக்கிறது!
வாயும் வயிறும் உறுப்புகள் என்பதை
வறுமைக் கோடு உணராது!
ஆயுள் வரைக்கும் நோயில் இருக்கும்
அடிமைகள் விடுதலை எப்போது?





# கோவணாண்டி


'வேட்டி ஒண்ணு கேக்குதோ
வெட்டிப்பய உனக்கு?
தோட்டிநீ; துரைமவனோ?
துண்டுகூடத் தண்டம்தான்!

காட்டுக்கும் வீட்டுக்கும்
காவக்காரன், நீயென்ன
கோட்டைக்கு ராசாவா?
கோவணமே போதும்போ!'

உறுமினார் பெரிய பண்ணை;
உடல்குறுகிச் சுப்பன்தன்
வறுமையை நொந்தபடி
வயல்காக்கப் போகின்றான்!

கந்தைக் கோவணத்தைக்
கண்ணீரில் நனைத்துலர்த்தி
வந்துநின்றான் சுப்பன்
வயல்வரப்பில்! அங்கே

நீளச்சட்டை போட்டு
நின்றுகொண் டிருந்தது,
சோளக்கொல்லைப் பொம்மை
சுப்பனுக்குப் பக்கத்தில்!





# முழத்துணி


உடுப்பைச் சுற்றிக்கொள்ள
ஒருவழியும் இல்லாமல் - தாயின்
இடுப்பைச் சுற்றியிருக்கும்
ஈரமுகங்கள்! எரியாத

அடுப்பைச் சுற்றிப்படுக்கும்
ஆறுமுகங்கள்; பொத்தல்
தடுப்புக்குள் குடியிருப்பு;
தார்ச்சாலை படப்பிடிப்பு!

எட்டுச்சாண் உடம்புக்கு
எட்டுமுழம் தேவையாம் - அட
எட்டுமுழம் கூடஅல்ல;
இடுப்புக்கும் மார்புக்கும்...

முழுத்துணியா கேட்கின்றார்?
முழத்துணிக்கே ஏங்குகிறார்!
முழுதுண்டு படுத்ததில்லை!
முழுத்துண்டும் உடுத்ததில்லை!

பிஞ்சு மழலையொன்று
பிறந்தமேனியுடன் -அந்தப்
பஞ்சு மேனியிலே
பருத்திஏன் பூக்கவில்லை?





# மேகப் பருத்தியில் மேலாடை

மண்மகள் காதலியின்
மலைமார்பு களுக்கு,
வெண்மேக மேலாடை
விரிக்கின்ற வானமே!

எங்கள் சகோ தரிகள்
ஏராள மானவர்கள்,
அங்கம் மறைப்பதற்கு
ஆடையின்றி வாடுகிறார்!

சேலை கூட இல்லை;
சிற்றாடை கேட்கின்றார்;
ஆலைப் பருத்திகளும்
அதைத்தர மறுக்கிறதே!

தேகத்தை மூடுதற்குத்
திறமில்லை; வானம்நீ
மேகப் பருத்தியினால்
மேலாடை நெய்துகொடு!

கார்மேகத் தில்மீண்டும்
கண்ணன் அவ தாரம்எடு!
நீர்சுரக்கும் உன்னிடத்தில்
நிழலாடை சுரக்கட்டும்!

மேகங்க ளேனும்
மெய்யாய் 'மயில்'களுக்கு
'பேகன்' களாகிப்
போர்வை வழங்கட்டும்!

# நடுக்கம்பத்தில் கொடிகள்

நடுக்கம்பத் தில்கொடியைப் பறக்க விட்டால்
நாட்டிலன்று 'துக்கதினம்' என்று ரைப்பார்;
நடுக்கம்பத் தில்கொடியைப் பறக்க வைக்கும்
நாளைநான் 'மகிழ்ச்சிதினம்' என்று ரைப்பேன்!

இடுப்பினிலே உடுப்பதற்கு ஆடை யின்றி
ஏங்குகிற ஏழையென்னும் கொடிம ரத்தின்
இடைக்கம் பத்தில்கொடியை ஏற்றி வைத்தால்
இந்நாளை மகிழ்ச்சிதினம் என்று ரைப்பேன்!

எடையாலே இந்தியர்கள் சமமா? இல்லை;
ஏழைக்கு உடைக்குறையால் எடைக்கு றைதான்!
இடையாடை வருகின்ற நாள்வ ரைக்கும்
ஏழைக்குச் சுதந்தரத்தில் இடைவே ளைதான்!

உடுப்பதற்கு ஆடைவரும் அந்த நாள்தான்
உண்மையிலே ஏழைக்கு விடுதலைநாள்!
குடிப்பதற்குக் கூழ்வரும்நாள் வறுமைக்கோடு
கொண்டாடும் குடியரசுத் திருநா ளாகும்!


# நாங்கள்
# கையேந்தப் போவதில்லை!


அன்ன சத்திரம் இனி வேண்டாம்
அதனை இழுத்து மூடுங்கள்!
இன்னும் அட்சய பாத்திரமா?
இதனைத் தூக்கி எறியுங்கள்!

எங்கள் கைகள் எப்போதும்
ஏந்துவ தற்கே முளைத்தவையா?
எங்கள் தோள்கள் எதற்காக?
இரவல் களுக்கே குனிந்திடவா?

உண்ணும் ஒருகைப் பிடிசோறும்
உழைத்துத் தின்ன விரும்புகிறோம்!
மண்ணில் நாங்களும் தொழில்செய்து
மதிப்பாய் வாழ விரும்புகிறோம்!

பசிக்கு இரந்து தின்பதினும்
பட்டினிச் சாவில் மரியாதை;
நசித்துச் சாகும் நிலைவரினும்
நாங்கள் இனிமேல் கையேந்தோம்!








‘ஏற்பது இகழ்ச்சி’ எனக்கூறும்
எங்கள் பிள்ளைப் பாடங்கள்;
‘ஏற்பது மகிழ்ச்சி’ என மாறும்
எங்கள் பள்ளிக் கூடங்கள்!

பிச்சைப் பரம்பரை ஆக்காமல்
பிழைக்க ஒருவழி காட்டுங்கள்;
உச்சியைத் தேடும் படிக்கட்டு
உழைப்பின் அருமையைப் படிக்கட்டும்.

அரசாங் கத்தின் பிச்சையெனில்
அதற்கு ‘உதவி’ எனப்பெயரா?
பரிசா, தருகிற இலவசங்கள்?
பாமரர் நாட்டின் அகதிகளா?

மன்னர் கூட்டம் தெருவோரம்
மண்குடி சைகளில் அரசாங்கம்!
அன்னை தேயத் தில்நாங்கள்
அனாம தேயம் ஆவதுவோ?

மக்கள் பதிப்பில் ஏழைகளை
மலிவுப் பதிப்பாய் எண்ணாதீர்;
மக்கள் மதிப்பில் எங்களையும்
மன்னர் களாக வரவிடுங்கள்!






எங்கள் கால்களில் வலுவில்லை
என்பத னால்எழ முடியவில்ல;
உங்கள் உயரம் தான்நாங்கள்
உட்கார்ந் ததனால் தெரியவில்லை!

தேனீக் களுக்குக் காகிதப்பூ
தீனி கொடுக்கத் தேவையில்லை:
தேனீக் களுக்குத் தோட்டத்தில்
தேவைப் படுவது மரக்கிளைதான்!

எந்தப் பங்கும் இனிநீங்கள்
இரக்கப் பட்டுத் தரவேண்டாம்!
தந்தையர் நாட்டில் எம்பங்கைத்
தந்தால் போதும்; தாருங்கள்!

சலுகை யல்ல விரும்புவது;
சமமாய் உரிமை எப்பொழுது?
உலகம் நமக்குப் பொதுவுடைமை
ஒவ்வொரு வர்க்கும் சமவுடைமை!





அதிகா ரங்கள் சுரண்டியதை
அரசியல் கைகள் சுருட்டியதை
முதலை வாய்கள் விழுங்கியதை
முதலில் மீட்டு வாருங்கள்!

இலவசங் களையே நம்புகிற
எச்சில் பிறவிகள் ஆக்காதீர்!
இலக்கை நோக்கி முன்னேறும்
இலட்சியப் பிறவி ஆக்குங்கள்!

# சங்கமத்தில் அழுக்குமுண்டோ?


மூளைக்கு அறிவூட்டம்
தந்து கொண்டும்
முயற்சிக்குச் சுயவோட்டம்
தந்து கொண்டும்

காலைக்கும் மாலைக்கும்
மாறிக் கொண்டும்
காலுக்கும் கோலுக்கும்
பணிந்து கொண்டும்

எங்கெங்கும் காசுக்கே
ஏற்றம் தந்தும்
ஏழைகளைச் சாக்கடையாய்
மதிக்கின் றோமே!

கங்கைநதி சாக்கடையை
ஒதுக்க லுண்டா?
கலந்த பின்பு சங்கமத்தில்
அழுக்கு முண்டா?

தன்னினத்தைத் தன்போல
மதித்த லாலே
தரமுயர்ந்து வானத்தே
பறக்கும் புட்கள்!







தன்னினத்தை அன்னியமாய்
ஒதுக்க லாலே
தரையுயர்ந்து (?) வாழுவது
மனித மந்தை!

கண்ணைப் போல் தன்னினத்தைக்
கருத வேண்டும்;
கௌரவமாம் மேல்பூச்சை
அகற்ற வேண்டும்!

'என்னினத்தான்' என்றணைத்துக்
கொள்ள வேண்டும்;
ஏழைகளின் தொண்டினிலே
சிறக்க வேண்டும்!

# வாய்ப்பந்தல்


எத்தனையோ சீர்திருத்தத்
தொண்ட ரெல்லாம்
ஏழ்மையெனும் மணற்குன்றில்
சரிந்து வீழ்வார்!


எத்தனையோ கலைவளர்க்கும்
அறிஞ ரெல்லாம்
இல்லாமைப் புதைகுழியில்
புதைந்து போவார்!

எத்தனையோ வீரர்களும்
நாட்டின் மாண்பை
எழுதுகிற கவிஞர்களும்
சருகாய் ஆவார்!

எத்தனையோ பிறவிகளும்
வறுமைத் தீயில்
இளமையிலே மொட்டினிலே
கருகிப் போகும்!

ஏழ்மைக்குச் சாவுமணி
அடிப்போ மென்றும்
இல்லாமை இல்லாமல்
உழைப்போ மென்றும்








தாழ்வுற்றோர் கரம் தூக்கி
விடுவோ மென்றும்
தருமத்தில் சமரசமாய்
வாழ்வோ மென்றும்

ஏழைகளின் கண்ணீரைத்
துடைப்போ மென்றும்
எழுதுகிறோம்; வாய்ப்பந்தல்
போடு கின்றோம்!

ஏழைக்குத் தோள்தந்து
காக்கும் தொண்டில்
இதயத்தை முன்வைக்கத்
தயங்கு கின்றோம்!






# முதலறிக்கை

நாட்டிற்குள் நதிபடுத்துக் கிடப்ப தால்தான்
நாடெழுந்து நிற்கிறது; உழைக்கும் வர்க்கம்,
மேட்டுக்கு வியர்வைநீர் பாய்ச்சிக்கொண்டே
மிகத் தாழ்ந்து கிடக்கிறது; மேலும்ஏழை,
ஈட்டுகிற கைக்கஞ்சி குடிப்ப தற்கும்
எசமானன் 'கைக் கஞ்சி' வாழு கின்றான்!
தீட்டுகிற திட்டங்கள் எட்டு முன்பே
திசைதிருப்பும் சக்திகளால் வாடு கின்றான்!

நோயினிலே உடல்நலிந்து கிடப்போ ருக்கு
நோன்புகளா மருந்தாகும்? குணப்ப டுத்தும்?
வாயினிலே தேன்தடவி விட்டு விட்டால்
வயிறென்ன பசிமறந்தா போகும்? ஏழ்மைத்
தீயினிலே விழுந்தவரை மீட்ப தற்குத்
தீர்மானம் போட்டபின்பா நடவ டிக்கை?
'தாயினைப் போல் பகிர்ந்துண்போம் பொதுவில்' என்று
தனியுடைமை வெளியிடட்டும் முதலறிக்கை!





# இது எங்கள் கிழக்கு

எங்களது கிழக்கு -அது
எந்தப் பக்கம் இருக்கு?

சின்ன இருட்டுகள் விலகவில்லை - அந்தச்
சிவப்புச் சூரியன் வரவுமில்லை!
இன்னும் பொழுது விடியவில்லை -அட
எதுகிழக் கென்றே தெரியவில்லை!

எங்களது கிழக்கு - அது
எந்தப் பக்கம் இருக்கு?

விழிக்கும் நேரம் வந்தபின்னும் - நம்
வீதியில் வெளிச்சம் நுழையவில்லை!
கிழக்கு தானாய் வெளுக்காது -அதைக்
கிழிக்கா விட்டால் சிவக்காது!

எங்களது கிழக்கு - அது
எந்தப் பக்கம் இருக்கு?

இருண்டு கிடக்கும் திசையெதுவோ -அதில்
இரத்தப் பொட்டு வைப்போம்வா!
இரத்தப் பொட்டே செம்பரிதி - நாம்
இதையே கிழக்கென அழைப்போம்வா!


'இது எங்கள் கிழக்கு' - இதை
எழுச்சியுடன் முழக்கு!

உலகம் முழுவதும் ஒருபகலை -அந்த
உச்சிச் சூரியன் தருவதில்லை;
உலகம் முழுவதும் ஒருபகலை - இனி
உழைக்கும் தோள்கள் ஒளிபரப்பும்!

'இது எங்கள் கிழக்கு' - இதை
எழுச்சியுடன் முழக்கு!

உள்ளெழும் சக்திகள் ஒன்றானால் - இனி
ஒவ்வொரு திசையிலும் கதிர்முளைக்கும்;
நள்ளிர வில்நாம் அழைத்தாலும் - கதிர்
நண்பகல் போல வெயில்கொடுக்கும்!

'இது எங்கள் கிழக்கு' - இதை
எழுச்சியுடன் முழக்கு!





# கட்டை விரலே... கட்டை விரலே...

தொழிலாளத் தோழனே,
தொண்டின் சிகரமே!
உழவு உன்படை;
தொழில்உன் நன்கொடை!

சுழலும் பூமியின் சுழற்சி விதியை
எழுதி இயக்கும் கட்டை விரல்நீ!

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதில்
கைதேர்ந் ததுதான் முதலாளி வர்க்கம்!

நீர்வீழ்ச்சி போல்நீ கண்ணீர் வடிக்கிறாய் – உன்
கண்ணீரில் அவனோ மின்சாரம் எடுக்கிறான்!

வெள்ளக் கடல்போல் வியர்வை பாய்ச்சுவாய்; – உ
வியர்வையில் அவனோ உப்புக் காய்ச்சுவான்!

அவனுக் காகநீ எலும்பை முறிக்கிறாய்;
அவனோ பதிலுக்குச் சோம்பல் முறிக்கிறான்!

தனவந் தனது குடும்பத் தேரைத்
தண்டு வடத்தால் கட்டி இழுக்கிறாய்!

உதிர நீரை அவனுக்குத் தந்து
உமிழ்நீ ரில்நீ உயிர்வாழ் கின்றாய்!

வியர்வைத் துளிகளை விதைத்து விட்டுக்
கண்ணீர்த் துளிகளை அறுவடை செய்கிறாய்!

முதுகில் சுமக்கும் தானிய மணிகள்
வயிற்றுப் பக்கம் வருவதே இல்லையே!

பாட்டாளி உனது பத்து விரல்களை
மேட்டுக் குடிமகன் மென்று தின்கிறான்!

வழிவழி யாக முதலாளி இனத்தைத்
தொழுது தொழுதே ‘தொழு(ம்)நோய்’ பிடித்தவன்!


தோழனே, உன்னைத் தொற்றி யிருக்கும்
தொழுநோய் அகலப் போவதெப் போது?

அழுகையை விரட்டு; தொழுகையை நிறுத்து;
எழுஎழு, உந்தன் தோள்களை உயர்த்து!

□

தாமத மின்றிப் புரட்சியை முழக்கு
தடைகள் யாவும் தகர்ந்துவிடும்!
பாமர சாதிக்குச் சாமரம் வீசப்
பண்ணைச் சாதிகள் பணிந்து வரும்!

குடிசை களுக்குக் கும்பிடு போடக்
கோபுரம் தானே குனிந்து வரும்;
அடிமைத் தலைகள் மகுடம் சூட
அரசர் தலைகள் வணங்கிவரும்!





# தேன் சுவைக்காத தேனீ!

உழைப்பாளியே,
முடவன் உனது முதலாளிக்காக
குடம்தேன் எடுத்துத்
தருகிற தோழனே!

உனது புறங்கைத் தேனையும்
உன் முதலாளியே
நக்கித் துடைக்கிறான்!

வெறுங் கையோடுனை
அனுப்புவான்; எதற்கு?
மறுபடி நீபோய்த் தேனெடுக்க!


தொழிலாளியே,
தேனீக் கொடுக்கின்
தழும்புகள் உனக்கு
தேனடை கூட
எசமான் நாய்க்கே!


# வேர்கள் குடிக்காத நீர்!

தாகமுடன் தவித்திருந்த
வானப் பெண்ணே!
தாகத்தைத் தணிக்கின்ற ஆர்வத் தோடு
மேகமெனும் தேன்கூட்டில்
தேனெடுக்க
மின்னல்களைத் தீப்பந்த மாக்கித் தீய்த்தாய்!

வேகமுடன் வழிந்தமழைத்
தேனில் உந்தன்
வேட்கைக்கு ஒருதுளியும் கிடைக்க வில்லை!
மோகமுடன் அண்ணாந்து
பார்த்த பூமி
முடவனன்றோ முயற்சியின்றி தேன் குடித்தான்!

பாடுபட்டு ஒருவர்க்கம்
உழைக்கும்; அந்தப்
பயன்யாவும் வேறுவர்க்கம் உறிஞ்சிக் கொள்ளும்!
கூடுகட்டும் குருவியினம்
கூட்டுக் குள்ளே
குடியேறும் தந்திரமாய்க் கழுகுக் கூட்டம்!







# வியர்வை வாகனம்

நேரம் வரும் விடியுமென்று
நாளையை நினைக்கும் -அந்த
தூரக்கிழக்கு வானம்ஒரு
காலையில் சிவக்கும்!

சாலைகளில் ஏழைஒரு
'வியர்வை வாகனம்' -தினம்
வேலைகளில் வஞ்சமில்லா
உழைப்பின் சாதனம்!

தேய்ந்துவரும் முதுகில்ஒரு
படிப்பினை இருக்கும் -அது
ஓயும்போது பிள்ளையதில்
சரித்திரம் படிக்கும்!

நாளும் ஒரு வேளைமட்டும்
கலயம் திறக்கும் -அங்கு
நீளும் இரண்டு கைகளில் ஒரு
கவளம் கிடைக்கும்!

நேசத்திலும் நேர்மையிலும்
நிமிர்ந்து நிற்பவன் -நம்
தேசத்தினை நிமிர்த்த இவன்
வளைந்து கொடுப்பவன்!


# தார்க்கோல்


உழுபவர்க்குக் 'கைக்கோல்'
உயிர்களுக்கு 'அன்னக்கோல்'
உழைப்புக்கு 'நெம்புகோல்'
உலகுக்கு 'ஊன்றுகோல்!'

புஞ்சை பொன்னாக்குவதால்
பொருளுக்கே 'ஆதாரம்!'
'நஞ்சை' அமுதாக்குவதால்
நாட்டுக்கே 'ஆகாரம்!'

ஊர்வரிசை யாய்நின்று
உதவுவதே என்னால்தான்!
ஏர்வரிசை என்றாலே
ஏறுவரிசை தான்!

அன்றுநான் பெற்றுவந்த
அவ்வரங்கள் தா-வரங்கள்!
இன்றைக்கு என்மடியில்
எத்தனையோ புதுரகங்கள்!





## ‘வயலின் வித்துவான்’

பூமியைத் திறக்கின்ற
பொன்சாவி விவசாயி!
பூமியை ஈர்க்கின்ற
புவிஈர்ப்புத் ‘தானம்’ நான்!

என்னுடைய இயக்கம்தான்
இம்மண்ணின் உயிரியக்கம்!
என்னுடைய ஏற்றம்தான்
இந்நாட்டின் முன்னேற்றம்!

இசைக்குடும்பம் என்குடும்பம்;
இசைமேடை என்வயல்கள்!
வசப்படுத்தும் கலைஞன்தான்,
‘வயலின்வித் துவான்’நான்!

தார்க்கோ லின் தயவில்
செங்கோல் நடப்பதனால்,
ஏர்க்காலைத் தவிர
எவர்காலும் பிடிப்பதில்லை!

# வயல்களின் ஆண்டுவிழா


வரப்புகளின் சிறப்பு விழா
வயல்களுக்கு ஆண்டுவிழா
அரிசி உலை திறப்பு விழா -ஏழை
அடுப்புகளில் நெருப்பு உலா!


வெயில் விழா எடுக்கும்
வெப்பச் சூரியனுக்குத்
தையில் விழா எடுக்கும்
தமிழ்த்திருநாள் தைத்திருநாள்!

ஓய்வின்றி உழைத்தவனின்
ஓலைக் குடிசையிலே
ஆய்த எழுத்தைப்போல்
அடுப்பு திறக்கும் நாள்!

சூம்பிய வயிறுகளில்
சுடுசோறு வரும் தேதி;
தாம்பூலத் தட்டுகளில்
தாலிக்கு நாற்காலி!

மேல்நடை உயர்திணையார்
மெய்யாய் நன்றி சொல்லும்
கால்நடை இனங்களுக்குக்
காணிக்கைத் திருவிழா!







# எங்கள் உலைவாய் நீ!

பயிர்க்குலத்து நாயகனே;
பண்ணைக்குடி யானவனே!
வயலமுதம் வழங்கியிந்த
வையகத்தைக் காப்பவனே!

தாவரக் குஞ்சுகளைத்
தாலாட்டும் தாய்ப்பறவை!
தாவரக் குழந்தைகட்குத்
தாய்ப்பால்தான் உன் வியர்வை!

ஊற்றெடுக்கும் உன்வியர்வை
ஊற்றிநீ மண்பிசைந்தால்;
சேற்றுருண்டை உருமாறிச்
சோற்றுருண்டை ஆகிறதே!

நீதந்த சோற்றுருண்டை
நிறுத்துப் பார்ப்பதற்குப்
பூமிஉருண்டை எடையும்
போதவில்லை சோதரனே!

பச்சை வயல்கள்உன்
பல்கலைக் கழகங்கள்!
மெச்சியுன் உழைப்புக்கு
மிகுதியாய்ப் பட்டங்கள்!

'ஆடிப் பட்ட'மென்றும்
'ஐப்பசிப் பட்ட'மென்றும்
பாடுபட்டு 'மார்கழிப்
பட்ட' மென்றும் பெறுகின்றாய்!


வயல்மொழியில் இலக்கியங்கள்
வழங்குகிறாய்; எங்களது
வயிறுகள்உன் வாசகர்கள்;
வரப்புகளே நூலகங்கள்!


வயற்படு பொருள்யாவும்
வளரும் தொழில்களுக்கு
'செயப்படு பொருளா'கச்
சேமித்துத் தருபவனே!

இயற்றும் நீயின்றேல்
இவ்வுலகம் 'பயனிலை'யே!
இயக்கும் 'எழுவாய்'நீ
எங்கள் உலைவாய்நீ!

நாற்றங்கால் நடனமிட,
நடவுவயல் பாட்டிசைக்க,
ஏற்றக்கோல் கீழ்மேலாய்
ஏழிசைக்குச் சால்பிடிக்க,

சேற்றுக்கால் கூத்தாட
சிறுவரப்புத் திரைபிடிக்க
ஆற்றுக்கால் சலங்கைகட்டி,
ஆடிவரும் வாய்க்கால்கள்!








கால்வாய்ப் பாசனத்தால்
கழனிகளும் வயிறாறும்!
கால்வாயில் நீர்ப்பெருகிக்
கரையிரண்டும் வழிந்தோடும்!

கால்வாய்க் கரையோரம்
கைக்குவரும் ஆகாரம்
கால்வாய்க் கஞ்சிதான்உன்
கண்ணீரும் சேர்ந்ததுதான்!

கல்லிலும் செம்பிலும்
கடவுளைத் தேடுகின்றோம்!
நெல்லிலும் கரும்பிலும்
நீயவனைக் காட்டுகிறாய்!

வயற்கால்கள் நீவாழ்த்தி
வணங்குகிற ஏர்க்கால்கள்!
உயிர்க்கால்கள் நடப்பதற்கு
உதவுவன உன்கால்கள்!

பயிர்க்கால்கள் தலைவைத்துப்
பல்லக்கு சுமக்கும்உன்
மயிர்க்கால்கள் அனைத்துக்கும்
மகுடங்கள் சூட்டுகிறேன்!



# இந்திய மணிக்கொடி இடுப்பாடை...


உணவுமண்டலத்தை
உருவாக்கும் இவர்களுக்குக்
கனவு மண்டலத்தில்
கையளவு கஞ்சிவரும்!

உணவுக்கும் வயிற்றுக்கும்
உடன்படிக்கை இல்லாமல்
கனவுக்கும் வாழ்க்கைக்கும்
கடைசிவரை போராட்டம்!

கட்டுண்ட ஏழையின்
கண்ணீரைத் துடைப்பதற்குக்
கட்சிக் கொடியெதுவும்
கைக்குட்டை ஆகவில்லை!

கந்தையும் இல்லாமல்
கலங்குகின்ற ஏழைக்கு
இந்திய மணிக்கொடியும்
இடுப்பாடை யாகவில்லை!

தருமச் சக்கரத்தின்
தடம்புரண்டு போனதனால்
வறுமைச் சக்கரத்தில் - இவர்
வாழ்க்கைத்தேர் உருள்கிறது!





# உலகின் இருட்டை வெளியேற்று

விண்ணைக் குலுக்கு மனிதாநீ -ஒரு
விண்மீன் கூட உதிராமல்!
மண்ணைப் புரட்டு மனிதாநீ -சிறு
மண்புழு கூட நசுங்காமல்!

நேற்றைய பகைமை இனியெதற்கு? -உன்
நிழலின் மீதா வெறுப்புனக்கு?
சோற்றுப் பானையைப் பொதுவில்வை - இனி
சுதந்தரச் சுடரை நடுவில்வை!

ஒவ்வொரு முகமும் உறவுமுகம் -உன்
ஒவ்வொரு மூச்சையும் அன்பாக்கு!
ஒவ்வொரு இதயமும் பகலாக்கு -நம்
உலகின் இருட்டை வெளியேற்று!

'வேற்றுநாடு' 'என்னாடு' - எனும்
வேற்றுமை யாவும் தூக்கியெறி!
காற்றும் உனக்குக் கைகட்டும் -பெருங்
கடலும் உனக்குக் கைகொட்டும்!

பகையில் லாத உள்ளங்கள்;
பசியில் லாதஇல்லங்கள்!
அகிலம் காணும் அக்காலம்;
அதுதான் பூமியின் பொற்காலம்!


# ஊசிகள் செய்வோம்...


வெட்டுவ தற்குக் கோடரி உயர்த்திக்
கொட்டி முழக்கும் தோழனே, நிதானி!

பிளக்கும் கருவியை
இறக்கு; உருக்கு!
பிளக்கும் ஒற்றைக்
கோடரி யில்நாம்
தைக்கும் ஊசிகள்
ஆயிரம் செய்யலாம்!
தாக்கும் ஆயுதம்
தைக்கவும் உதவுமே!

உனது உடையின் கிழிசலை மட்டுமா?
உலகப் படத்தின் கிழிசலும் தைக்கலாம்!

கொண்டுவா தோழனே,
கோடரியை நாம்
துண்டுகள் போடுவோம்,
ஊசிகள் செய்யவே!





# இயற்கை எழில்

# அழகின் உற்சவம்


அழகைக் கண்டு
மகிழ்பவன் நான்;
அதனைக் கவியில்
புகழ்பவன் நான்!


வானம் பூமி
எங்கிலும் இயற்கை
வரைந்த வண்ணக் கோலங்கள்!
காணும் இடங்கள்
காட்சி அழகுகள்
கண்கள் செய்த யாகங்கள்!

□

அந்திச் செவ்வான்
சூரிய வட்டம்
அடடா! அழகின் உச்சம்!

சிந்தும் நிலவொளி
சித்திரப் பந்தல்
அந்தி அழகின் மிச்சம்!







□

வான வில்லை
உடுத்தும் போது
வானத்திற் கது அழகுதான்

வெண் மேகத்தை
உடுக்கும் போதும்
விண்ணுக் கதுவோர் அழகுதான்!

□


வண்ணத் தாமரை
பூத்துக் குலுங்கும்
தண்ணீர்க் குளமும் அழகுதான்!

தண்ணீர் மட்டும்
நிரம்பிய குளத்துத்
தன்னடக் கமும் அழகுதான்!

□

விண்முகத் திற்கு
வெளிச்சப் பொட்டு
வெள்ளை நிலவு அழகுதான்!

வெண்ணி லவுக்கு
விடுமுறை நாளில்
வெட்ட வெளியும் அழகுதான்!





□

பூக்கூட் டத்தின்
புதுமு கங்களில்
புன்னகையும் ஓர் அழகுதான்!

பூக்க மறந்த
மரகதப் பச்சைப்
புல்வெளி கூட அழகுதான்!

□


வண்ணக் கலவையில்
ரங் கோலி
கண்ணைக் கவரும் அழகுதான்!

வளைந்த வெள்ளைக்
கோட்டுப் புள்ளியில்
வாசல் கோலமும் அழகுதான்!

□

பழகிப் பார்க்கப்
பார்க்கும் எதிலும்
பளிச்சிடும் அழகின் உற்சவம்!

அழகின் உற்சவம்
இல்லா விட்டால்
உலகம் என்பது வெறும்சவம்!





# அழகு உன் விழியில்!

அழகைப் போற்றி
அருமை நண்பர்
ஆலவட்டம் சுற்றுகிறார்!

அழகு ஒன்றே
உலகு என்றிவர்
அந்தப் போதையில் சுழலுகிறார்!


□

காம்பில் சிறிய
கோணல் என்றால் - அது
கனியின் சுவையைக் குறைக்குமா?

வேர்கள் வளைந்து
இருந்தால் என்ன - அவை
நீரை உறிஞ்ச மறுக்குமா?

கோணல் கிளையெனில்
தேனீக் கூட்டம்
கூடு கட்டாமல் ஒதுக்குமா?

கண்ணில் அழகு
இருந்தால் பூவின்
காம்பிலும் அழகைப் பார்க்கலாம்!





□

முத்திரை ஓவியம்
மோன லிசாவின்
சித்திரம் அழகின் பெட்டகம்!

பூமுகம் அல்ல;
மோன லிசாவின்
புன்னகை தானே பேரழகு!

□

மங்கை லைலா
கறுப்பு என்றால்
மஜ்னு கண்ணால் பாருங்கள்!


தங்க நிறம்தான்
தகுதி என்றால் - நம்
தங்கை நிறமும் பாருங்கள்!

கண்ணில் உண்மைக்
காதல் இருந்தால்
காதலி என்பவள் தேவதை!

□

அழகில்லை எனப்
பெண்ணை மறுப்பது
ஆண்மக னுக்கு அழகில்லை!

அழகுக் குறைவே
தகுதிக் குறைவெனில்
ஆறறிவுக்குப் பொருளில்லை!





## வானமே...


தனி இயற்கை அரசாங்கத்
தலைமைச் செயலகம்நீ!
பனிநிலவும் பகலவனும்
பாடுபடும் வயல்வெளிநீ!

விண்மீன் களுக்கோர்
வேலைவாய்ப் பலுவலகம்;
வெண்மேகக் கூட்டத்தின்
விளையாட்டு மைதானம்!

விஞ்ஞானி களுக்கோர்
விரிவுரைக் கூடம்நீ!
மெய்ஞ்ஞானி களுக்கு
'வீட்டு'வசதி வாரியம்நீ!

கண்டம் கடப்பதற்கும்,
கண்காணாப் பல்வேறு
அண்டம் விரைவதற்கும்
அறிவியல் பாதைநீ!


மழைநீ எழுதுகிற
மரபுக் கவிதை; அதைப்
'பொழிப்பு'ரை யாகவே
பூமிக்குத் தருகிறாய்!



ஒளிநீ தீட்டுகிற
        உரைநடைக் கவிதை; இதைத்
தெளிவுரை யாகவே
        தெருவெங்கும் வழங்குகிறாய்!

விண்மீது வில்லை
        வளைப்பது நீ;ஆனால்
உன்மீது கணைகளை
        ஏவுவது நாங்கள்தான்!

'எதுவரைக்கும் உன்எல்லை?'
        என்பதற்கு வரம்பில்லை;
'இதுவரைக்கும்' எனக்கண்டு
        இட்டதொரு வேலியில்லை!






# வானத்துத் தேனடைகள்!

நீர்ச்சுரங்கம்; மேகம்நீ
நீரின் விதைக்குடும்பம்!
நீரின் விதைகளை
நிலத்தில் விதைப்பவன் நீ!

தண்ணீரின் கதைச் சுருக்கம்;
தான்விரிந்தால் மழைப் பெருக்கம்!
மண்ணீரம் உன்னீரம்;
மழைவழங்கும் தேனடைநீ!

கைம்மாறு கருதாமல்
கடன்புரிவாய்; பூமியிலோ
கை-மாறி னால்தான்
கதையே நடக்கிறது!

கல்லூரி வாசலை நீ
கண்டதில்லை; என்றாலும்
கல்மழையைப் பொழிகின்றாய்;
கற்றது எவ்விடத்தில்?




தேவர் உலகத்தைத்
          தெரியக் கண்டதில்லை;
ஆவி உலகத்தின்
          அத்தாட்சி ஆனாய்நீ!

நிலமகளும் நீயும்
          நெடுநாள் காதலர்கள்;
சிலசமயம் உங்களுக்குள்
          சிற்றின்பம் நிகழ்வதுண்டு!

தேவியை நீர்வடிவில்
          தீண்டித் தழுவுகிறாய்;
ஆவி வடிவத்தில்
          அவளுன்னை அணைக்கின்றாள்!

வெற்றுடலின் தழுவல்கள்தான்
          வேட்கையெனக் காட்டாமல்
முற்றும் நூதனமாய்
          மோகத்தை விளக்குகிறாய்!





# வானம் எங்கள் காணி நிலம்!


மண்ஞா னத்தைப் படித்து முடித்த
மனிதச் சிறுபறவை
விண்ஞா னத்தைக் கற்க விரிக்கும்
விஞ்ஞானச் சிறகை!

காற்று நடக்கும் வானில் எங்கள்
கால்கள் நடந்துவரும்
காற்றில் மிதக்கும் வீடுகள் கட்டக்
கைகள் உயர்ந்துவரும்!

நுண்ணிய ஆடைகள் மேகப் பஞ்சில்
நெய்யும் நூற்பாலை
மின்னல் கொடியில் மின்சா ரப்பூ
கொய்யும் பூங்கோதை!

எல்லையில் லாமல் விரிந்த வானம்
எங்கள் காணிநிலம்
பல்பயிர்ப் பண்ணைகள் அண்ட வெளியில்
படைக்கும் நூறுவளம்!

தொடுவா னத்தில் தொழிற் பேட்டைகள்
தொடங்கப் போகின்றோம்
நடுவா னத்தில் பொதுவழிபாடு
நடத்த வருகின்றோம்!






எண்ணில் லாமல் நாங்கள் அனுப்பும்
ஏவுகணைக் கருவி
விண்மீன் மணிகளைக் கொத்தித் திரியும்
விஞ்ஞானக் குருவி!

புலியும் மானும் தேனில வுக்கு
நிலவை நாடிவரும்!
நிலவுப் பெண்ணின் காதல் கடிதம்
நிலத்தைத் தேடிவரும்!

மண்ணின் மார்பில் விஞ்ஞா னப்பால்
குடிக்கும் ஆகாயம்;
கண்ணாய் இமையாய்ப் பூமியும் வானமும்
கைகுலுக்கும் காலம்!

இந்திர லோகம் என்பதெல் லாம்இனி
எந்திர லோகமடா;
கந்தர் வர்க்கும் மனிதர் வழங்கும்
கற்பகச் சோலையடா!

பூமியின் புதல்வர் விண்ணர சாள்கிற
பொன்யுகம் மலர்கிறது!
நாமினி வானவர் ஆகிற நாளிது;
மானுடம் வெல்கிறது!





# மலையின் நாக்கு

நதியே -

ஓரக் கரையிரண்டும்
உதடுகளாய்க் காட்சிதர
நீரைச் சுரந்தபடி
நீண்டுவரும் 'மலைநாக்கே!'

உன்னுடைய உமிழ்நீர்தான்
உவர்க்கடலாய் ஆகியதோ?
உன்நாக்கு அலைகடலில்
உப்புருசி பார்க்கிறதோ?

நீர்வேட்கை தீர்ப்பதற்கு
நெடியமலை தன்னுடைய
நீர்நாக்கைக் கடல்வரைக்கும்
நீட்டிக்கொண் டிருக்கிறதோ?

ஊற்றோடும் உன்நாவில்
ஓயாத'நீர்ப் பேச்சு'
காற்றோடு நீநடத்தும்
கலந்துரை யாடல்களோ?


கன்னியரின் அரைச்சிரிப்பும்
கரையோர மரச்சிரிப்பும்
உன்னுதட்டு நுரைச்சிரிப்பை
உவமிக்கப் போதாவே!

# இமயம் ஒரு நடுகல்

நதிகளின் தாய்வீ டே!எம்
        நாட்டினில் இயற்கை தந்த
நிதியமே; தேசம் காக்கும்
        நிலையமே; நெடிய வேலி!
அதிகமுன் தொடர்ச்சி; மண்ணில்
        அதிசயம் உன் எழுச்சி!
மதிப்பிடும் சிகரம் எங்கள்
        மனங்களின் பெருவ ளர்ச்சி!

பொன்னிறக் கதிர வன்தன்
        பொன்னொளிக் கதிரை யெல்லாம்,
உன்னுடல் உரசிப் பார்க்கும்
        உரைகல்நீ ஆன தாலே,
தன்னுடல் 'வெள்ளை' யைநீ
        தங்கமாய் மாற்றிக் கொள்வாய்;
பொன்னுடல் உனக்குண் டாகும்,
        'பொன்மலை' என்ற ழைப்பேன்!

கூன்நிலா ஒளிப்பிள் ளைகள்
        குதித்தாடும் பனிச்ச றுக்கு!
வான்மேக முந்தன் மார்பில்
        வடிகின்ற தேனை உண்ணும்;
தேன்கூட்டை அழிப்ப தற்குத்
        திரிகின்ற வேடர் உன்மேல்
மீன்கூட்டம் கண்டு விட்டு
        மெத்தவும் வியந்து போவார்!






பகலவன் அருகில் வந்து
        பனியாடை தொடுவான்; நாணம்
மிகவரும்; உருகிப் போவாய்!
        மேலாடை உன்னை விட்டு
நெகிழ்ந்திட அருவி என்னும்
        நீராடை புனைந்து கொள்வாய்!
சுகம்பெறத் தடையி தென்று
        சூரியன் சுடுவான் நீரை!

தாயகம் பெருமை கொள்ளத்
        தம்புகழ் நிறுவிச் சென்ற
தூயவர் வீர வாழ்வைத்
        தொண்டினை எழுதிக் கொண்டு
நாயகர் தொகுதிக் கிங்கே
        நடுகல்நீ, இதனை மற்ற
தேயங்கட் குணர்த்து கின்றாய்;
        தேசத்தை உயர்த்து கின்றாய்!

முடித்தலை இமய மே,நீ
        முடியர சென்பார்; ஆனால்,
குடியர சிந்த நாட்டின்
        குடியாகிக் கொடிசு மந்தாய்!
கொடியுன்மீ தசையும் காட்சி
        குமரியி லிருந்து கண்டேன்!
நெடியஉன் வடிவை எந்தன்
        நெஞ்சினில் அடக்கி விட்டேன்!




# தண்ணீரில் பள்ளங்கள்

மண்மீது பள்ளங்கள் நிறைய உண்டு;
மலைமீதும் பள்ளங்கள் இருப்ப துண்டு;
தண்ணீர்போய்ப் பள்ளத்தில் தேங்கும்; அந்தத்
தண்ணீரில் பள்ளங்கள் பார்த்த துண்டா?

மண்மீது தேங்கியுள்ள நீர்ப்ப ரப்பில்
மழைச்சரங்கள் காலூன்றி இறங்கும் போது
தண்ணீரில் அங்கங்கே பள்ளம் தோன்றும்;
தண்ணீர்மேல் மழைநடக்கும் தடங்கள் காட்டும்!

கண்ணெதிரே மழை'முத்து' நிரப்பி யாடும்
கணநேரச் சிறுபல்லாங் குழிகள் ஆகும்!
பண்ணிசைக்க மழைக்கரங்கள் தட்டும் போதும்
பள்ளங்கள் சங்கீத இசைக்கிண் ணங்கள்!

விண்ணின்று குதிக்கின்ற மழைக்கா லுக்கு
விண்ணென்று வலிக்காமல் மெத்தென் றாகி
நுண்ணியதாய்க் குழிந்தெழும்பும் தண்ணீர் மேடை
நுரைப்பஞ்சு மெத்தையினும் மென்மை யாக!






துளைக்கின்ற மழைக்கம்பி யாவும்நீர்மேல்
துரப்பணங்கள் போடுவதேன்? நீரின் ஆழம்
அளப்பதற்கா? தண்ணீரைப் பொத்த லாக்கும்
அவை'திரவ அம்புகளா?' நீர்மேல் போரா?

மளமளென நுரைவெண்ணெய் கடைந்தெ டுக்கும்
மத்துகளா? நீரடியில் குவிந்தி ருக்கும்
வளமான செல்வத்தை அகழ்ந்தெ டுக்க
வளைதோண்டும் கடப்பாரை முயற்சி தானா?

அலையில்பெருங் குமிழிகளோ கவிழ்த்து வைத்த
அரைக்கோளக் கண்ணாடிக் குடங்கள்; அந்த
அலைநீரை முகந்தெடுக்க முயற்சி செய்து
ஆற்றலில்லா அரைக்குடங்கள் உடைந்து போகும்!

மிகச்சிறிய நீர்க்குமிழிக் கூட்டம் யாவும்
'மிதக்கின்ற முத்துகள்'போல் தோன்றக் காற்று
வெகுவிரைவாய்ச் சேர்ந்தெடுக்கச் செல்லும்; தொ
வேகத்தில் அவைநொறுங்கத் திகைத்து நிற்கும்!





# வள்ளல் பரம்பரை

மனிதா,


கையில் எதற்குக் கோடரி -அதன்
காம்பில் பார்என் முகவரி!
வெயில், கொஞ்சம் அருகில்வா - என்
வேண்டு கோளினை வைக்கவா?

மரக்கறி யாகப் பலன்தரும் - இந்த
மரம் கரி யாகியும் பயன்தரும்!
மரத்துப் போனதா உன்மனம் - அட
மரித்துப் போகவா எம்மினம்?

கார்பன் நஞ்சை விழுங்கியே - உயிர்க்
காற்றை உனக்குத் தருகிறேன்!
யாருன் பசியைப் போக்கினார் - உணவு
யாசகம் என்னிடம் பெறுகிறாய்!

அமரவாழ்வு நான் பெற்றபின் - நீ
அமர இருக்கைகள் தருகிறேன்
நிமிர நடக்கநீ வண்டிநான் - நாளை
நீட்டிப் படுத்தால் 'பெட்டி' நான்!

இடுப்பைச் சுற்றி உடுப்புகள் - எங்கே
எரியும் சோற்று அடுப்புகள்?
கொடுக்கும் வள்ளல் பரம்பரை - என்
கொடையில் தான் உன் பரம்பரை!





# உள்ளப் பரப்பில் வெள்ளையடி!

சுற்றுப் புறத்தைச் சுற்றிப்பார் - அட
சூழல் கெட்டுக் கிடப்பதைப்பார்!
சுற்றம் தழுவ ஒப்புரவு - நம்
சுற்றுச் சூழலில் துப்புரவு!

இரண்டும் குறைந்தால் உள்ளும் புறமும்
எத்தனை எத்தனை தொந்தரவு?
துரும்பும் தூசியும் புகையும் மிகுந்தால்
தூய்மை வாழ்வில் பின்னடைவு!

கரிப்புகை கக்கும் வாகனங் களுக்குக்
காற்று மண்டலம் கழிப்பி டமா?
திறந்த வெளியில் ஆலைக் கழிவுகள்
தேக்கிய திரவக் குப்பைகளா?


நாலு கால்களின் நகல்கள் ஆகி
நம்மவர் நடத்தும் தினக் கடன்கள்;
காலை மாலை சாலைச் சந்திகள்
கட்டண மில்லாக் கழிப்பிடங்கள்!


ஊறும் நீரும் நஞ்சாய் மாறி
உயிர்க் கொலை புரிவது மாறாதா?
ஆறறி வுக்குத் தூய்மை பற்றிய
அடிப்படை அறிவே கிடையாதா?

மண்ணுக் கென்ன மாத்திரைகள்?
நீருக் கென்ன நோய்த் தடுப்பு?
விண்ணுக் கென்ன மருத்து வங்கள்?
காற்றுக் கென்ன தனிச் சிகிச்சை?

யோசி, யோசி, வாலிபனே, உன்
உள்ளப் பரப்பில் வெள்ளை யடி!
ஓசோன் படலக் கிழிசல் தைக்க
ஊசிகள் புதிதாய்க் கண்டு பிடி!

வாலிபனே, உன் சுட்டு விரல்தான்
வானத்துக்குக் குடைக் காம்பு!
ஓலம் எதற்கு? உன் உள்ளங் கையில்
உலக உருண்டையை நீ தாங்கு!







# காற்றைச் சலவை செய்


சூரியக் கோளம் அழுக்கானால் -அதைச்
சுத்தப் படுத்தும் உன்வியர்வை!
தூரக் கிழக்கு வான்பரப்பில் - மிகும்
தூசியைத் துடைக்கும் உன்கைகள்!

நிலவின் கறைகள் துடைக்கப்போ -அங்கு
நிழல்தரும் மரங்கள் வளர்க்கப்போ!
உலகத் தரையைக் கழுவிவிடு -முதலில்
உனது நகத்தின் அழுக்கையெடு!


நாளும் கழிவுக ளால் நாறி-நஞ்சாய்
நீளும் நதிகளைக் குளிப்பாட்டு;
கோளும் விண்மீன் தொகுதிகளும் -உன்
தோளை வலம்வர வழிகாட்டு!

நல்ல காற்று மண்டலமும் - தினம்
நச்சுத் தன்மை படிகிறதே!
உள்ளெழும் மூச்சுக் காற்றாலே - நீ
உலவும் காற்றைச் சலவைசெய்!

சுற்றுச் சூழலைக் கட்டுப்படுத்த -உன்
மக்கள் தொகையை மட்டுப்படுத்து!
சுற்றம் தழுவு; சுற்றத் தோடு
சுற்றுச்சூழல் 'சுத்தம் தழுவு!'



# மலரினும் மெல்லிது





# முழுமதியில் பிறைநிலவு!

பொன்னி நதிக்கரையில்
        பூக்குலங்கள் அணிவகுக்கும்;
கன்னி இளமங்கை
        கைநிறைய மலர்கொய்தாள்!

'பூந்தோட்டம் யாருக்குப்
        பூப்பறிக் கிறதென்'ன்றேன்;
மாந்தளிர் திரும்பி,
        மையலுடன் நகைத்தாள்!

'முழுநிலவு பாருங்கள்!'
        முறுவலுடன் காட்டினாள்;
'முழுமதியில் பிறைநிலவு
        முளைக்குமா?' எனக் கேட்டேன்!

புரியாமல் நின்றாள் என்
        புதிரைக் கேட்டுவிட்டு;
தெரியாத பெண்ணுக்குத்
        தெளிவுரை தந்தேன்நான்!


'தோன்றும்உன் இனிய முகம்
        தூய முழு நிலவா'கும்;
மூன்றாம் 'பிறை'யுந்தன்
        'முறுவலி'லே உருவாகும்!'

# கண்ணிமையில் தூது

கண்ணிமையில் தூதுவிட்டு
கைவிரல்கள் மேனிதொட்டு
காதலியோ அசைந்துவரும்
பூரதம் - இவள்
மின்னலிடை ஆடிவர
மீன்விழிகள் ஓடிவர
மின்மினியாய்க் காட்டுகிற
நாடகம்!

ஆசைமனப் பூங்குயில்என்
ஆருயிரில் கலந்தஎழில்
ஆவியிலே கட்டிவைத்தேன்
ஆலயம் -அட
பூசைவழி பாடுகளில்
புத்திசெல்ல வில்லையந்தப்
பூமடியில் தானெந்தன்
காலமும்!

முத்தமிட்டு முத்தமிட்டு
முக்கனியைத் தோற்கடித்து
மோகவெறி யூட்டுகிற
காவியம்!





சித்திரைக்கும் பங்குனிக்கும்
சிந்தையிலே பங்கு வைத்து
சித்தம்தடுமாற வைக்கும்
ஓவியம்!

தேவியிவள் பூமடியைத்
தாய்மடியாய் நான் நினைத்து
தேடுகிறேன் தேடுகிறேன்
நிம்மதி!

தூயமன அன்புதனை
தேவியவள் வழங்கும்போது
தூரமில்லை தூரமில்லை
சந்நதி!

# இமைகள் விழியின் சுமைகள்!

பொழிலருகில் நின்றிருந்தேன்; பொங்கும் காதல்
பொற்கனவின் புதுப்பொலிவை அள்ளிக் கொண்டு
எழிலழகி ஒருத்தியென் எதிரில் வந்தாள்!
இளநிலவு; கலையமுது; பருவப் பூங்கா!


மொழியழகை இதழ்க்கதவு மூடி வைக்க
மோனவிழிக் குறிப்புரையை மொழியக் கண்டேன்!
விழியழகைப் பருகியபின் கொடுத்தேன் நெஞ்சம்;
விரல்நுனியால் நிலங்கீறி அவளும் தந்தாள்!


'தந்துவிட்டேன் கேளாமல் நெஞ்சை' என்றேன்;
'தந்ததைநான் என்னோடு தந்தேன்' என்றாள்!
தந்ததையும் தருவதையும் சொல்லிச் சொல்லி
தனிக்கொடியாள் கன்னங்கள் சிவக்க வைத்தேன்!

முந்திவிட்ட கடைவிழிகள் இமைத்தல் கண்டு,
'முறிந்துவிட்ட தென்னெஞ்சம்' என்று சொன்னேன்!
'இந்தவிழிக் கிமைகூட சுமைதான்' என்றாள்;
'இமைக்காத காதல்விழி வேண்டும்' என்றேன்!

புன்னகையில் புதிரெழுதிக் காட்டிவிட்டு
பூவிழியில் விடைசொன்னாள்; வியந்து நின்றேன்!
என்தோளைத் தழுவுதற்கு வந்த கைகள்
இடைவந்த இளந்தென்றல் குறும்பி னாலே

தன்தோளைப் போர்த்துகிற செய்கை கண்டேன்;
தவிப்புக்கு என்மார்பைத் தஞ்சம் தந்தேன்!
'நின்நிழலே எனக்குநிழல்' என்றாள் பாவை;
நிழலுக்கு நிழல்தந்தேன்; நிழல்க ளானோம்!







# புல்மேயும் விழிமான்கள்

கண்கள் அருகே இமைமயிர்கள்
கரும்புல் லாகக் காட்சிதர
கண்ணிமை வரப்பில் நுனிப்புல்லைக்
கடித்துப் பார்த்த விழிமான்கள்,

உண்ணுவ தற்குச் சுவையில்லா
உப்புப் புல்லெனத் துப்பிவிடும்;
உண்ணுவ தற்குத் தெவிட்டாத
உணவைக் கண்டதும் துள்ளிவரும்!

விரையும் பார்வைப் பசிதீர
விருந்து படைக்கும் காதலனின்
விரிந்த மார்புப் புல்வெளியில்
விழிமான் இரண்டும் புல்மேயும்1

அருகில் நாணம் வரக்கண்டு
அவசர மேய்ச்சல் முடித்தோடும்;
புருவ நிழலில் அமர்ந்தபடி
புல்வெளி விருந்தை அசைபோடும்!

# விழியின் விசிறிகள்

நேரசையில் முதலடியை வைத்தாள் மங்கை;
நிரையசையில் அடுத்தஅடி எடுத்து வைத்தாள்!
நேரசையில் இவளழகு நடைப யின்றாள்;
அடியால் என்நெஞ்சில் தடம்ப தித்தாள்!
நேரசைதல் போலசைந்தாள்; தேடி வந்த
தேவியவள் அசைவுகளில் இசைவைச் சொன்னாள்!
திசைவில் கலைவடிவை எழுதிக் கொண்டு
நிலையசைவில் புதுக்கவிதை படிக்க லானேன்!

'தேன்விற்கும் பூக்கடையே!' என்றேன்; பாவை
திகைத்தாள்பின் நாணத்தால் கண்சி வந்தாள்!
'ஏன்விழியில் தீ?' என்றேன்; இமைத்தாள்; அந்த
இடைவேளைக் குள்நெஞ்சம் துடித்துப் போனேன்!
தானந்த விழிவெப்பம் தணிப்ப தற்கு
மங்கைவிழிக் கென்னிமையால் விசிற லானேன்!
மான்விழியோ மைவலையில் மருண்டாள்; நானோ
மான்விரித்த வலையினிலே சிக்கிக் கொண்டேன்!

'மங்கை நீ முன்னிலை;நான் தன்மை; இன்றோ
நாமிணைந்தோம் நாம்தன்மைப் பன்மை' என்றேன்!
மங்கையதை மறுத்துரைத்தாள்; 'உடல்க ளாலே
நாமிருவர்; நாமொருவர் உயிரால்'என்றாள்!
இங்கவளோ புதியஉரை விரித்தாள்; காதல்
இக்கணத்தில் 'நாம்தன்மை ஒருமை' என்றாள்!
'எங்குகற்றாய் இதனைநீ?' என்றேன்; 'நீயா...
இன்னும் 'நான்' முன்னிலையா?' எனச்சி னந்தாள்!

# உயிர்க்கொலைக்கு அஞ்சுகிறேன்!


நேசத்தை மறந்துவிட்டு
நெடுந்தொலைவு போனவனே!
வாசத்தைத் தந்துவிட்டு
வாடுகின்ற மலரானேன்!

வேளைதோறும் தவறாமல்
விருந்தளித்த என்னிதழை
'நாளிதழ்கள்' என்றுரைத்து
நாள்தோறும் படித்திருந்தாய்!

தூரத்து நகருக்குத்
துணைவன்நீ போனபின்பு,
வாரத்துக் கொருமுறைதான்
வந்தென்னைச் சந்தித்தாய்!

வாரத்திற் கொருமுறைநீ
வந்ததனால் நாளிதழை
'வாரஇத ழா'க்கிநீ
வாசித்துக் கொண்டிருந்தாய்!

இங்கதற்கும் தற்காலம்
இடையூறு நேர்ந்ததுஏன்?
'திங்கள் இத'ழாகித்
தேங்கிக் கிடப்பதுஏன்?






'உன்சுவாசம் தானெனக்கு
உட்சுவாசம்' என்றுரைத்தாய்!
'என்சுவாச'மே, இங்கு
என்றைக்குத் திரும்பிடுவாய்?

அன்றைக்கு நீதொட்ட
அந்தந்த இடமெல்லாம்
தென்றல் தொட்டதனால்
தீப்புண்ணாய் மாறியது!

மருந்துடன் வரும்நாளை
மனதுக்குள் எதிர்பார்த்து,
இருந்துன் வழிபார்த்து
இருக்கின்றேன், சாகாமல்!

தன்னுயிரைத் துறக்கின்ற
தற்கொலைக்கு அஞ்சவில்லை - அது
உன்னுயிர் என்பதனால்
உயிர்க்கொலைக்கு அஞ்சுகிறேன்!



# உயிர் சுமக்கும் விழிகள்

கடையோடிடும் கடைகூடிடக்
கவிபாடிடும் விழியில்!
தடைமீறிடும் உடைபோரிடத்
துணைநாடிடும் இடையில்!

கலை மூடிய இளமார்பினில்
கனிமூடிய நெஞ்சில்
சிலைஓவியம், பலகாவியம்
சிந்தும்; எழில்கொஞ்சும்!

நினைவோடிடும் விழியில் நிலா
நிழலாடிடும்; நிழலில்
துணைநோக்கிடும் இனியள்முகம்
தனைநோக்கிடும்; தவிக்கும்!

காலோடிடும் மலர்க்கூந்தலில்
மேலாடையை விரிக்கும்;
நூலோடிடும் இடையில்கனிப்
பூமேடையை அமைக்கும்!

பாலோடிடும் இதழில்சுவைப்
பலகாவியம் வளர்க்கும்!
வாளோடிடும் விழிகள்; அவன்
வரவில் உயிர்சுமக்கும்!


## ஊடல்

அத்தான்!

விண்மீது மின்னல் வெட்டி
விரிசல்கள் வந்ததுண்டா?
மண்மீது கலப்பை கீறி
மண்மேனி புண்ணாயிற்றா?

கண்மீது இமைகள் உரசிக்
காயங்கள் பட்ட துண்டா?
தண்ணீரில் துடுப்பு மோதித்
தழும்புகள் வந்த துண்டா?

கண்ணீரின் வெப்பம் பட்டா
கன்னத்தில் கொப்பு ளங்கள்?
என்மீது உங்கள் கோபம்
இலைமீது காற்று போல!





# நகக் கண்ணால் பார்க்கின்றாள்


விழியிரண்டில் காதலனோ
வினாடிவினா நடத்துகிறான்;
மொழிமறந்த காதலியோ
முதல்விடைக்கே திணறுகிறாள்!

முகக்கண்கள் நாணத்தால்
மூடிக் கொண்டதனால்
நகக்கண்கள் வழியாக
நாயகனைப் பார்க்கின்றாள்!

காதலிதன் தலைதாழ்த்திக்
கால்நகத்தை நோக்குகிறாள்!
காதலனின் முகம்காட்டும்
கண்ணாடி கால்நகமோ?

தலைகுனிந்த கன்னியிவள்
தந்திரத்தை அறியாமல்
நிலைகுலைந்த நாயகனும்
நிலம்நோக்கி நிற்கின்றான்!

அரைவட்டக் கால்நகத்தில்
முழுவட்ட முகம்பார்த்தான்;
தரைதொட்ட விழிகளுடன்
தானும்போ ராடுகிறான்!






புலித்தொகையைப் போர்க்களத்தில்
புறங்கண்ட மாவீரன்
கலித்தொகைக் காதலியின்
கைவிலங்கில் சிறைப்பட்டான்!

குரல்வளையில் ஒலியடங்கிக்
கரவளையில் ஓசையெழும்
விரல்நுனியில் நகம்உரசி
விழிமுனையில் தீப்பிடிக்கும்!

மொழிவிலக்கி வைத்துவிட்டு
'மூச்சுகளே பேச்சாக'
விழிவிளக்கின் வெளிச்சத்தில்
வெட்கத்தால் கரைகின்றாள்!





# என் நிழல் பெண் நிழல்

பூவிழியில் நாணம் பிறக்கும் - அதைப்
புன்னகையும் வாங்கி வளர்க்கும்!
நாவழியில் அச்ச மிருக்கும் - அதை
நகநுனியும் மிச்சம் பிடிக்கும்!

சேர்த்து வைத்துப் பார்க்கும் விழிகள் - அதில்
சிக்கனத்தைக் காட்டும் இமைகள்!
வார்த்தைகளைச் சொல்லும் மனது - அதை
வழிமறித்துக் கொள்ளும் உதடு!

உச்சிமுதல் பாதம் வரைக்கும் - மொழி
உவமைகளைத் தேடித் தவிக்கும்!
கச்சிருக்கும் மார்பின் எடைக்கு - ஒரு
எச்சரிக்கை மங்கை இடைக்கு!

காற்றுபட்டுத் தேய்ந்த உடம்பு - என்
கண்கள் படப் பூத்த அரும்பு!
நேற்றுக்கண்ணில் மாலை கட்டினாள் - என்
நிழலுக்கின்று சேலை கட்டினாள்!

# எரிந்தவன் நீ...
# சாம்பலானவள் நான்!

வள்ளுவன் அடிகளில் வாழ்ந்தேன் என்றாய்;
இளங்கோ அடிகளில் தோய்ந்தேன் என்றாய்!


கம்பன் அடிகளில் கரைந்தேன் என்றாய்;
காந்தி அடிகளைத் தொடர்ந்தேன் என்றாய்!


'பாரதி அடிகளில் தானடி உன்னைப்
பார்த்தேன், நீயென் கண்ணம்மா - இது

மெய்யடி' என்று கையடித் தாய்;உன்
மெய்யடி பற்றி மேலடி வைத்தேன்!

காலடி யோடு நாலடி நடந்த
கண்ணம் மாவின் பாரதி எங்கே?

தீயடி யில்நீ எரிந்தாய்; ஆனால்
சாம்ப லானவள் நான்தான் அன்பனே!








## காதல் செய்வீர்

பூதலத்தில் ஓடும்
புண்ணிய நதியெதுவும்
சாதி அழுக்குகளைச்
சலவை செய்வதில்லை!

காதல் நதிகள் ஒன்றாய்க்
கலக்கும் சங்கமத்தில்
சாதி வெளுக்கிறது
சமத்துவம் படைக்கிறது!

ஆதலினால்
காதல் செய்வீர்
உலகத்தீரே! - அதனாலே
சாதி போம்
பேதம் போம், போம்!



# காதல் உலாக்கள்


ஊரெங்கும் காதல்
உலாக்கள் புயல் வேகம்...

காதல் மடலாகும்
கைகள் தொடலாகும்;
ஈதல் உடலாகும்;
இறுதியிலே கடலாகும்!

கடற்கரையில் காதலனின்
கைகளிலே அரங்கேறி,
உடற்கறையைக் கழுவுதற்கு
உவர்க்கடலை நாடுகிறாள்!

தோணிக்குப் பக்கத்தில்
தொட்டுக் கலந்தபின்பு,
மேனிகள் கடல் நடுவே
மிதக்கும் தோணிகளாய்!

பாலியல் தூண்டல்களில்
பருவங்கள் பாழாக
வேலிகள் இல்லாமல்
வீணாகும் வாலிபங்கள்!





உளவறியாமல் அளவுகள் மீறி
ஒழுக்கம் களைந்து விடும்!
களவுகள் போகும் நிலவுகள்மாறாக்
களங்கம் சுமந்து வரும்!

பிஞ்சுகளின் காதல்
பேருந்துத் தடங்களிலே!
தஞ்சம் அடைவதுவோ
தண்டவாளப் பாதையிலே!

முறுக்கிய இளங்காதல்
மூன்றுமுடிச் சில்லாமல்
சுருக்கில், ஒருமுடிச்சில்
சொர்க்கத்தைத் தேடுவதா?

தவமடா... தவம், காதல்!
தளிர்களிதை அறியாமல்
அவசரக் காதல்களில்
அழுக்கடைந்த மேனிகளை

நெருப்புக் குளியல்களில்
நிலை குலையச் செய்கிறது!

பூக்குலங்கள் தீக்குளிக்கும்
பொல்லாங்கு குறையாதா?
தாய்க்குலங்கள் காதலுக்குத்
தற்கொலைதான் கழுவாயா?

# இமைக்குக் கீழே என் குடிசை


அந்தப் புரத்து நாயகிநீ -என்
அருமை மனைவி; உயிர்த்துணைவி!
எந்தப் புறத்தில் பார்த்தாலும் - ஓ
எங்கும் எதிலும் உன்னுருவம்!


இதயம் நீயே என்வானம் - உன்
இமைக்குக் கீழே என் குடிசை;
உதயம் உனது பூவிழியில் - என்
உலகம் உனது காலடியில்!

முதலில் பார்த்த ஒருகணத்தில் - நம்
முந்தைய பிறவித் தொடர்பறிந்தேன்;
புதுமை யான உணர்ச்சியடி - இது
போன பிறவிச் சொந்தமடி!

செயற்கைக் காரணம் ஏதுமில்லை - நம்
செய்கை காரியம் ஏதுமில்லை;
இயற்கையாக ஊற்றெடுத்து - நம்
இதயம் ஒன்றாய்க் கலந்ததடி!

கூர்மை யான நுண்ணறிவு - உன்
குறும்புப் பேச்சு, பிடிவாதம்;
நேர்மை யான நன்னடத்தை - உன்
நெஞ்சம் முழுதும் தன்னடக்கம்!







நானும் நீயும் 'நாம்' ஆனோம் - ஆம்
நாமில் இருவர் ஒன்றானோம்;
தேனே இதனால் நமக்குள்ளே - தினம்
தினமும் சிந்தனை ஒன்றாகும்!

'புதிய விடியல்' உன் கழுத்தில் - நான்
புனிதத் திருநாண் அணிவித்தேன் -என்
இதயத் திற்குத் தாலிகட்டி - இது
'என்னுயிர் முடிச்சு' எனச் சொன்னாய்!

ஓரித யத்தின் இயக்கத்தில் - நம்
உடல்கள் இரண்டும் உலவிவரும்!
யாருடல்? யாருயிர்? எனக்கேட்டால் -நம்
இருவர் விடையும் ஒன்றாகும்!

அத்தான் என்கிற உச்சரிப்பால் - என்
ஆயுளை நீட்டி நிச்சயித்தாய்!
எத்தனை எத்தனை பணிவிடைகள் - இதில்
எனக்கு நீயும் இன்னொருதாய்!

மலரே நீயென் உயிர்வாழ்க்கை - என்
மனமே உனக்குக் காணிக்கை!
உலகே மறந்து போகிறது - அடி
உன்முகம் தரிசனம் தரும்பொழுது!

யுகங்கள் கோடி ஆனாலும் - நம்
முகங்கள் நமக்கு மறந்திடுமோ?
யுகங்கள் நமக்கொரு இடைவெளியா? - இந்த
உலகம் நமக்கொரு பெருந்தடையா?

ஆயிரம் பிறவிகள் எடுத்தாலும் - என்
ஆருயிர்த் துணைவி நீதானே!
காவியம் எத்தனை படைத்தாலும் -என்
காவியத் தலைவி நீதானே!


பூவைப் போல்நீ சிரிக்கையிலே - உன்
புன்னகை பன்னீர் தெளிக்கிறது;
நாவை அசைத்துப் பேசுகையில் - என்
நரம்பில் கவிதை துடிக்கிறது!


நேசம்மிக்க உன் பார்வை -என்
நெஞ்சில் வெளிச்சம் தருகிறது;
பாசம் மிக்க இதழமுதம் - என்
பசியை மறக்கச் செய்கிறது!

செல்ல மாகச் சிணுங்குகையில் - என்
சிந்தை முழுதும் தேன்பாயும்;
மெல்ல நடக்கும் உன்பாதம் - அந்த
மெல்லடி எனக்கு மனப்பாடம்!

'அந்த'உடையில் வரும்பொழுது - என்
ஆவியைப் பறிக்கும் தேவதைநீ!
அந்த உடையில் உன்தோற்றம் -அட
அற்புதம்! அழகுப் பூந்தோட்டம்!

பாதையில் நடந்தால் பலருன்னைப்
பார்ப்பார் எனக்கது பொறுக்காது;
வீதியில் நடக்க வேண்டாம்நீ - என்
விழிகளில் நடந்து வாபோதும்!







முற்றா நெஞ்சின் நினைவுகளும்
முதிரா ஆசைக் கனவுகளும்
ஒற்றை நெஞ்சில் ஒருகோடி - என்
ஊமைத் துயரம் பலகோடி!

காலம் வளர்த்த கனவுகளை -என்
கண்ணீர்த் துளிகள் சுமந்துவரும்!
நாளும் வளர்த்த ஆசைகளை - என்
நரம்புகள் கூடச் சொல்லியழும்!

மணக்கும் முல்லைப் பூச்சரமே - உன்
மார்பில் எனது முகம்புதைத்து
கனக்கும் சுமைகளை இறக்கிவைத்தேன் - என்
கண்ணீர்த் துளிகளைத் துடைத்துவிட்டாய்!

மென்மை யான வீணைநீ -உன்னை
மீட்டி யிசைக்கும் பாடகன்நான்!
பெண்மயில் என்னுயிர் மூச்சில்தான்! - நீ
பெண்ணாய் மாறிய இன்னொருநான்!

உயிரின் அணுக்கள் ஒவ்வொன்றும்
உன்பெய ரைத்தான் உச்சரிக்கும் - நான்
உயர உயரப் பறந்தாலும் - என்
உள்ளம் உன்னிடம் குடியிருக்கும்!


வாழும் காலம் உன்னோடு - நான்
வாழுவ தற்கே என்விருப்பம்;
சாகும்போது உன்மடியில் - நான்
சாய்ந்தால் அதுதான் என்சொர்க்கம்!


# தேவை -
# சிலர் துறவு...

முரசறையும் அழகு சிலை,
பருவ மேனி;
மோகனத்தை வாகனமாய்க்
கொண்ட பாவை!
அரசியிவள், வேசியரில்
'அல்லி' என்னும்
அழகியிவள்; பழகுபவர்
கையில் வீணை!

சரசமிவள் மதுரகலை;
பருவத் திண்ணை;
சமதர்ம இரவுகளை
வளர்க்கும் கன்னி!
விரசமிவள் விழிமூலம்;
இவள்தான் மற்ற
வீதிகளும் தொடுகின்ற
ராஜ வீதி!

இதமான இளவேனில்
மாலை நேரம்;
இனியதொரு சோலையிலே
அழகு மங்கை
விதமான மலர்கொய்து
நின்றாள்; அந்த
வேளையிலே 'இளந்துறவி'
அங்கு வந்தான்!








மிதமான உணர்வுகளை
நெறிப் படுத்தி,
மெய்ம்மையினைக் காண்பதற்கு
முயல்வோன்; தன்னைப்
பதமாகத் தன்மடியில்
வீழ்த்தப் பார்ப்பாள்;
பாவைமயில் ஆட்டத்தைத்
தொடங்க லானாள்!

'உன்வரவு, நல்வரவு!'
என்றாள், அல்லி;
உத்தமனோ சலனமின்றிச்
சிரித்தான் மெல்ல!
'என்வரவால் உனக்கெந்த
வரவும் இல்லை'
எனவிரித்தான்; இளமங்கை
வலை விரித்தாள்!

'என்னுடலின் உறுப்பிலக்
கணம் படிப்போர்
எல்லார்க்கும் 'பகுபதம்' நான்'
என்றாள்; துறவி,
'சின்னவளே நானென்றும்
'பகாப் பதம்'தான்,
சிந்தையினைக் கட்டிவைத்த
தாலே' என்றான்!






'ஆசைகளை அடக்' கென்றான்;
'தேடி வந்தோர்
ஆசைகளை அடக்குகிறேன்'
என்று ரைத்தாள்!
'ஆசைகள் என் புலனடக்கம்'
துறவி கூற,
'அதுதான் என் பொருளடக்கம்'
என்றாள் அல்லி!

'ஆசை'களை' பேரின்ப
வயலில்' என்றான்;
'ஆடை'களை' சிற்றின்ப
வயலில் என்றாள்!
'ஆசைகளைத் துற' என்றான்;
அவள் செவிக்குள்,
'ஆடை'யென விழுந்ததனால்,
அதைத் துறந்தாள்!

'மெய்யாயுன் தாகத்தைத்
தணிப்பேன்' என்றாள்;
'மேகமில்லா வானம் அதைச்
செய்யா' தென்றான்!
பையத்தான் ஆடைகளை
உடுத்தாள்; 'உங்கள்
பருவத்தை வீணாக்கு
கின்றீர்' என்றாள்!






'நெய்வதற்குத் தானிங்கு
நூல்என் றாலும்
நெசவுகளை விரும்பாமல்
ஒதுங்கி வந்த
தையல்நூல் நான்' என்றான்;
கன்னி, 'இந்தத்
தையலுக்கு உதவாத
நூல்தான், என்றாள்!

'மனங்கெட்டுப் பின்திருந்த
முயலும் மாந்தர்
மனக்கிழிசல் தைப்பவன்நான்;
எனது வார்த்தை,
மனந்தொட்டுத் தன்னளவில்
உணர்ந்தால் போதும்;
மறுபடியும் நல்வாழ்வு
மலரும்; மனித

இனங்கெட்டுப் போகாமல்
காப்ப தற்கு
என்போன்றோர் சிலர்துறவு
தேவை' என்றான்!
தினம்கெட்டுப் போனவளும்
இதனைக் கேட்டு
'திருந்துதற்கு முயலுகிறேன்'
என்று ரைத்தாள்!



# பன்முகப் பார்வை





# சுரண்டறம்

அன்னியன் அன்று பாரதச் சுவரில்
சுண்ணாம் பைத்தான் சுரண்டி யெடுத்தான்!

சுதேசிகள் இன்று சுதந்தர வீட்டின்
சுவர்களை அல்லவோ களவா டுகிறார்!

வேர்களே மரத்தின் கனியை விழுங்கும்;
விரல்களே உள்ளங் கையைச் சுரண்டும்!


பொதுமக் களுக்குப் பழகிப் போனதால்
சுதந்தரம் என்பது 'சுரண்டறம்' ஆனது!

எங்கும் எதிலும் 'சுரண்டறம்!' நாட்டில்
இதுதான் எங்கள் இன்பச் சுதந்தரம்!

மக்கள் தலைவர்கள் நாக்கை விற்கிறார்;
மக்கள் தங்கள் வாக்கை விற்கிறார்!

உமிக்குச் சுண்ணாம் படித்தால் உடன்அது
சமையல் அறைக்கு அரிசியாய் விடுமா?

ஊர்வலம் போகும் 'ஒப்பனை உமிகள்!'
தேர்வடம் பிடிக்கும் விதைநெல் மணிகள்!





'ஓட்டை'க் கொடுத்து 'ஆண்டி' யானதால்
ஓட்டாண்டி களாக வாழுகின் றார்கள்!

சில்லரைச் சத்தம் சிறிது கேட்பினும்
கல்லறை களுக்கும் கைகள் முளைக்கும்!

வெளியூர்க் கஜினி சிலையை உடைத்தான்!
உள்ளூர்க் கஜினி உண்டியை உடைக்கிறான்!

இனக்கொலை கொள்ளை கற்பழிப் பென்பவை
இந்தியர் வீர விளையாட் டுக்கள்!


புரட்டல் கடத்தல் பதுக்கல் பாரதப்
புத்திரர் களுக்குப் பொழுது போக்குகள்!

இருட்டில் எங்கள் தேசப் பார்வை
திருட்டை மறைக்கவும் தேசியப் போர்வை!

தரவும் பெறவும் தடைகள் இல்லை;
இரவும் பகலும் இடைவெளி இல்லை!

உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் உடல்களின்
'கொழுப்பு'ச் சக்தியைக் குறைக்க வேண்டும்!

சமதர்ம வைத்தியம் சரியாய் இருக்கும்;
சமத்துவ மாத்திரை இதற்குப் போதுமே!



# பரம்பொருள்

'அரசரடி' வினாயகரை
ஆராதனை செய்தால்,
வரசித்தி யாகிறது;
வழிபாடு தொடர்கிறது!

சுத்தம் சிலருக்குச்
சோறு போடாததால்
அசுத்தப் பட்டார்கள்;
ஆகாரம் கிடைக்கிறது!

தன்மானம் இவர்வளரத்
தடையாய் ஆனதனால்
சன்மா னத்தால் அதனைச்
சரிக்கட்டு கின்றார்கள்!

கொடுக்கல் வாங்கல்தான்
'கொள்-கை' யாயிருக்கிறது;
'கொடுத்து' வைத்தவர்க்கே
கோப்புகளும் நகர்கிறது!

ஊழல் களைவதிலும்
ஊழல் நடக்கிறது;
ஊழல் பரம்பொருளாய்
உலகெங்கும் நிலைக்கிறது!

# தெருமுனை கூட நிரந்தரமில்லை!


லஞ்சம் வாங்கிய
லட்சிய வாதி
லட்சங் களுடன் அப்பால் நடந்தான்!

எஞ்சி யிருந்த
அவனது நிழலோ
இடத்தை விட்டு நகர மறுத்தது!

கொஞ்சம் அதற்குக்
'கொசுறு' போட்டபின்
கும்பிடு போட்டு நகர்ந்து கொண்டது!

நெஞ்சம் பதறி
நிற்கையில் எனது
நிழலும் என்னிடம் கைநீட் டியது!

நிழல்கள் கூட
லஞ்சம் வாங்கும்
நிலைமையில் இந்தத் தேசம் போகும்!






நெற்றிக்கண் திறக்கும்
நெருப்புப் பெட்டியைப்
பனிக்கட் டிகளால் சரிக்கட் டுகிறார்!

நமுத்துப் போன
தீக்குச் சிகளோ
நெருப்பைத் தராமல் அறிக்கை கொடுக்கும்!

துருப்புச் சீட்டுக்
கூட்டம் ஊழல்
செருப்பின் கீழே மிதிபடும் போது -

திருப்பு முனைவரப்
போவது மில்லை;
தெருமுனைகூட நிரந்தர மில்லை!



# வாய்மைக்கு வாய்க்கரிசி!

வெள்ளிக் காசுகளால்
விலாசம் மாறுகிற
புள்ளிகளே இன்றைய
பொய்யான தலைவர்சிலர்!

தூய்மையை விலக்கிவைக்கத்
துணிந்த அரிச்சந்திரர்கள்!
வாய்மையைக் கொன்று
வாய்க்கரிசி போடுகிறார்!

சந்திர மதிகளோ
சலனமே இல்லாமல்
ஜனநா யகத்தின்
சவஅடக்கம் நடத்துகிறார்!

சத்தியத் திற்கிங்கு
சமாதி கட்டிவிட்டு
'சத்யமேவ ஜெயதே'
சாட்சி எழுதுகிறார்!

ஜனநா யகத்தின்
சவஅடக்கம் முடிந்தபின்பு
மனதார நாடெல்லாம்
மௌனஅஞ்சலி செய்கிறார்!

சுதந்தர நாடு இன்று
சுடுகாடாய் மாறியதால்
மாபாரத கண்டம்
மயான காண்டமிது!

# சத்தியம் சவச்சந்தையில்?

அரிச்சந்திரா! உனக்கு
ஆனகதி பார்த்தாயா?
ஒருசந்தி யில்கூட
உனக்குச் சிலையில்லை!

நியாயமாய் ஊருக்குள்
நிற்கவேண் டியஉன்னை
மயானத்தில் கொண்டுவைத்த
மர்மமென்ன புரிகிறதா?

வாய்மையைக் கொன்று
வாய்க்கரிசி போட்டுவிட்டு
'வாய்மையே வெல்லும்'
வாசகத்தைத் தீட்டிவைத்தோம்!

உண்மையின் நிழல்கூட
ஊருக்குள் விழவிடாமல்
'உண்மைநகல்' உன்னையும்
ஊர்க்கடத்தி வைத்துவிட்டோம்!

உண்மை உயிர்த்தெழுந்து
ஊர்ப்பக்கம் வாராமல்
கண்கா ணிக்கத்தான் - உன்னைக்
காவலாய் நட்டுவைத்தோம்!

'சவச்சந்தை' யில்நிற்கும்
சத்திய புத்திரனே!
கவனம்! காலடியில்
கல்லறையைக் காப்பாற்று!

# உமிச் சிற்பங்கள்

உவமையில்லாப் பெருமக்கள்
ஒப்பந்தத் துறைமக்கள்!
நவபாரதம் செதுக்கும்
நவீனச் சிற்பிகளாம்!

'ஒட்டு'வேலை செய்கின்ற
ஒப்பந்தக் காரருக்குத்
'தொட்டில் பழக்கம்'
தொடர்ந்தே வருகிறது!

சின்ன வயதிலிவர்
சிறியமணல் வீடுகட்டி
மன்னவர்கள் ஆனபின்பும்
மணல்வீடே கட்டுகிறார்!

தார்ச்சாலை மெழுகிவிட்டுத்
தங்கசாலை வாங்குகிறார்!
ஊர்ச்சாலை தலைதடவி
உரஆலை வாங்குகிறார்!

புதிதாகக் கட்டிவைத்த
பொதுநீர்த் தேக்கத்தில்
அதன்மதகைத் திறக்குமுன்பு
அணையே திறந்துகொள்ளும்!





முதல்நாள் மேம்பாலம்;
மூன்றாம்நாள் தரைப்பாலம்!
புதுக்கிணறு சுரக்குமுன்பே
புதைகிணறாய் வாய்மூடும்!

காலையில் திறந்து வைத்த
கட்டடம் பழுதாகி
மாலையில் மறுபடியும்
மராமத்து நடக்கிறது!

கற்கோட்டை தன்னுடைய
'கட்டுமானம்' தளர்ந்ததனால்
தற்கொலை செய்துகொண்டு
'தன்மானம்' வெளிப்படுத்தும்!

நெடுநே ரமாக
நிற்பதற்கு இயலாமல்
கடைக்கால் வலியெடுக்கக்
கட்டடம் உட்காரும்!

ஊதினால் உதிர்ந்துவிழும்
உமிக்கூடு; காற்றுவந்து
மோதினால் முறிந்துவிழும்
முருங்கை மண்டபங்கள்!

சத்தமாய்த் தும்மினாலும்
சரிந்துவிழும் மேற்கூரை;
மெத்தென்று நடந்தாலும்
மிகநெளியும் சமதளங்கள்!

ஆலயங்கள் அரண்மனைகள்
ஆயிரம் ஆண்டுகளாய்
நூலிழையும் பிசகாமல்
நிமிர்ந்திருக்கும் பூமியிலே,


நூறுநாள் விழாக்காணா
நோயாளிக் கட்டடங்கள்
ஆறுநாள் முடிவதற்குள்
ஆயுள் முடிந்துவிடும்!


வெட்டாத கிணறுகள்
வேயாத கூரைகள்
கட்டாத ஆலைகள்
காட்சிதரும் காகிதத்தில்!

ஒப்பந்தம் குறிக்கின்ற
ஊர்ப்பக்கம் போய்ப்பார்த்தால்
கப்பிச் சாலைகளோ
காணாமல் போயிருக்கும்!

துறைதோறும் மடைகட்டி
தூண்டிலுக்கு இரைகட்டி
'பொறி'வாயைச் சரிக்கட்டி
பொதுப்பணிக்குச் சிறுகட்டி!

பங்கீட்டில் கால்பகுதி
பணிமுடித்துத் தருவதனால்
எங்கள் இந்தியத்தாய்
இடுப்பொடிந்து கிடக்கின்றாள்!







# வெயிலுக்குத் தீக்குடையா?

ஊர்முழுக்கச் சாலைகளை
ஊர்திகளுக் காகஅல்ல
ஊர்வலங்கள் போகத்தான்
உபயோகப் படுத்துகிறோம்!

மறியல்கள் போராட்டம்
மாநாடு ஊர்வலங்கள்
சிறுஉயிர்க்கும் தீங்கின்றி
செய்வதற்குப் பழகவில்லை!

சாலைகளில் விபத்துக்கள்
சம்பவிக்கும் இந்நாளில்
சாலைக்கே விபத்துவரச்
சாதித்தாய் மனிதாநீ!

சாலை மறியல்களால்
சங்கடம் அமைச்சருக்கா?
வேலை முடங்குவதால்
வேதனைகள் யாருக்கு?

பேருந்தா உன்எதிரி?
பயணிகளா உன்பகைவர்?
வேரூன்றும் மரங்கள்
விரோதிகளா உனக்கு?

மரம்வைத்தார் உன்முன்னோர்
மதில் வைத்தார் உன்பாட்டன்;
உரம் வைத்தான் உன்தந்தை
உருக்குலைக்கத் தானா,நீ?


கைநகத்தில் அழுக்கெடுக்கக்
கடப்பாரை தேடுவதா?
வெயிலுக்குத் தீக்குடையா?
விடைகாண வன்முறையா?


பொதுச்சொத்தை அழிப்பதுவா
புரட்சிக்கு அடையாளம்?
பொதுமக்கள் புலம்பல்களா
புரட்சிக்குச் சங்கீதம்?

சிந்திப்பாய் ஒருநொடி - நீ
சீரழிக்கும் பலகோடி
மந்திரிக்கா சொந்தம்?
மனிதா உன் சொத்துக்கள்!

வெறித்தனத்தின் விளைவுகளை
வெற்றியெனக் கொண்டுவிட்டால்
சரித்திரத்தில் வன்முறைதான்
சாதனைஎன் றாகிவிடும்!

வீதிகளை உன்னுடைய
வேட்டைக்கா டாக்காதே!
பாதைகளைப் பொதுமக்கள்
பலிமேடை யாக்காதே!







# வேண்டாம், மகாத்மா!

தேசத் தந்தையே!

போதையிலே கிடக்கின்ற
பொதுமக்கள் நாங்கள்; உன்
பாதையினைத் தொலைத்துவிட்ட
பாரதத்துக் குடிமக்கள்!

இதிகாச மருந்துகளை
ஏற்பதற்கு மனமின்றி
இதிகாச நோய்களுக்கு
இரையாகிப் போனவர்கள்!

காவியங்கள் நேர்வழியைக்
காட்டினாலும் எங்களது
ஆவியெங்கும் கோணல்வழி
ஆதிக்கம் செய்கிறது!

வெகுநாளாய்ச் சேர்ந்துவரும்
விரல்நுனியின் அழுக்குகளை
நகத்துக்குச் சோறென்று
நாங்கள் விட்டுவிட்டோம்!

நாளைச் செலவழிக்க
நாங்கள் நினைப்பதல்லால்
மூளையைச் செலவழிக்க
முயலுவதே கிடையாது!


சுயமாகச் சிந்திக்கச்
'சோம்பேறித் தனம்' கொண்டு
அயலாரின் சிந்தனையை
அப்படியே ஏற்கின்றோம்!


சூதுக்கு அடிமைகளாய்
சூழ்ச்சிக்குக் கூலிகளாய்
சாதிக்கு வேலிகளாய்
சரிவுக்குள் வாழுகின்றோம்!

அங்கங்கள் மனிதரென்று
அடையாளம் காட்டினாலும்
அங்கிகளை உடுத்திருக்கும்
'ஆறறிவுக் கால்நடைகள்!'

சிறுமைகளைப் பழகிவிட்ட
சிற்றினம்தான்; எங்களிடம்
மறுபடியும் நீ வந்து
மடைமாற்ற எண்ணுகிறாய்!

திருத்த உன்னால் முடியாது!
திருந்த எம்மால் இயலாது!
வருத்தம்ஏன் நமக்குள்?நீ
வரவேண்டாம் மகாத்மா!







# பூச்சிய முயற்சி

‘பூச்சியம் தனித்தி ருந்தால்
பொருளில்லை வெற்றெண்’ என்ற
ஏச்சினைக் கேட்டுப் பூச்சியம்
எழுந்தது இனத்தைக் கூட்டி!

‘மற்றஎண் நிழலில் தானா
மரியாதை? தனித்தி ருந்தே
உற்றஎண் ஏதே னும்நாம்
உருவாக்கித் தருவோம்’ என்னும்!

ஒருபூச்சி யத்தின் மீது
உட்காரும் இன்னோர் பூச்சியம்!
இருபூச்சி யங்கள் சேர்ந்து
‘எட்டென்ற’ எண்பி றக்கும்!

வெறும்பூச்சி யங்கள் சேர்ந்து
விளையும்எண் ‘எட்டு’ என்றால்,
திறம்கொண்ட மனிதர்கூடி
திக்கெட்டும் விளைக்க லாமே!

# ஓர் - இறங்கல் பா

விலைவாசி யெனும் கரும்புள்ளி;
வியாபா ரத்தில் பெரும்புள்ளி!
மலைவா சியது இன்றைக்கு
மறுபடி வருமா மண்ணுக்கு?


பெரும்புள் ளிகளார்? ஊருக்குள்
பிரமுகர்; அவரைப் பின்தள்ளி
வெறும்புள் ளிகளாய் ஆக்கியது;
வென்றது விலைவா சிப்புள்ளி!


கைப்பணம் தந்து பைப்பையாய்க்
கடைப்பொருள் பெற்றது அக்காலம்
பைப்பணம் தந்து கைப்பொருளாய்ப்
பண்டம் பெறுவது இக்காலம்!

கடைத்தெரு விலைக்கு 'முறைக்காய்ச்சல்'
காலையும் மாலையும் வருகிறது!
நடுத்தர வர்க்கம் மிகத்தேய்ந்து
நடுத்தெரு வர்க்கம் ஆகிறது!

மயங்க வைக்கும் 'விலை'மகளே!
'மலிவு விலை'யில் எமைச்சேரத்
தயங்கி அகல்வாய்; வணிகர்களின்
தனலா பத்தில் 'வைப்பா'வாய்!

மலையுச் சிக்குப் போனவளே!
மண்ணில் இறங்கி வந்துவிடு;
நிலையைச் சொல்லி வேண்டுகிறோம்
நெஞ்சம் இரங்கு; நீ இறங்கு!







# ஏழையின் கனவு

கடைவீதிப் பண்டங்கள்
விலைவாசி வானத்தில்
கைவீசி உலவிவருமே!

கடைத்தேற முடியாத
எதிர்கால நிலையெண்ணிக்
கலங்கிடும் மனிதகுலமே!

எடைபோடும் அரிசியையும்
மணிமணியாய் எண்ணித்தான்
கடைக்காரன் விலைகூறுவான்!

உடைகின்ற பானைவிலை
ஆனைவிலை யாய்விற்கும்
ஒருபோதும் மிகையல்லவே!

தடைவந்து குடிக்கின்ற
தண்ணீரும் தினம்தினம்
தங்கம்போல் விலையேறுமே!

கொடைவள்ளல் பரம்பரையும்
மலையளவு பொருள்தந்து
கடுகளவு பொன்வாங்குமே!


இடையில்ஒரு கல்தொலைவு
போகவரக் கட்டணம்
இருநூறு செலவாகுமே!


எட்டாத உயரத்தில்
மண்ணெண்ணையும் உப்பும்
ஏழையின் கனவாகுமே!

அடையாளம் தெரியாமல்
அவசியப் பண்டங்கள்
அருங்காட்சி யில்காணலாம்!

முடைவந்து 'நுகர்வோர்'கள்
வாசனைப் பொருள்களை
முகராமல் திரும்பிவிடுவார்!

விடைகாண முடியாத
விலைவாசிச் சூழல்களில்
வீழ்ந்தோரா கரையேறுவார்?





# பாற்கடல் கடையும் பத்திரிகைகள்!


நூலறி வுக்குத் துணைசெய் யாமல்
நூற்றுக் கணக்காய் நம்நாட்டில்
பாலுற வுக்குப் பரிந்துரை செய்யப்
பத்திரி கைகள் பெருகிவரும்!

கத்தரி களுக்குத் தப்பிய காட்சி
பத்திரி கைகளில் வருகிறது;
சித்திரம் சிறுகதை நாவல் களிலே
சிற்றின் பம்தான் பெருகியது!

ஆணெழுத் தாளர் எழுது கோல்களில்
ஆடைகட் டாத எழுத்துக்கள்!
பெண்ணெழுத் தாளர் பிடித்திருந் தாலும்
நாணமில் லாத பேனாக்கள்!

உடலை மட்டும் வரைந்துவிட்டு
ஒதுங்கிக் கொள்ளும் தூரிகைகள்!
உடையை அதன்மேல் மூடுவ தற்கு
ஒப்புக் கொள்ளா ஆசிரியர்!

துச்சா தனராய் இவர்கள் கூடித்
துகிலைப் பறித்து விடுகையிலே
அச்சு வாகனம் பருத்தி ஆலையா
ஆடை கட்டி விடுவதற்கு?





மூடியைத் திறந்தால் பேனா கூட
முகத்தைக் கவிழ்த்துக் கொள்கிறதே!
ஆடையைத் திறக்க அலையும் விரலோ
அதையே துணைக்கு அழைக்கிறதே!


பால்போல் வெள்ளைத் தாளை இவர்கள்
பாற்கடல் என்று கடைகின்றார்;
பாற்கடல் நஞ்சை வாசகக் கன்றுகள்
பருகுவ தற்குத் தருகின்றார்!

மண்ணில் எழுதிக் கற்ற விரல்கள்
மண்ணின் மரபை மறப்பதுவோ?
கண்ணில் வளர்த்த பண்பா டுகளைக்
கண்ணிமை வந்து எரிப்பதுவோ?

கள்ளிச் செடியை வளர்க்கத் தானா
காகித வயலில் 'மை'விதைகள்?
பள்ளி யறையும் குளிய லறையும்
மட்டும் தானா வீட்டறைகள்?

போதையைத் தூண்டும் மாத நாவல்கள்
பொழுதைப் போக்கும் வியாபாரம்;
ஆதர வளிக்கும் வாலிபத் தொகுதியில்
அச்சுக் காகித விபச்சாரம்!

ஒழுக்கம் உயிரெனப் பேசும் நாட்டில்
உடல்கள் தானா மூலதனம்?
அழுக்கை விற்றுச் செல்வம் திரட்டும்
அந்தப் பலபேர் எந்த இனம்?





# காகிதக் கோட்டை

அப்படி இப்படி அல்ல எங்கள்
அலுவலகத்து நடைமுறைகள் -இங்கு
அனைவரும் லஞ்சத் தலைமுறைகள்!


முப்பது ரூபாய் பெட்ரோல் செலவில்
முழம்பூ மனைவியின் தலைக்கேறும் -அந்த
முப்பதும் சர்க்கார் கணக்கேறும்!

அகத்திக் கீரை வாங்கக் கூட
அரசாங் கத்தின் கார்போகும் - இந்த
அத்துமீறலை யார் நோகும்?

அடுப்பபடி களிலும் எடுபிடி களுமாய்
அலுவலகத்து ஊழியர்கள் - அவர்க்கு
அரசாங் கத்தின் ஊதியங்கள்!

முதுமை எய்திய மேலதி காரி
முறைகேட்டுக்கு வழிகாட்டி - பல
மோசடி களுக்குக் கைகாட்டி!

புதிதாய் வந்த இளம் அதிகாரி
பொன்மான் களுக்கு விலைபோவார் - பல
பொய்மான் களுக்கு வலையாவார்!



பூப்படை யாத கோப்புகள் யாவும்
பூக்கும் நேரம் பார்த்திருக்கும் - 'சொர்ண
புஷ்பம்' சொரிந்தால் பூத்திருக்கும்!

வரிக்கு 'திரைகள்' போடுவ தற்கு
வரிக்குதிரைகளே வழிகாட்டும் - அவை
வரி ஏய்ப்புக்கும் தலையாட்டும்!


ஆண்டு தோறும் நிதிநிலை அறிக்கையில்
அதிகாரிக்கு வேட்டிவரும் - நம்
அத்தனை பேர்க்கும் 'துண்டு'விழும்!

அரிசியைத் தனது உலைக்கு மட்டும்
அளந்து கொள்கிற அதிகாரி - அவன்
ஆண்டி களுக்குப் பங்காளி!

உமியைக் கூட ஊதிப் பார்த்தபின்
ஊருக் களிக்கிற உபகாரி - தின
ஊழலுக் கவனே அதிகாரி!

கரையான் களுக்கு இரையாய்ப் போகும்
காகிதக் கோட்டை இத்தேசம் -இதைக்
காப்பதற் கென்ன உத்தேசம்?

நீயும் நானும் மக்களும் சேர்ந்து
நின்றால் வேளை உருவாகும் - நாம்
நிமிர்ந்தால் நிலைமை சரியாகும்!



# பாலைவனக் கப்பல்கள்

வேலைவாய்ப்பு அலுவலகம் என்று - இங்கு
விரிந்திருக்கும் பாலைவனம் ஒன்று! - அங்கு

வேலையெனும் கானல்நீரை
வேட்கையுடன் நாடுகின்ற
பட்டமெனும் ஒட்டகங்கள் கோடி - அந்தப்
பாதையிலே சோலைகளைத் தேடி!

பாலைவனக் கப்பல் எங்கள் பட்டம் - வழிப்
பயணத்தில் ஒதுங்கித்தரை தட்டும்! - இந்தக்

காகிதத்துக் கப்பல்களில்
காலமெலாம் சுற்றிவந்து
கரைகடக்க முடிந்திடாத கோபம் - இனி
கல்வியினை நம்பியென்ன லாபம்?

நாளைவரும் என்பதொரு நினைவு - ஒரு
வேலைவரும் என்பதினி கனவு! - சில

மேகமழை கொட்டும்போது
தாகம்தீர்க்க முயலுகையில்
மணல்வெளியில் நீர்த்துளிகள் மறையும் - எங்கள்
மனவெளியில் தீப்பொறிகள் பரவும்!

# புதுயுகமல்ல... மதுயுகம்!


தேசம் முழுதும் வற்றா நதியாய்த்
'தீர்த்தம்' நடக்கிறது;
தேசிய கீதம் பாடும் போதும்
'திரவம்' மணக்கிறது!

மழைநீர் அதுவும் 'கள்மழை' யாகி
மண்ணை நனைக்கிறது;
மழலை வாய்க்குத் தாய்ப்பால் கூட
மதுவாய்ச் சுரக்கிறது!

படிக்கப் போகும் வயதில் பிள்ளை
குடிக்கப் போகிறது;
குடித்து விட்டுப் பாடம் சொல்லக்
குருகுலம் வருகிறது!

சாரா யத்தில் 'மிதத்தல் விதி' யைச்
சரிபார்க் கின்றார்கள்;
ஏரா ளம்பேர் 'ஆர்க்கி மிடீ'சாய்
இதிலே மூழ்குகிறார்!

கள்ளுப் பானை கல்வித் தேனைக்
காய்ச்சித் தருகிறதா?
கல்விச் சாலைப் பாடத் திட்டம்
கள்ளுக் கடைகளிலா?





கோப்பைக் குள்ளே யாப்பைத் தேடும்
மரபுப் பட்டாளம்;
கோப்பையும் யாப்பையும் சேர்ந்தே உடைக்கும்
புதுக்கவிதைக் கூட்டம்!

மேட்டுக் குடியும் பள்ளக் குடியும்
மிதக்கும் தேனாறு;
பேட்டை தொடங்கிக் கோட்டை வரைக்கும்
பெருகும் பாலாறு!

மண்குடங் களுக்கும் பொன்குடங் களுக்கும்
மதுக்குடம் கூட்டாளி;
மன்னர் சபைகளும் மந்திரி சபைகளும்
மதிக்கும் விருந்தாளி!

மதபோ தகரும் மதுபோ தையிலே
மறைகள் ஓதுகிறார்;
அதுவே ஆண்டவன் ஆரா அமுதென
அடியவர் ஆடுகிறார்!

வாக்குப் பெட்டி மதுப்புட் டிக்கு
வாழ்க்கைப் பட்டிருக்கும்;
காக்கும் சட்டமும் காவலும் இதற்குக்
கட்டுப் பட்டிருக்கும்!

தரும தேவதை குடிமயக் கத்தில்
தராசு பிடிக்கின்றாள்;
சிறுமை கண்டு பாரததேவி
சிந்தை துடிக்கின்றாள்!


# வேரடியில் தத்துவங்கள்...

மதிவிளக்கம் பெறுவதற்குக் குறட்பா; தேடும்
மனவிளக்கம் தருவதற்கு அருட்பா; சூழும்
விதிவிளக்கம் பெறுவதற்கு நீதி நூல்கள்;
வேரடியில் தத்துவங்கள் நூறி ருந்தும்

மதிமாற வில்லையிங்கு; வாழும் மக்கள்
மனம்மாற வில்லை! நாம் போகும்பாதை
நதிமாற வில்லையெனில் கெடுதல் இல்லை;
நாம்மாற வில்லையெனில் விடிவே இல்லை

எத்தனையோ உத்தமர்கள் பிறந்த மண்ணில்
எவரின்று உண்மைவழி செல்லு கின்றார்?
புத்தனெனும் தேவன்மொழி எவர்நி னைத்தார்?
புனிதமகான் காந்திவழி எவர்தொ டர்ந்தார்?

தத்துவத்தார் பாதையிலே எவர்ந டந்தார்?
தலைமக்கள் போதனைகள் எவர்ம தித்தார்?
சத்தமிடும் மனித இனம் யாவும் காசின்
சத்தத்தில் சத்தியத்தை மறந்த தம்மா!







# மீறல்கள்...

பாதையிலே ஊன்றுகோலாய்க்
குறளைப் பெற்றோம்;
பதவுரையும் பொழிப்புரையும்
எழுதத் தானா?
காதையிலே நாயகர்கள்
செயல்கள் யாவும்
கதைகாலட் சேபத்தில்
முடிக்கத் தானா?
கோதைகளின் காவியங்கள்
எல்லாம் இங்கே
கூத்தாக அரங்கத்தில்
நடிக்கத் தானா?
மேதைகளின் அறிவுரைகள்
வாழ்க்கை யாவும்
மேடையிலே சொற்பொழிவு
நிகழ்த்தத் தானா?
போலிகளின் கவர்ச்சியிலே
கண்ம யங்க
போக்கற்று வழிதவறிக்
கால்தொ டங்க
வேலிகளை விதிமுறையை
மீறி யெங்கும்
வீதிகளில் திரிவதுஏன்
வெற்றி ளைஞர்?

# புகழை
# பூமி சேமிக்கும்


தப்புக்குத் தாளம் போட்டு
தப்பிக்கத் தாளம் போட்டு
ஒப்புக்குத் தாளம் போட்டு
உப்புக்குத் தாளம் போட்டு


இப்பக்கம் பாதி நேரம்
எதிர்ப்பக்கம் மீதி நேரம்
எப்பக்கம் லாபம் கிட்டும்
அப்பக்கம் தாளம் தட்டும்!

பத்துப்பேர் ஒன்று கூடிப்
பயனுள்ள முடிவு செய்தால்
ஒத்துப்போ; இயலா விட்டால்
ஒத்திப்போ; யாரை யேனும்

நத்திப்போய் வயிற்றுக் காக
நாய்வாழ்க்கை வாழ்ந்து விட்டுச்
செத்தால் யார் அழுவ தற்கு?
சேர்வார்யார் சுமப்ப தற்கு?

ஒத்தார்யார் இவர்போ லென்று
உலகுன்னைப் போற்ற வேண்டும்!
செத்தால் உன் புகழைப் பூமி
சேமித்து வைக்க வேண்டும்!







# அழுக்குப்படாத ஆறடி நிலம்!

அன்னை பாரதத்தில்
அழுக்குப் படாதநிலம்
கண்ணில் படுகிறதா?
கண்டறியச் சென்றேன் நான்!

இமயம் முதல் குமரிவரை
எத்தனை பரப்பளவு?
இமைகளை மூடாமல்
இரவுபகல் சுற்றி வந்தேன்!

ஆலைகள் நீதிமன்றம்
அரசாங்கக் கட்டடங்கள்
சாலைகள் சட்டமன்றம்
சலிப்பின்றிப் பார்வையிட்டேன்!

கடைவீதி வங்கிகள்
கல்வி நிறுவனங்கள்
குடியிருப்பு வீடுகள்
குடிசைகள் சுற்றினேன்!

அழுக்குப் படாதநிலம்
அங்குலமும் தேறவில்லை!

பாலைகள் காடுகள்
பண்ணை வயல்வெளிகள்
சோலைகள் தோப்புகள்
சோர்வின்றிச் சுழன்று வந்தேன்

ஆலயங்கள் மடங்கள்
அறநிலையம் மணக்கூடம்
காலிமனை அத்தனையும்
கண்ணோட்டம் விட்டேன்நான்


அழுக்குப் படாத நிலம்
அங்குலமும் தேறவில்லை!

முழுக்கச் சுற்றிவந்து
மூச்சுத் திணறியது!
'அழுக்குப் படாத நிலம்
அகப்பட்டு விட்டதா?'

அகப்பட்டு விட்டது!
அதிசயமாய் இந்தியாவில்
அகப்பட்டே விட்டது!
அதோ, தெரிகிறதே!

'எவ்விடத்தில்? எங்கே?
எத்தனை சதுரம்?'

ஒவ்வொரு ஊர்தோறும்
ஒதுக்குப் புறமாக
'அழுக்குப் படாத
ஆறடிப் பூமி!'





# உலகம்
# ஆறடிச் செவ்வகம்!

ஒவ்வொரு 'கல்லறை' மேடையும்
உன்னதம் நிரம்பிய புத்தகம்;
ஒவ்வொரு மனிதனின் சிறுகதை;
உதிர்ந்த பூக்களின் கவிதைகள்!

நரைகள் எழுதிய நாவல்கள்
நடுவில் முடிந்தவர் நாடகம்!
இறுதிப் பயணக் கட்டுரை;
இறப்பின் 'பெட்டிச் செய்திகள்!'

படிக்கட் டாகிய மலைகளோ?
படுக்கை விரித்த தூண்களோ?
இடிந்த கோட்டை மதில்களோ?
இயற்கையின் செய்தித் தாள்களோ?

பிறந்தவை முடியும் பாதைகள்;
பிணங்கள் வசிக்கும் வீதிகள்
இறந்த கால நகல்களே;
இவைதாம் இறந்தவர் முகங்களே!

மேய்ப்பவர் துயிலும் மேடுகள்;
மெழுகுகள் அழுகிற மேடைகள்!
சாய்ந்த மறிகளின் பட்டிகள்;
சவங்களின் சிமெண்டுச் சட்டைகள்!


நிரந்தர ஓய்வுக் குடில்கள்மேல்
நிற்கும் நினைவுச் சிலுவைகள்
இறந்தவர் 'உள்ளே' என்பதை
எடுத்துரைக் கும்பெயர்ப் பலகைகள்!


சருகிற் கமைந்த நிழற்குடை;
சரிந்த சமதளக் கோபுரம்!
வெறுமைக் கிதுவொரு அறிமுகம்;
வெற்றிடத் துக்கொரு விளம்பரம்!

இருண்ட வீட்டின் முகவரி;
எலும்பு நகைகளின் பெட்டகம்;
உருண்டை அல்ல இவ்விடம்
'உலகம் ஆறடிச் செவ்வகம்!'

தாலாட் டுகளின் எதிர்ப்பதம்;
தரைக்கீழ் அமைதிக் காப்பகம்!
காலா வதிகளின் எருக்குழி;
கால தேவனின் மிதியடி!

மண்ணடி மைந்தரின் அரண்மனை
மயான புரத்தில் எத்தனை?
மண்ணில் கண்டம் ஏழுதான்;
மயான காண்டம் ஒன்றுதான்!





# அந்த நாள்...

இதயத்தின் விடுமுறைநாள்
என்மூச்சு விடைபெறும்நாள்;
புதைகுழியின் முதல்தேதி;
பொய்யுடலின் மூடுவிழா!

தசை எலும்பு நரம்புகளின்
தகவல் தொடர்பறுந்து
அசைவின்றிக் கிடக்கும் நாள்;
அடக்கத்தை உணரும்நாள்!

உயிரை மறந்த உடல்
உமிக்கூடாய்க் கிடக்கும்நாள்;
பெயரை மாற்றியென்னை
'பிணமெ'ன்று பெயரிடும் நாள்!


'அவராக' இருந்தநான்
'அது'வாக மாறும்நாள்;
சுவராக இருந்தநான்
சுவர்ப்படமாய் ஆகும்நாள்!


பணப்பெட்டி நகைப்பெட்டி
பாதுகாத்த எனக்கும்ஒரு
தனிப்பெட்டி செய்து
தரைக்கீழ் மறைக்கும் நாள்!

கட்டிலறை விட்டுப் போய்க்
கல்லறையில் படுக்கும்நாள்;
எட்டுச்சாண் உடம்பை
எருவாகத் தருகிறநாள்!

உப்பிட்ட மண்ணுக்கே
உப்பாகப் போகும்நாள்;
கப்பமாய் என்னுடலைக்
காலனுக்குக் கட்டும்நாள்!

சுமைகளை இறக்கிவைக்கும்
சுபவேளை; நிரந்தரமாய்
அமைதிதரும் சுகவேளை;
அழைப்பின்றி வரும்நாளை!







# கண்கள் கூட நரைக்குமா?

இமைக்குள் தூங்கும் பார்வைகள் - இவள்
இமைகள் இருட்டின் போர்வைகள்!

விழியின் மரணம் நிகழ்ந்தது - அந்த
வெளிச்சம் எங்கே மறைந்தது?

முகமே கண்களின் கல்லறை -புன்
முறுவல் நெஞ்சின் முன்னுரை!

பாவை உயிரைச் சுமக்கிறாள் - விழிப்
பாவை இறந்து கிடக்கிறாள்!

ஆடும் மயிலின் தோகையில் - பல
ஆயிரம் கண்கள் வைத்தவன்,

பாடும் குயிலின் முகத்திலே - விழிப்
பார்வை இரண்டைப் பறித்ததேன்?

இமைகள் மூடித் திறக்கலாம் - இதன்
இயக்கம் எதனைக் காட்டவோ?

இறந்து போயின பறவைகள் - வீணாய்
ஏனோ இரண்டு சிறகுகள்?

பார்வை விரலின் நுனியில்தான் - இவள்
பகலும் இன்னொரு இரவுதான்!

மீளாத் தூக்கம் விழிகளில் - அதன்
மேலே இன்னொரு தூக்கமா?

கண்கள் கூட நரைக்குமா? - அட
காட்சிகள் இப்படிக் கருக்குமா?


கருவிழிக் கணவன் மறைந்ததால் - இது
கண்களின் விதவைக் கோலமோ?

தன்னை விழிகளில் தொலைத்தவள் - தினம்
தன்முகம் தனக்குள் தேடுவாள்!

காதலில் அல்ல கருணையால் - என்
கண்களைக் கொடைதரத் துடிக்கிறேன்!

பாதியில் பார்வை இழந்த நான் - இந்தப்
பாவைக்கு எவ்விதம் உதவுவேன்?

□ பார்வையிழந்த பெண்ணின் வெள்ளை விழிகளுக்காக... □







# சூரியனே முளைக்காத கிழக்கு?

புறவெளிச்சம் கருக்கொள்ளா
மலட்டுக் கண்கள்;
பொலிவிழந்த முகத்தில் இரு
பூச்சி யங்கள்!


பொறியிழந்த என் வாழ்க்கைச்
சரித்திரத்தில்
பூகோளம் பார்த்தறியா
விழிக்கோ ளங்கள்!

கற்பனைகள் எனக்குண்டு
வடிவம் இன்றி!
கனவுகளும் வருவதுண்டு
வண்ணம் இன்றி!

கற்றவைகள் நெஞ்சிலுண்டு
காட்சி இன்றி;
கலங்குகிறேன் பார்வைக்கு
மீட்சி இன்றி!

சுரக்கின்ற கண்ணீர்தான்
இருப்பு! நானோ
சூரியனே முளைக்காத
கிழக்கு!

சலனமிலாச் சவப்பார்வை;
சூனி யத்தில்
சஞ்சரிக்கும் விழிப்பாவை
உயிர்க்கச் செய்வீர்!






முதற்பதிப்பு பழுதானால்
என்ன? நீங்கள்
மனம் வைத்தால் மறுபதிப்பு
செய்ய லாமே!

புதுப்பிறவி நான்பெறநீர்
கண்கொ டுத்தால்
பூசிப்பேன் இமைகூப்பி
வணக்கம் செய்வேன்!

ஒளிவிதைகள் உங்களது
விழிகள்; அவற்றை
ஊன்றுங்கள் என்முகத்தில்
முளைக்கும் வெளிச்சம்!

விண்கொடையால் மண்ணுக்கு
மழைகி டைக்கும்
விழிக்கொடையால் எங்களுக்கு
ஒளிபி றக்கும்!

கண்கொடையால் காலங்கள்
இறந்தும் வாழ்வீர்
காட்சி தரும் 'கண்காட்சி'
திறந்து வைப்பீர்!




# விழிகளுக்கு மரணமில்லை!

மண்தானம் பொன்தானம்
அன்னதானம்
மற்றெந்த தானங்கள்
எதற்கும் மேலாய்

'கண்தானம்' மிக உயர்ந்த
தானம்; முன்பு
கண்ணப்பன் கடவுளுக்கே
தந்த தானம்!

இறப்புக்குப் பின்னாலே
உங்க ளோடு
இருவிழியும் எரிப்பதனால்
பயன்தான் என்ன?

முடிவுரையில் உங்கள் இமை
மூடும் போது
முகவுரையை என்இமையில்
எழுத லாமே!




உறுப்புகளில் மிகச்சிறந்த
கண்ணி ரண்டை
ஊனத்தைக் களைவதற்கு
தானம் செய்வீர்!

முகத்திற்கு முகவரியே
கண்கள்; உங்கள்
முகவரியை மீள்பார்வை
செய்ய லாமே!

புதைப்பதனால் மண்தின்னப்
போகும் கண்ணைப்
புதுப்பிறவி பிறர்பெறவே
உதவலாமே!

விதைப்புஇது! வீணல்ல;
விரயம் அல்ல;
விழிகளுக்கு மரணமில்லை
எந்த நாளும்!





# எழுதுகோலின் கனவுகள்...


பிறநாட்டில் துறைதோறும் முன்னேற் றங்கள்
பெருமைமிக்க சாதனைகள்; அவர்கள் இன்று
அறிவியலில் கொடிகட்டிப் பறக்கின் றார்; நாம்
அரசியலில் கொடிகட்டிப் பழகு கின்றோம்!

அறிவுக்குப் பஞ்சமில்லை நம்மிடத்தில்;
ஆக்கமில்லை. அதுஎதனால்? ஆர்வ மில்லை!
திறமைக்குக் குறைவில்லை என்ற போதும்
தேக்கநிலை, இதுஎதனால்? ஊக்க மில்லை!

விழுதுவிடும் விஞ்ஞானம், புதுமை யாவும்
வெளியுலக மூளைகளில் மட்டும் தானா?
பொழுதுகளே போதவில்லை அவர்க்கு; நேரம்
போக்குவதே நமக்குவெறும் பொழுது போக்கா?

பழுதுபட்ட மனங்களிலே எழுச்சி வந்து
பாடுபட்டால் புகழோடு தேசம் வாழும்!
எழுதுகோலின் கனவென்று நனவாய் மாறும்?
இளையவர்கள் உணருவது எந்தக் காலம்?

இருசன்ஓர் 'எடிசன்'போல் ஆவ தெந்நாள்?
இப்ராகிம் 'வில்பர்ரைட்' ஆவ தென்று?
அருமைதாஸ் 'ஐன்ஸ்டீனா'ய் மாறு வானா?
அகமத்கான் 'ஆர்ம்ஸ்ட்ராங்'காய் உயரு வானா?






முருகப்பன் 'சர்.சி.வி' நிழலா வானா?
  மோகன்லால் 'பாபா'வின் நகலா வானா?
மருதையன் 'மார்க்கோனி' போலா வானா?
  மஞ்சுளா 'கியூரி'யைப்போல் வளருவாளா?

கதிரறுக்கும் பொன்னிமகன் வருங்கா லத்தில்
  கதிரியக்கப் புதுமைபல படைக்க வேண்டும்!
முதுகுசுமை தூக்குகிற முத்தன் பிள்ளை
  மூளைமாற் றுச்சிகிச்சை தொடங்க வேண்டும்!

மிதிவண்டி ஓட்டுகிற மீரான் செல்வி
  மின்னல்களில் மின்சாரம் திரட்ட வேண்டும்!
நதிக்கரையில் மீன்பிடிக்கும் தாமஸ் பெண்தான்
  நாளைக்குச் செவ்வாயில் நடக்க வேண்டும்!






# படிக்கட்டும் 'படி' கேட்கும்!

கல்வியென்கின்ற
கலங்கரை விளக்கின்று
செல்வம் திரட்டுகின்ற
சிவப்புவிளக் கானதுஏன்?

கொள்ளை மலிவாகக்
குடிசைக்கு வந்தகல்வி
'கொள்ளை' - மலிவானதால்
கோபுரத்தில் குந்தியது!

பாமரப் படிப்பென்றும்
பணக்காரப் படிப்பென்றும்
நாமகள் இரட்டை
நாக்குகளால் பேசுகிறாள்!

வெள்ளைத் தாமரையில்
வீற்றிருந்த கலைவாணி
வெள்ளித் தாமரையில்
கொலுவீற் றிருக்கின்றாள்!






நாணமின்றி பெற்றோரின்
நரம்புகளைச் சுரண்டிசிலர்
வீணை நரம்புகளாய்
வித்தகங்கள் புரிகின்றார்!

‘விலைபோட்டு வாங்கிடவா
முடியும்இக் கல்வி’என
வினவியது தமிழேந்தும்
பாவேந்தர் நெஞ்சம்!

விலைபோட்டு வாங்கத்தான்
முடியும்!இக் கல்வியெனும்
மலையேறப் படிக்கட்டுப்
படிக்கட்டு லஞ்சம்!

‘படிக்கட்டும்’ பிள்ளையெனில்,
பள்ளிக் கல்லூரிகளின்
படிக்கட்டும் ‘படி’கட்டும்படி
கேட்கும் காலம்!

கொள்ளை மலிவாகக்
குடிசைக்கு வந்தகல்வி
‘கொள்ளை’ மலிவானதால்
கோபுரத்தில் குந்தியது!





# எத்தனை 'நான்!'

எனது உயரம் எட்டுச்சாண் - அட
எனக்குள் ளேதான் எத்தனை'நான்!'

நான் நானானது எப்போது?
நானா யிருந்தது எத்தனைநாள்?


தாயின் மடிக்கு வந்தநாளிலா?
தீயின் மடியில் வெந்தநாளிலா?

இடையில் நானாய் இருந்தேனா?
எத்தனை நான்தான், திருந்தேனா?

எந்தத்தினம் என் சொந்ததினம்?
எந்தமனம் என் நந்தவனம்?

என்னில் என்னை விலக்கியதார்?
என்னை எனக்கு விளக்கியதார்?

எனது உயரம் எட்டுச்சாண் - அட
எனக்குள் ளேதான் எத்தனை'நான்!'



# யார் ஞானி?


நான்மறையைக் கற்றவனா ஞானி?
தன்னுள்
'நான்' மறையைக் கற்றவனே ஞானியாவான்!

நூன்மறைகள் நூறுமுறை
பயின்று மென்ன?
நோன்புகளும் தவங்களும்தான்
இயற்றி யென்ன?

'வான்வரையில் என்னறிவு
வளர்ந்த தெ'ன்று
வரம்புகளை நீட்டியென்ன?
உள்ம னத்தில் -

'தான்' என்னும் தன்முனைப்பை
உடைப்ப வன்தான்
தனைவென்று நிற்கின்ற
ஞானி யாவான்!

அணுப்பொறியைக் கட்டியாளும்
மனித ஆற்றல்
ஐம்பொறியைக் கட்டிவைக்க
முடிய வில்லை!






கணிப் பொறியில் அண்டத்தை
அடக்கி யென்ன?
கணப்பொழுது மனமடக்கக்
கருவி யில்லை!

அணுக்கத்தில் வான்தொலைவைச்
சுருக்கி யென்ன?
ஆசைகளின் நீளங்கள்
சுருங்க வில்லை!

கணுக்கணுவாய் முளைத்தெழும்பும்
நோய்க் குணங்கள்
களைவதுவே ஞானத்தைத்
தேடும் பாதை!





## காதுவழித் தூது

கற்றலினும் கேட்டல் நன்று
என்னும் வாசகம் - இது
கல்விநிலை வளர்வதற்கு
சொன்ன சூசகம்!

பள்ளியினை விட்டுக் கொஞ்சம்
தள்ளிச் சென்றவர் - கல்விப்
பாதையிலே பாதித்தூரம்
வந்து போனவர்

புள்ளிகளாய் மாறிவிட்ட
பிள்ளைக் கோலங்கள் - அதைப்
புதுப்பிக்க மீண்டும் வரும்
வசந்த காலங்கள்!

காற்றுநுழை யாதஇடம்
தன்னிலும் கூட
கல்விநுழைந் தாகவேண்டும்
முன்னிலும் கூட!

ஏட்டுக்கல்வி என்பதினி
இவர்க்குச் சுமைதான்
இடையில்நின்ற பிள்ளைகட்கு
ஏற்ற தில்லைதான்!





பாட்டுக்கல்வி தானிவர்க்குப்
பாதை யாகுமாம்;
பாடமெல்லாம் காதுவழித்
தூது போகுமாம்!

நாட்டுப்பாடல் என்பதுதான்
ஏற்றவழியாம் - நிலை
நாட்டும்பாடல் என்பதனால்
நல்ல முறையாம்!

துணைக் கண்டத்தில் நமதுதானே
புதிய முயற்சி - இந்தத்
தொண்டு வெற்றி பெற்றுவரும்
புதிய வளர்ச்சி!


# கட்டைவிரல்
# 'கையெழுத்து!'


கழிவறையில் துப்புரவு
செய்யும்தோழனே,
கடற்கரையில் நொறுக்குத்தீனி
விற்கும் நண்பனே,

பழுதுபார்க்கும் பட்டறையில்
வேகும் தம்பியே,
பஞ்சுநூலை நூற்றுவிட்டு
ஓயும் தங்கையே,

மாலைவரை பீடியினைச்
சுருட்டும் கைகளே,
மளிகைக்கடை பொட்டலங்கள்
கட்டும் விரல்களே,

வேலைகளில் ஈடுபட்டு
விலகும் விழிகளே,
பாடநூலைக் கற்பதற்கு
உண்டு வழிகளே!








புல்லறுக்கும் பொன்னிகூட
கல்வி கற்கலாம்;
பூத்தொடுக்கும் பூங்கொடியும்
பாடம் படிக்கலாம்!

கல்லுடைக்கும் கந்தன்களும்
கற்கச் செல்லலாம்;
கட்டைவிரல் 'கையெழுத்து'
கற்றுக் கொள்ளலாம்!

தேய்ந்த நாளை எண்ணிமனம்
தேம்பிட வேண்டாம்;
ஓய்ந்த நேரம் கிடைக்கும்போது
சோம்பிட வேண்டாம்!

வேலைகளில் ஈடுபட்டு
விலகும் விழிகளே,
பாடநூலைக் கற்பதற்கு
உண்டு வழிகளே!





# இனியவை நாற்பது


பன்னீர் செல்வம், உன்வயதென்ன?
        பதினாறா? அதில் பழுதென்ன?
கண்ணீ ரைத்துடை; கலக்கம் எதற்கு?
        காலம் இருக்கு கற்பதற்கு!

'நாற்றங்கால் பருவம்தான்
அரிச்சுவ டிக்கு
ஏற்றது' என்கிறார்
நடேசன்; 'நானோ

நாற்பது வயதைத்
தொடுகிறேன், கல்வியை
ஏற்பது எனக்கு
இயலுமா?' என்கிறார்.

தேய்ந்த நாட்களைத்
தினம் எண்ணித்
தேம்பிட வேண்டாம்;
உங்களுக்கு -

ஓய்ந்தநேரம் எப்போது?
உட்காருங்கள் அப்போது!





கல்லா நாற்பது
கரைந்தது; இந்த
இன்னா நாற்பது
நீங்கள் முயன்றால்
இனியவை நாற்பது
ஆகும்; பயில்வீர்!

நடை வண்டிகளும்
படிக்க வரும் - அட
நரை முடிகளுக்கும்
படிப்புவரும்! - ஆம்
பிடிப்பு இருந்தால்
படிப்பு வரும்!

கரம்பு நிலம்
கரும்பு நிலம்
ஆகும் போது,
கல்லா தார்
கற்றவ ராய்
ஆகலாமே!

# ஆயுதக் குறுக்கம்

பூமித் தாயின்
புதல்வர்கள் நமக்கு
'பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்!'

சுற்றங் களையே
வேரறுக் கின்றோம்;
முற்றங் களிலே போர்தொடுக் கின்றோம்!

துருவங் களுக்கு இடையிலா? அல்லநம்
புருவங் களுக்கு நடுவிலே பூமி!


'உலகப் படத்தின் எல்லைக் கோடுகள்
உள்ளங் கையின் ரேகைகள் போன்றவை!'


என்பதை உணர்ந்தால், பிரிவினை வருமா?
வன்முறை வருமா? போர்வெறி எழுமா?

மனித 'ரத்தப் பாசனம்' தந்தே
மண்மகள் வயிற்றைநாம் மலடாக் குவதா?

இரும்புக் கருவியின் ரத்தப் பசிக்கு
விருந்து படைக்க மனித இறைச்சியா?

'சோதனைக் குழாயில்' கருவை வளர்ப்பது
துப்பாக்கிக் குழாய்க்கு பலியாய்க் கொடுக்கவா?







போர்த்துப் பாக்கியைப் பூமியில் நட்டுவை
பூங்கொடி யைஅதன் மேலே சுற்றிவை!

அஞ்ச வைக்கும் அணுகுண்டு களைநம்
பிஞ்சுக் குழந்தைகள் கோலி யாடட்டும்!

குண்டுகள் பொழியும் பீரங்கி வாயில்;
வெண்புறாப் பேடை முட்டை யிடட்டும்!

‘டாங்கி’ இனிமேல் படைவண்டி அல்ல;
தண்ணீர் வண்டியாய் மாற்றி அமைப்போம்!

எறிகுண்டு களைப் பூச்செண் டாக்குவோம்;
ஏவு கணைகளால் அடுப்பு எரிப்போம்!

துப்பாக் கிகளைத் தூக்கி யெறிந்து
பூப்பாத் திகளைப் போடலாம் தோழனே!


கள்ளிக் காட்டைக் களையெடுத்தால் ஒரு
முல்லைக் காடு முறுவலிக் காதா?


ஆய்தக் குறுக்கம் அருந்தமிழ் இலக்கணம்!
'ஆயுதக் குறுக்கம்' அமைதிக்கு இலக்கணம்!

எதிரி என்கிற வார்த்தையை இனிநம்
உதடுக ளுக்குப் பழகிட வேண்டாம்!

புதிய மனித அகரா தியிலே
எதிர்ப்பதங் களுக்கு இடம்கிடை யாது!

பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்;
புறப்படு நண்பா, அமைதியைப் பாடியே!







# பூக்காம்பு கூட அழுமே!

போர்க் கோலத் தாலே இந்தப்
புவியெங்கும் அவலக்காட்சி!

ஊர்முற்றும் எரிந்தாலென்ன?
உன்சுற்றம் அழிந்தாலென்ன?
தேர்அச்சு முரிந்தாலென்ன?
தெருக்கோடி இழந்தாலென்ன?

யார்கொல்லப் பட்டாலென்ன?
எவள்தாலி அறுத்தாலென்ன?
யாரிங்கே என்னசெய்தோம்?
அவரவர் தொழிலைச்செய்தோம்!

முள்ளோடு பிறந்தரோஜா
மொட்டொன்று உதிர்ந்துபோனால்
முள்கூட அழுமே,காம்பின்
முனைகூட கண்ணீர் விடுமே!


எடுத்தவோர் மாலையில்பூ
இதழொன்று உதிர்ந்துபோனால்
தொடுத்தநார் கூடக்கொஞ்சம்
துடிக்குமே! ஆனால்,இங்கே -


ஓலங்கள் கேட்டும்நமது
ஊன்தசை ஆடவில்லை!
‘காலங்கள் மாறும்,உங்கள்
காயங்கள் ஆறும்’என்று

ஆறுதல் சொல்லக்கூட
ஆளில்லை, அடடா! கொஞ்சம்
தேறுதல் கூறக்கூடத்
திறமில்லா மனிதச்சாதி!

போர்க்கோலம் இல்லாத
பொற்காலம் அதைஇந்தப்
புவிக்கோளம் காணவேண்டும்!

புவிக்கோளம் முழுவதிலும்
பூக்கோலம் போடுகிற
புதுக்காலம் வருதல்வேண்டும்!







# மரணங்கள் மலிவு விலை!

பூபாளத்தோடு
பொழுது விடிந்தது
போபாலில் பலபேர் வாழ்வு முடிந்தது!

இருட்டில் பொது ஜனங்கள்
வெளிச்சத்தில் வெறும் பிணங்கள்!


அக்கரைச் சீமை வைத்த
ஆலை 'யூனியன் கார்பைடு'
அக்கறை இன்மையினால்
அதுபெரிய 'கறை'ஆச்சு!

பூச்சிக் கொல்லிக்குப்
பொதுமக்கள் பலியானார்!

வாழும் மக்களெல்லாம்
'வாயில்லாப் பூச்சி' என்று
பாழும் பூச்சிக்கொல்லி
படுகொலை நடத்தியது!

வாசல்கள் தோறும்
வாழ்விழந்த உடலங்கள்;
ஈசல்கள் போலெங்கும்
இரைந்த சடலங்கள்!

பேசும் குழந்தைகளைப்
பிள்ளைப் பூச்சியென்று
நாசம் புரியவந்த
நச்சுவாயு விழுங்கியது!





மூச்சளிக்கும் காற்றே
மூச்சடக்கும் விஷமாக
பேச்சடங்கிப் பெருநகரம்
பிரேத நகரமாச்சு!

தொண்ணூறு குழிவெட்டி
தொண்ணூறு குழந்தை இட்டார்;
மண்ணீரம் காயுமுன்னே
மறுபடியும் குழியெடுத்தார்!


விரிந்து கிடந்திட்ட
'விக்ரம் காட்' மயானத்தில்
எரிந்த பிணங்கள்பல;
இடமின்றிக் கிடந்தபல!

மரணங்க ளுக்குஇங்கு
மலிவுவிலை கிடைக்கும்!

பெரிய பிணத்திற்கு
உரிய தொகையுண்டு;
சிறிய பிணமா? அதற்குச்
சில்லரைகள் மிகவுண்டு!

ஈட்டுப் பணத்தில்நம்
இழப்புகளைச் சரிசெய்வோம்;
மீட்டு விபத்துவரும்
மீண்டும் நிவாரணம்தான்!

□ 1984 டிசம்பர் 3 - போபால் நச்சுவாயு விபத்து □





# பூமிக்குப் புதிய அச்சு!

பூமித்தாயே!


நிலநடுக்கம் என்பதனை
நினைத்தாலே எங்களுக்குக்
குலைநடுக்கம் வரும்படியோர்
கொடுமையினைச் செய்துவிட்டாய்!

சுழன்றுகொண்டே இருப்பதனால்
சுற்றியதா தலைஉனக்கு?
பழையஅச்சு என்பதனால்
பழுதாகி விட்டதுவோ?

'ஆர்மீனியா' என்னும்
அழகான சோலையினை
வேர்த்தீனி யாகநீ
விழுங்கியது சரிதானா?

சோம்பலை அறியாத
சோவியத்து மாந்தர்களின்
சாம்பலைத் தின்பதற்கா
சதிராடி விட்டாய்நீ?

'ருசியா'ன இடமென்றா
'ருசியா'வைத் தேர்ந்தெடுத்தாய்?
புசிப்பதற்கு இனிக்குமென்றா
பொதுவுடைமைக் கனிதின்றாய்?






கருக்குழியாய் உன்வயிற்றைக்
கருதுகிறோம்; மனிதர்களின்
எருக்குழியாய் அதைமாற்ற
எப்போது துணிந்தாய்நீ?

செங்கொடிகள் ஆடிவரும்
சிவந்தமண் நகரத்தில்
பூங்கொடிகள் எத்தனையோ
புழுதிக்குள் புதைந்தனவே!

மண்தின்பார் கருவுற்ற
மங்கையர்கள்; இரக்கமின்றி
மண்ணே, உன் மசக்கைக்கு
மங்கையரைத் தின்றாயே!

நீயே வழங்கியதை
நீயே விழுங்குவதா?
தாயே பிள்ளைகளின்
தசைக்கறியை விரும்புவதா?

எத்தனை மாளிகைகள்
இடுப்பொடித்துப் போட்டுவிட்டாய்!
எத்தனை ஆலைகளை
எலும்புக்கூ டாக்கிவிட்டாய்!



சீர்கொடுத்து உன்முகத்தில்
செந்தூரப் பொட்டுவைத்துப்
பேர்கொடுத்த சோவியத்தில்
பெருந்தீங்கு விளைத்தாயே!


பொறுமைக்குப் பூமியென்பார்;
பொய்யாக்கி விட்டாய்நீ!
தருமமும் பொறுக்காத
தவற்றைநீ செய்துவிட்டாய்!

நரம்புத் தளர்ச்சியினால்
நடுங்குகிறாய்; மண்மகளே!
நரம்புச் சிகிச்சையால் உன்
நடுக்கத்தைத் தீர்த்து வைப்போம்!

புதுஉலகம் படைப்பதற்குப்
புரட்சிகளைத் தீட்டிவரும்
பொதுவுடைமை நாடுனக்குப்
புதிய அச்சு செய்துதரும்!

☐ ஆர்மீனிய நிலநடுக்கம் - 1990

# நேசக்காற்று வீசட்டும்...





நெஞ்சக் கதவைத் திறந்துவிடு
நேசக் காற்று வீசட்டும்!

கண்கள் வளர்க்கும் தவறுகளை - உன்
காட்சியி லிருந்து விலக்கிவிடு!
எண்ணம் திரட்டும் அழுக்குகளை - உன்
இதயத் திருந்து அகற்றிவிடு!


நெஞ்சக் கதவை திறந்துவிடு
நேசக் காற்று வீசட்டும்!

வெறுமை இந்த உலகென்று - ஒரு
விரக்தி உனக்கு வரலாமா?
பொறுமை யோடு காத்திருந்து - நீ
புதுமை படைக்க வேண்டாமா?

நெஞ்சக் கதவைத் திறந்துவிடு
நேசக் காற்று வீசட்டும்!

அண்டை வீட்டுச் சோதரர்கள் - பிற
அன்னியர் போல வாழ்வதுவா?
பண்டைய பரம்பரை இழிவுகளில் - ஏதும்
பாக்கி இன்னும் இருக்கிறதா?

நெஞ்சக் கதவைத் திறந்துவிடு
நேசக் காற்று வீசட்டும்!





# பெயரைத் திற, புகழைப் பொறி!

கண்ணைத் திற,
ஒளியைத்தொடு!
கடலைத்திற; அமுதம்எடு!


விண்ணைத் திற,
அறிவைவிரி!
வீட்டைத்திற; காற்றைரசி!

பெண்ணைத் திற,
அன்பைவிதை!
பெயரைத்திற; புகழைப்பொறி!

மண்ணைத்திற,
பொன்னைக்குவி!
மனதைத்திற; உன்னைப்படி!



# ஞானவெளி





# கடவுளுடன் நேர்காணல்!

□

கடவுளுடன் ஒரு நேர்காணல்,
மனித இனத்தின் வேர்காணல்!

மானிட ஆலின் விழுதொன்று
மாமறை இறையைத் தேடிவரும்!

தடுத்தாட் கொள்ளும்இறைவன் வாசலில்
தடுத்தார் என்னை வாயிற் காப்போர்!


தருமதேவனின் வாசலில் இரண்டு
தண்டல் நாயகர் - துவாரபாலகர்

'வருவோர் தருவார்; தருவோர் நுழைவார்
வசதி எப்படி? அதற்கேற்ப அனுமதி'

என்று - விரல்மொழியாலே
'பொருளுரை' எழுதினார்!

'பதி'யைத் தேடி வருகிற 'பசு'விடம்
'பாசத்தோடு' கறக்கும் இவர்கள்

துவாரக 'பாலகர்' அல்லவோ? அதனால்
துப்புரவாகக் கறந்தபின் விட்டார்!





□


கவிஞன் : உலக முதல்வா, வரலாமா?

கடவுள் : உட்கார் மனிதா, நலந்தானா?

கவிஞன்: உருவம் ஏதுமில்லை -
ஒலிமட்டும் கேட்கிறதே
குரலும் ஒன்றல்ல...
கூட்டமாக ஒலிக்கிறதே...
பகவானே நீ என்ன
பலகுரல் மன்னனா?

கடவுள் : உற்றுப்பார் மானிடனே,
எலும்பு தசை நரம்பல்ல என்னுடம்பு;
எப்போதும் என் வடிவம் ஒளிப்பிழம்பு!
நான், பூமிக்கும் வானுக்கும்
பொதுவானவன்;
புல்லுக்கும் மரத்திற்கும் சமமானவன் ;
ஓமென்று அழைக்கின்ற
ஒலியானவன் ;
உலகத்து மாந்தர்க்கு ஒளியானவன்!

கவிஞன் : ஓ! 'ஒளியும் ஒலியுமாய்'
இருப்பதனால்நீ தொலைக்காட்சியில்
தோன்றுவாய் போலும்!



கடவுள் : உண்மையான அன்பு மனங்களில்
உளக்காட்சியாய்
உறைந்திருப்பவன் நான்!


□

கவிஞன் : தருமதேவா, பலகுரல் கேட்கிறதே
-உன்
தாழ்வாரத்தில் பொதுக்கூட்டமா?
சர்வமதக் கடவுளரின்
சங்கமாநாடு நடக்கிறதா?
பரமசிவனா, பரந்தாமனா?
கர்த்தரா, புத்தரா?
அருகனா, அல்லாவா?
எத்தனை பேரிங்கே
எழுந்தருளி யுள்ளீர்கள்?

கடவுள் : மொத்தமாய்க் கூட்டினால்
ஒற்றைக் கடவுள்தான்!

கவிஞன் : ஒற்றைக் கடவுளா?

கடவுள் : ஆமாம்! இறைவன் - ஒருவன்தான்!
ஆனால் மனிதனே, இதுகேள்:
கடவுள் தொகையை
மக்கள் தொகைபோல்
கட்டுப்பாடின்றிப்
பெருக்கி விட்டாய்நீ!



கடவுள் தொகையைச்
சரியாய்க் கணக்கிட
கணிப்பொறிகளுக்கே
இயல வில்லையாம்!

கவிஞன் : எத்தனை மதங்கள்!
அத்தனையும் நீ படைத்தவை
அல்லவா?


கடவுள் : மதங்களையா நான் படைத்தேன்?
மனிதத்தைத்தான் நான்
விதைத்தேன்!
'மனிதம்' சொல்லைப்பார் - அதில்
'னி' யை நீக்கினாய் -
'மதம்' பிடித்தது!
தொகுதி தொகுதியாய்
வாழ்ந்த மனிதர்
தோற்றுவித்தவை மதங்கள்!
மதவாதி சிலபேரின்
மனக்குறுக்கம் மதத் தொண்டர்
மனங்களிலே நகம்வளர்க்கும்
பொதுவாகும் இறைநெறியில்
மாறுபட்டுப்
பூசல்களில் ஈசல்களாய் உதிர்ந்து
போனீர்!

கவிஞன் : மகாதேவனே, மதப்பூசல்களை
மாற்றிட நீவழி காட்டிடலாமே!

கடவுள் : மனிதா... மனிதா...
ஐந்து புலன்களை
நெறிப்படுத்தத்தான்
ஆறாவது புலன் அளித்தேன்
உனக்கு!
சிந்தனைப் புலத்தில் ஏன்
சிலந்திக் கூடு?
மூளைப் பரப்பில் ஏன்
கரையான் புற்று?

கவிஞன் : இறைவா,
வெண்மணி எரிந்தது
மறக்கவில்லை;
அயோத்தி இடிந்தது
பொறுக்கவில்லை.

கடவுள் : இந்த வன்முறையால்...
மதவெறியால்
விளைவு என்ன?
துளசித் தீர்த்தத்தில் ரத்த வாடை!
திருநீற்றுச் சாம்பலில் எலும்புத்
துகள்கள்!
அப்பத்தில் மனித தசைத்






துண்டங்கள்!
சாம்பிராணிப் புகையில் மரண மூச்சு!
இது, படைத்தவன் குற்றமா?
படைப்பின் குற்றமா?

கவிஞன் : ஆண்டவா, உன் அடியார்
நெற்றியில் வெளிப்பூசல்
நித்தமும் உட்பூசல்;
உற்ற மதக்குறிகள்
ஒவ்வொன்றும் தினப்பூசல்...
சமயக் குறிகளுக்குச்
சமக்குறியே தெரியாதா?

கடவுள் : இது, நான் கேட்கவேண்டிய வினா!
கணிதக் குறிகளைக் கற்ற மாந்தர்
மனிதக் குறிகளைக் கற்க மறந்ததேன்?
சமயம் என்ற சொல்லைக் கவனி
'சமம்' என்பது அதிலே உள்ளதே!

கவிஞன் : மதப்பூசலுக்கு மாற்றுதான் என்ன?

கடவுள் : ஊன் - உடம்பெல்லாம்
மானுட நேயம்
ஊற்றெடுத்தால் அங்கு
மதவெறி வீழும்!
இராமன் தொட்டில் ஆடிய வீட்டில்






இரகுமான் தொட்டில் ஆடாதா?
கண்ணன் தவழ்ந்த கோகுல வீதியில்
கர்த்தர் நடக்கக் கூடாதா?
மனிதா, வளைவரிச் சங்கு பிறக்கும்
கடலில்தான்
வலம்புரி முத்தும் பிறக்கிறது!
பளபளக்கின்ற பவழமும் அந்த
அலைகடல்தானே கொடுக்கிறது!

□

இந்துமதம் இந்தியாவின்
'இதயம்' என்றால்
இஸ்லாமும் கிறித்தவமும்
'நுரையீரல்'கள்! மனிதா!
இந்துவா நீ? இணங்கி வா,
பள்ளிவாசலில் நகாரை முழக்கு!
இஸ்லாமியனா? இணைந்துவா,
மாதாகோயிலில் மணியடிக்கப்போ!
கிறித்தவனா நீ? எழுந்துவா,
இந்துக் கோயிலில்
அகல்விளக் கேற்று...

கவிஞன் : அருமை, அருமை! இறைவா உன்
அருள்வழி காட்டல் இருளை





ஓட்டும்!
அய்யா, அடுத்தொரு கேள்வி:
மெய்யாய் அருள்நெறி ஊட்டுகிற
மெய்ஞானிகளின் பேரவையில்
பொய்யாய் பொருள்நெறி ஈட்டுகிற
போலிச்சாமிகள் இடம் பெற்றார்;
மோட்ச அடிகளைக் காட்டுவதாய்
மோசடி நாளும் நடக்கிறது!
சூட்சுமப் பொருளைச் சுட்டுவதாய்
சூழ்ச்சிகள் மேலும் தொடர்கிறது!

கடவுள் : கழனியைத் தந்தேன் உழுது பயிரிட
களைகளை வளர்த்தது யார்தவறு?
பகல்வேடங்களின் அடையாளம்
பகுத்துப் பார்க்கத் தெரியாமல்
நகல் சாமிகளை நம்பியது
நானா உனக்குச் சொல்லியது?
சாண உருண்டை, தன்னைப்
'பூமி உருண்டை', என்றால்
ஆணவத்தைக் கண்டு
அதட்டுமே எருக்குழிகள்!
அகங்கார வறட்டி தன்னை
'அசோகச் சக்கரம்' என்றால்,
முகம்காட்டி வரும் நெருப்பு

முறுவலித்தே கொல்லாதா?
மனிதா,
உண்மை ஞானியர் உலகில் உண்டு
உணர்ந்து அவர்களைப் பின்பற்று!

□

கவிஞன் : ஞால முதல்வனே,
ஞானி என்பார் யார்?

கடவுள் : நான் மறையைக் கற்றவனா ஞானி?
தன்னுள்
'நான்' மறையக் கற்றவனே ஞானி!
'தான்' என்னும் தன்முனைப்பைத்
தகர்ப்பவன்தான்
தனைவென்று நிற்கின்ற
ஞானி ஆவான்!

கவிஞன் : அத்தகு ஞானி
எங்கே இருக்கிறார்?

கடவுள் : அகிலம் முழுவதும் பரவி இருக்கிறார்,
துருவப் பகுதியிலும் இருக்கலாம்;
ஏன்? உன் புருவ மத்தியிலும்
இருக்கலாம்!
போய் வா!

# தாலாட்டில் ஒரு பள்ளியெழுச்சி!


ஆராரோ பாட்டெடுத்து
அன்னைநான் பாடவில்லை;
தீராத தூக்கமென்ன?
தேனே கண்விழிப்பாய்!


இளந்தளிரே, பூவே!
இப்போது உறங்காதே!
வளர்ந்தபின் தூங்குதற்கு
வசதிகள் கிடைக்குமடா!

வாய்ப்பாக நீஉறங்க
வகுப்பறை இடங்கொடுக்கும்;
போய்ப்பாட சாலையிலே
பொழுதுக்கும் தூங்கிடலாம்!

தொல்லைகள் கொடுக்காமல்
தூக்கத்தைக் கெடுக்காமல்
பல்கலைக் கழகமெல்லாம்
பட்டத்தால் கௌரவிக்கும்!

அரசாங்க அலுவலகம்
அத்தனையும் தூங்குமடம்;
பரிவாரம் பாய்விரித்துப்
பகல்தூக்கம் போடுமிடம்!








நாற்காலி மேசையென்று
நாடெங்கும் பஞ்சணைகள்;
தீர்க்காத கோப்புகளோ
தேசமெங்கும் தலையணைகள்!

வீட்டுக்குள் தூங்கியின்று
வீண்பொழுது போக்காதே;
கோட்டைக்குள் போனபின்பு
குறட்டை ஒலி எழுப்பிடலாம்!

ஆசிதந்து நீதூங்க
ஆராரோ இசையினிலே
தேசிய கீதம்தந்து
தினமுன்னைத் தாலாட்டும்!

நீதித் தராசுகளும்
நித்திரைக்கு இடமளிக்கும்!
நீதிக்கு ஒரு தட்டு;
நீயுறங்க மறுதட்டு!

சத்தியத்தின் பெருந்தூக்கம்
சரித்திரம் ஆனதடா!
சித்திரமே அதுஉன்னைச்
சீக்கிரமே தொற்றுமடா!






சுதந்தர தேவியங்கே
சுகத்தூக்கம் கொள்ளுகிறாள்!
அதிலுண்டு உன்பங்கு;
அவளுடன் சேர்ந்துறங்கு!

‘தீமைகள் தலையெடுத்தால்
திரும்ப வருவே’ னென்ற
சாமிக்கும் தூக்கமடா;
சரிபாதி உனக்குமடா!

துரையே நீநாளை
தூங்குகிற தொழிற்சாலை!
குறைவின்றிப் பெருகிவரும்
கும்பகர்ணன் மூலதனம்!

வாவா... விளையாடு;
வாசலில் போயாடு!
பூவே... விழிப்போடு
பொழுதுக்கும் நடைபோடு!

இளந்தளிரே, பூவே!
இப்போது உறங்காதே!
வளர்ந்தபின் தூங்குதற்கு
வசதிகள் கிடைக்குமடா!





# இன்றும் ஒரு சுதந்தரப் போர்


மண்ணின் மரபுகளை
மகத்தாகப் போற்றுதற்கு
கண்ணின் சுதந்தரத்தைக்
கருத்தாகப்பயிர் செய்தோம்!

தண்ணீரை வார்த்தால்
தவறி விளையுமென்று
கண்ணீரால் காத்தோம்;
கருக விட்டோமின்று!

தள்ளக் கூடாததைத்
தள்ளி வைத்துவிட்டு
கொள்ளக் கூடாததைக்
கொண்ட தேசமிது!

புத்தனை காந்தியினை
புதுவெள்ளம் ஒதுக்கியதால்
இத்தரைத் தருமங்கள்
இடப்பெயர்ச்சி ஆகியது!

நீதியின் சாய்வுகளில்
நேர்மை ஓய்வெடுக்கும்;
பாதையின் சரிவுகளில்
பண்புகள் அடிசறுக்கும்!






இழுக்கை இயல்பாக
இதயங்கள் பழகியதால்
அழுக்கை ஒழுக்கமென
ஆதரிக்கத் தொடங்கிவிட்டோம்!

நாலுகா லில்மனங்கள்
நடக்கத் தொடங்கியபின்
வேலிகளைத் தாண்டுவதை
'விதிமுறை'யில் அடக்கிவிட்டோம்!

அத்து மீறல்களை
ஆசீர் வதித்ததனால்
அத்தனை மீறல்களை
அரசியலில் பழக்கிவிட்டோம்!

சின்னக் கோலுக்கு
செங்கோல் வளைவதனால்
கன்னக் கோல்வந்து
காவலரை மேய்க்கிறது!

வெள்ளைக் கொக்குகள்
வெளியேறி விட்டபின்பு
கள்ளிக் காக்கைகளின்
காரியங்கள் நடக்கிறது!






கள்ளக் கடத்தல்களால்
கண்ணியம் ஏற்றுமதி;
கள்ளச் சந்தைகளால்
களங்கமே இறக்குமதி!

'தேசியக் கொடி' யைத்
திரைச்சீலை யாக்கிவிட்டு
தேசிய உடைமைகளைத்
தினம்கடத்தும் தீயவர்கள்!

கவர்ச்சிப் பொருளென்று
'கடத்தல்புலி' களின்று
'கவரிமான்' களையும்
கடத்துகின்ற கொடுமைகள்!

சில்லரை சேர்க்கின்ற
சீமான்கள் தோட்டத்துக்
கல்லறைக் குள்ளேயும்
'கறுப்புச் சுரங்கங்கள்!'

ஒழுங்கான நிதிமுதலை
ஒப்பந்த முதலைகள்
விழுங்குவது சரிபாதி;
வேலைக்கு ஒரு பாதி!






நிலுவைத் தொகையில்தான்
நிர்மாணப் பணியென்றால்
கலவைக் கணக்கென்ன?
கட்டுமான வயதென்ன?

நெடும்பாதைச் சீரமைப்பில்
நிகழும் தவறுகளால்
விடியும் பொழுதெல்லாம்
விபத்துத் தினங்கள்தான்!

முடியும் பாதைகளில்
முடிவில்லாப் பயணம்தான்;
நெடிய 'துணைக்கண்டம்'
நித்திய கண்டம்தான்!

'கலப்பி'ன் தத்தவங்கள்
கடைப்பொருளின் மகத்துவங்கள்
'கலப்புப்' பொருளாதாரம்
கடைத்தெருவின் லட்சியங்கள்!

வீசும் காற்றுகளே
வியாபாரக் காற்றானால்
பேசும் 'சுகாதாரம்'
பெறுவதுதான் எப்போது?






கேள்விகள்தான் நம்பங்கா?
கீழ்மைகளை அகற்றுதற்கு
வேள்விகள் வரும்போது
வேடிக்கை மனிதர்களா?

சுதந்தரக் காற்று வந்தும்
சுவாசிக்கா நுரையீரல்;
சுதந்தர உணவிருந்தும்
சுவைக்காத பலஇரைப்பை!

வறுமைக் கோட்டின்கீழ்
வாழ்பவர்கள் சரிபாதி;
ஒருமைப் பாட்டுக்குள்
ஒரு சிலர்க்கேன் தனிநீதி?

சரிசமம் என்பதே
சபைக்கு வராதவரை
சரிவிகித உணவிந்தச்
சந்ததிகள் பெறுவதெங்கே?

வானத்தில் மட்டுமல்ல
வையத்தில் பல'வர்ண'
வானவில்லைச் சமூகம்
வரைந்துவைத் திருக்கிறது!






‘ஒன்றே குல’மென்று
ஒப்புக்கு ‘தொகுப்புகள்!’
அன்றுமுதல் பலசாதி
அரிச்சுவடி வகுப்புகள்!

எண்ணும் இந்தியர்கள்
இமய முதல் குமரிவரை!
‘மண்ணின் மைந்தர்கள்’நாம்
மாநிலங்கள் பொறுத்தவரை!

மண்நீர் எல்லைகளில்
மனவிரிசல் பெருகியது;
தண்ணீர் வராஆறு
தகராறாய் வருகிறது!

மக்களை நெறிப்படுத்தும்
மகாத்மா எவருமில்லை;
தக்கபடி வழிகாட்டும்
தலைவர் பிறக்கவில்லை!

துக்கதினம் நாட்டைத்
தொடர்வதில் குறைவில்லை;
‘மக்கள் தினம்’இந்த
மண்ணில் மலரவில்லை!





'நமக்கேன் வம்பெ'ன்று
நல்லவர்கள் ஒதுங்கியதால்
'நமக்கே பங்கெ'ன்று
நச்சுமனம் ஆர்ப்பரிக்கும்!

எந்தத் துறைகளிலும்
ஏனோதானோ எண்ணம்;
சொந்தத் திண்ணைகளில்
சோம்பலுக்கு விருந்தோம்பல்!

மனம்விடு தூதில்
மனச்சான்றைப் புதைத்து
பணம்விடு தூதுக்குப்
பணிவிடைகள் நடக்கிறது!

காசுக்கு நாமிங்கே
கௌரவ அடிமைகள்!
ஆசைக்குக் கைக்கூலி;
அதர்மத்தின் எடுபிடிகள்!

கற்றுத் தேறியவர்
கடைத்தேற வழியில்லை!
பற்றுக் கோடின்றிப்
பரிதவிக்க விட்டுவிட்டோம்!


பட்ட மளிப்புவிழா
பாங்காக முடிந்தபின்பு
'பட்டத் தரசர்'களோ
பாதசாரி யானார்கள்!


மாலைகளைச் சுமப்பவர்கள்
மண்சுமக்க முன்வந்தால்,
பாலைவனங் களில்கூட
பசுமைப் புரட்சிவரும்!

தோள்களில் சோம்பலுக்குத்
தொட்டில் கட்டிவிட்டு
ஆள்வினை இன்றிநாம்
ஆமைகளாய் வாழ்கின்றோம்!

கொடுமைகளின் பாசறையாய்க்
குறுகிவிட்ட தாய்நாட்டின்
அடிமைகளை மீட்பதற்கு
அணிவகுத்து நில்லுங்கள்!

அன்னையின் தளைநீக்கி
அதர்மத்தைக் களையெடுக்க
'இன்னுமொரு சுதந்தரப்போர்'
இன்றைக்கே தொடங்குங்கள்!







# சற்றே விலகியிரும் பிள்ளாய்!


நாதியிலா ஏழைகளை
நகலெடுக்கும் கவிஞர்களே!
சாதனைகள் போதும், நீர்
சற்றே விலகுங்கள்!

உங்கள் கவிதைக்கு
'உணவு' தருவது,
எங்கள் 'பசி'தானே?
என்ன, சரிதானே?

வறியவர் பட்டினியை
வாயினிக்கப் பாடியதால்
உரிய ராஜவிருந்து
உண்டு முடித்தீர்கள்!

எளியவர் எங்களின்
இருட்டைப் பிரதிபலித்து,
வெளிச்சம் பெற்றீர்கள்;
வேறென்ன செய்தீர்கள்?

உங்கள் எழுத்தாணி
ஊசியைக் கொண்டுவந்து
எங்கள் கிழிசல்களை
என்றேனும் தைத்ததுண்டா?






ஏராள மாய்ஊற்றும்
எழுதுகோல் மைஎங்கள்
தீராத தாகத்தைத்
தீர்த்து வைத்ததுண்டா?

எத்தனை நூல்களை
எழுதிவெளி யிட்டீர்கள்!
அத்தனை நூலும்ஒரு
ஆடைநெய்ய முடிந்ததுண்டா?

பள்ளத் தாக்குளைப்
படம்பிடித்துக் காட்டுகிற
கள்ளச் சிகரங்களே,
காட்சிப் பொருளாநாங்கள்?

உவமானத் தில்எங்கள்
உருவத்தை வெளியிட்டு,
அவமானப் படுத்துகிற
அவலங்கள் இனிவேண்டாம்!

ஏழ்மைக்கு வழக்காட
எழுச்சியுடன் புறப்பட்டு,
தோழர்கள் 'கருப்பெழுத்'தில்
துக்கம் விசாரித்தீர்!





தீட்டும் பேனாமுனையால்
திருப்புமுனை கிடைத்ததா?
ஏட்டின் கோபத்தில்
எரிமலை வெடித்ததா?


புலம்பல் களால்மட்டும்
புரட்சி வரமுடியாது;
கலங்கியது போதும், இனிக்
கையறு நிலைவேண்டாம்!

ஆண்மையிலா எழுத்துகளால்
அழத்தான் முடியுமென்றால்,
வீண்'மை' அதைமாற்றி
வேறு'மை' போடுங்கள்!

உதிரத்தால் எழுதுகிற
உறுதி இல்லையென்றால்,
சதுரத்துக் குள்ளேயே
சக்கரம் விடவேண்டாம்!

வானம் பாடிகளா
விடியலைத் தந்துவிடும்?
சேனைகள்தாம் விடுதலையைச்
சீக்கிரமாய்க் கொண்டுவரும்!

நாதியிலா ஏழைகளை
நகலெடுக்கும் கவிஞர்களே!
சாதனைகள் போதும்,நீர்
சற்றே விலகுங்கள்!





# மானுடவேர்கள்

# பனை ஓலை உயில்!

வள்ளுவனே -


மூலதனம் உன்னுடைய
முப்பால்; அதை எமக்கு
ஓலைச் சுவடியிலே
உயிலெழுதி வைத்தவனே!


தாய்ப்பால் குடிக்காமல்
தமிழ்ப்பால் குடித்தவன்நான்;
வாய்ப்பாலாய் முப்பால்
வார்த்தவனே, வணங்குகிறேன்!

பனையோலை நறுக்கில்
ஈரடிவெண்பா -எமக்கு
தலைவாழைக் குருத்தில்
தங்கச் சம்பா!

உலகத்தின் சுற்றளவு
ஒன்றே முக்காலடியில்
அளவெடுத்து வைத்தவனே
அருந்தமிழ்ப் புலவனே

வணங்குகிறேன்!





# ஈரடி
# அன்னை சீரடி

தமித்தாயின் பால்குடித்துத்
தமிழ் வளர்த்த அறிஞர்பலர்!
தமிழ்த்தாய்க்கே பால்கொடுத்த
தமிழறிஞர் வள்ளுவனார்!

அய்யனே,
வள்ளுவனே!

மூப்பில்லாத் தமிழுக்கு
முப்பால் கொடுத்தவனே!

யாப்பில் நீபுனைந்த
ஈரடியால் தமிழன்னை
பூப்போல் நடந்து
புவனமெங்கும்
சுற்றி வந்தாள்!
காப்பு - தமிழுக்குன்
கவிதைகளே!

வணங்குகிறேன்!

# பாரதியே!


மரபுக் கவிதைகளில்
மகசூலைப் பெருக்கியபின்
விரவும் புதுக்கவிதை
விதைக்கோட்டை ஆனவனே!


விடுகதையைப் பாடிவந்த
வெற்றிலைக் கவிஞர்களில்,
விடுதலையைப் பாடிவைத்த
வேள்விக் கவிஞன்நீ!

பலரது எழுச்சிவெறும்
பள்ளி எழுச்சியெனில்,
புலவனே, உன்எழுச்சி
புதிய 'படையெழுச்சி!'

சிலரது வீழ்ச்சியிங்கே
சிறப்பின்றிப் போகிறது;
நிலத்தில் உன்வீழ்ச்சியோ
'நீர்வீழ்ச்சி' ஆகியது!

உருகும் பனிக்கட்டியில்
உஷ்ணத்தை ஏற்றியநீ
திரளும் மழைச்சரத்தைத்
தீச்சரமாய் மாற்றியவன்!







மெல்லெழுத் தில்கூட
மின்சாரம் பாய்ச்சியநீ
வல்லெழுத்தில் இடிமுழக்கம்
வடித்துக் காட்டியவன்!

ஊமைப் பெண்களின்
உதடுகளைத் திறந்தவனே!
ஆமைக்கும் கூடநீ,
அதிவேக நடைதந்தாய்!

அடிமைச் சமூகத்தின்
அழுக்குகளை நீக்குதற்கு
குடிமைப் பயிற்சிதந்த
'குருபீடம்' உன்பீடம்!

நெஞ்சில் உரம்கொண்டு
நேர்மைத் திறம்கொண்டு,
வஞ்சனை சாடுதற்கோர்
வல்லமை எனக்களிப்பாய்!


# மீசைகள்
# மின் நிலையங்கள்!


தமிழின் மேன்மையும்
தமிழன் ஆண்மையும்
இமயம் வரைக்கும்
எதிரொலிப் பதற்கு

தமிழா இருபதாம்
நூற்றாண் டில்தான்
தமிழ்க் கவிதைக்கு
மீசை முளைத்தது!

எட்டயபுரத்து முறுக்கு மீசையும்
வெட்டியபுதுவை நறுக்கு மீசையும்
மீசைமுளைத்த எதுகை மோனைகள்;
மீட்சிக்குதவிய கவிதைச் சேனைகள்!

மீசை நமக்கு மிதவெப்ப மண்டலம்;
மேதைகள் இவர்க்கோ மின்சார நிலையம்!
பாரதி மீசை அனல்மின் நிலையம்;
பாவேந்தர் மீசை அணுமின் நிலையம்!





கவிஞாயிறு

தாராபாரதி

கவிதைகள்



# எட்டயபுரத்து வீதிகளில்...

பாரதியே -

எட்டய புரத்து வீதிகளில் – நீ
எடுத்து அடிகள் வைத்தவுடன்
எட்டி யிருந்த இமயத்தில்
இன்னொரு சிகரம் முளைத்தது!

தாயின் மடியில் தவழாமல்
தரையின் மடியில் தவழ்ந்ததனால்
தாயின் பாசம் என்பதனைத்
தாய்மண் மீது பற்றென்றாய்!

தாயிடம் மழலை பழகாமல்
தானே பேசிப் பழகியதால்
வாயில் வந்த முதல்வார்த்தை
'வந்தே மாதரம்' என்பதுதான்!

கேள்விக் குறியாய் நீயிங்கே
கிளர்ந் தெழுந்த பின்னால்தான்
தோல்விக் குறியாய் வெள்ளையரின்
தோட்டாக் குறியே மாறியது!

கையின் விலங்கைத் தகர்ப்பதற்கு
கவிதைச் சுத்தியல் தந்தவனே!
பையக் கால்விலங் கொடிக்கும்முன்
பயணம் முடித்துக் கொண்டாயே!

பாரதியே -

அக்கிர காரத்தின்
அந்தநாள் பெரியார்நீ!
வக்கிரப் பார்வைகளை
வழிப்படுத்தி வைத்தவன்நீ!


அன்னியன் என்னாமல்
ஆதித் திராவிடனுக்கு
உன்நயனத் தாலேயே
உபநயனம் நடத்தியவன்!


புதுவிதி கண்ட உன்னைப்
பூணூலார் விலக்கி வைத்தார்!
விதிவிலக் கானாய்; சாதி
விதிகளை விலக்கிவைத்தாய்!

இழிபிறப்பாளர் என்பார்;
இருபிறப் பாளர் என்பார்;
வழிபிறப் பொன்று என்றால்
வகைவகைப் பிரிவுஏது?

'பிறவியால் எவனு மிங்கே
பிராமணன் ஆவதில்லை;
அறிவுடன் ஒழுக்கம் சேர்ந்தால்
அந்தணன் ஆவான்' என்றாய்!

வெற்று 'மை'யால் சிலர் இங்கு
வேற்று மையை விளைக்கையில்
ஒற்றுமைக்கு விதைத் தூவி
ஒருமையினை வளர்த்தவன் நீ!





# களம் கண்ட மறவன்!

புதுச்சேரி தோட்டத்துக்
குயில் - சமூகப்
பொய்மைகளைச் சாடவந்த
புயல்! - மொழிக்குப்
புதுவெள்ளம் தந்தநதிப்
பெருக்கு - சாதிப்
புன்மைகளைப் பொசுக்க வந்த
நெருப்பு! நாட்டில்
பொதுவுடைமை முரசடித்த
புலவன் - வீதிப்
புரட்சிக்குக் களம் கண்ட
மறவன்!

பாவேந்தே!

விதிபற்றிக் கொண்டிருந்த
பழைமை வாதம்
வெறுந்திண்ணை வேதாந்தம்
என்று ரைத்தாய்!

மதம்பற்றிக் கொண்டிருந்த
குறிகள் நீக்கி
மதநெற்றி வெறும்நெற்றி
ஆக்கச் சொன்னாய்!


விதியற்று வெளுத்திருந்த
விதவைப் பெண்ணின்
வெறும்நெற்றி யில்நீயே
பொட்டு வைத்தாய்!


வியர்வையினைச் சிந்துபவன்
'இருண்ட வீடு'
வெளிச்சமுறக் 'குடும்பவிளக்'
கேற்றி வைத்தாய்!

உயர்புலவன் சுயமரியா
தைக்கா ரன்நீ!
உன்கைகளில் 'பாண்டியன்
பரிசு' பெற்றான்!

அயர்வின்றி தமிழன்னை
கண்ணீர் மாற்றி
அவள்முகத்தில் நீ'அழகின்
சிரிப்பு' சேர்த்தாய்!

முயற்சியுடன் 'தமிழியக்கம்'
வளர்ப்பதற்கு
முகாம்போட்ட இடம்தானே
'குறிஞ்சித் திட்டு!'







சமுதாய மீட்சிக்குப்
　　படைந டத்திச்
சந்தங்கள் விருத்தங்கள்
　　அணிவ குக்கும்!

தமிழச்சியின் கற்பைச்
　　சூறை யாடும்
தருக்கர்களின் கொட்டத்தை
　　ஈழம் பார்க்கும்!

'தமிழச்சி யின்கத்தி'
　　அந்த மண்ணில்
தங்கச்சி தாய்மார்கள்
　　மானம் காக்கும்!

எம'திளைஞர் இலக்கி'யத்தைத்
　　தந்த மைக்கு
'எதிர்பாரா முத்தம்' இதோ
　　உந்தன் கைக்கு!

# எங்கள் மகாத்மா!

போர்பந் தரில்நீ பிறந்த போதிலும்
போர்ப்பந் தத்தை அறவே வெறுத்தவன்!

கத்திய வாருக் கருகில் பிறந்தும்
கத்தியை அல்ல; கைகளை நம்பினாய்!

புத்லீ பாயின் மடியில் தவழ்ந்தாய்;
கஸ்தூரி மானின் கைகளில் மணந்தாய்!

அறப்போர் நடத்திய உனக்கும் முப்படை;
அன்பு, அகிம்சை, சத்தியம் அப்படை!


ஆயுத பாணியாய் பாரதப் போரில்
அன்று நின்றவன் பரமாத்மா; ஓ!


நிராயுத பாணியாய் விடுதலைப் போரில்
நின்று வென்றாய் எங்கள் மகாத்மா!

இரண்டு துண்டுகள் 'இராணுவ உடுப்பு'
அரண்டு போனது ஆங்கிலத் தொகுப்பு!

குண்டாந் தடிக்கும் குண்டடி களுக்கும்
தொண்டர்கள் எவரும் துவண்டிட வில்லை!

காந்தி யடிகளைத் தாங்கிய நெஞ்சம்
கசையடி களையா தாங்கிட அஞ்சும்?







தந்தையுன் தாரக மந்திரம் பலித்தது
'வந்தே மாதரம்' வானைப் பிளந்தது!

பாரத தேவியை நிர்வாண மாக்கப்
பரங்கியர் அவளது ஆடையைப் பறிக்கையில்,

கையற் றேங்கிய அன்னைக் காகக்
கைராட் டையில் நூல்நூற் றவன்நீ!

பாதிநூல் தாய்க்குச் சேலையாய் ஆனது;
மீதிநூல் கொடிக்குச் சீலையாய் ஆனது!

தந்தை உனது கைத்தடி யில்தான்,
தாயின் மணிக்கொடி முதலில் பறந்தது!

# அங்குசம் கைத்தடி!


தேசப் பிதாவே!


அய்யனே, உன் வாழ்வில்
அகிம்சையே 'அறத்துப்பால்!'
பொய்யாமை வழியில்
'பொருட்பால்!' இராப்பகலாய்

இந்தியச் சுதந்தரம்தான்
'இன்பத்துப் பால்'எங்கள்
தந்தையே! உம் வாழ்க்கைத்
தடமெல்லாம் முப்பால்தான்!

ஈரங்கி உடுத்தியிருந்த
எங்கள்பிதாஉம் கைத்தடிமுன்
பீரங்கி யும்கூடப்
பேச்சிழந்து போயிற்று!

விண்ணளவு மதங்கொண்ட
'வெள்ளை' யானைக்கு
அண்ணல்உம் கைத்தடியே
அங்குசமாய் ஆயிற்று!







தேசப் பிதாவே -

'சுண்டைக்காய் மனிதருக்குச்
சுதந்தரம் கேடா?' என்று
வெண்டைக்காய் வாதம்செய்த
வெள்ளரிக்காயை உம்தம்


துண்டினால் துவையல் செய்தீர்
துவையலுக்கு உப்பு சேர்க்கத்
தண்டிக்குப் போனீர்; உம்கைத்
தடியினால் கடல் கடைந்தீர்!

உறங்கையில் நாட்டை எண்ணி
உரம்கையில் கொண்ட உம்கை
முருங்கையா, முறிக்க? வெற்று
மூங்கிலா, வளைத்துப் பார்க்க?

தேசப்பிதாவே -

அறம்கையில் ஏந்தி மாற்றார்
அரங்கையே ஆட வைத்தீர்!
வெறுங்கையைக் கொண்டே 'வெள்ளை'
வேங்கையை வீழ்த்தி வென்றீர்!

வீர வணக்கம்!





# விருதுநகர் வேந்தன்


‘விருதுகளை வேண்டாத
விருதுநகர் வேந்தன்’நீ!
மருது பாண்டியரின்
மாவீரம் உன்வீரம்!

சிறுமைகளைத் தீய்க்கவந்த
சிவகாசித் தீக்குச்சி;
சிறகுகளைத் தந்தவளோ
சிவகாமி உன் ஆச்சி!

வாடிக் கிடந்தவனின்
வயிற்றையும் மூளையையும்
தேடிப்போய் நிரப்பி
திசைகாட்டி ஆனவன்நீ!

அடுப்பெரியா வீடுகளின்
அரும்புகட்குச் சோறூட்டி
படிப்பறியாக் கூரைகளில்
பட்டங்கள் வேய்ந்தவன்நீ!

‘படிக்காத மேதை’இன்று
பல்கலைக் கழகத்தில்
படிக்கும் மேதைகட்குப்
பாடநூல் ஆகின்றாய்!





காமனவன் உன்னோடு
கைகுலுக்க வந்தபோது
காமன் வில்வாங்கி
கரும்பாலை வைத்தவன்நீ!

அக்கறை உன் அரிச்சுவடி;
ஆகாயம் உன்மனசு!
எக்கறையும் சேராத
இலட்சியப் பெருந்தலைவன்!

தருமத்தின் தனிமைக்குத்
தக்கதுணை யானவனே!
'கர்மவீரன்' தான்
காம ராசேநீ!

# மூவர் உலா

அக்டோபர் - 2


நடக்கின்ற இவ்விழா நாள்
நாற்றிசையும் வாழ்த்திசைக்க
வடக்குக்கும் தெற்குக்கும்
வழிபாடு செய்யும் நாள்!


போர் பந்தர் ஊர்தந்த
புத்லிபாய் புதல்வனுக்கும்,
சீர்கொண்ட விருதுநகர்
சிவகாமி மைந்தனுக்கும்!

பெருந்தகை காந்திமகான்
பிறந்தநாள்! நமைவிட்டுப்
பெருந்தலைவன் காமராசர்
பிரிந்தநாள், இந்நாளே!

மாமணிகள், மலர்வனத்துப்
பூமணிகள் இரண்டில் -
ஒன்று விதையான தேதி
ஒன்று சிதையான தேதி!

மேலுதடு புன்னகைக்க
கீழுதடு விம்மியழ
மாலைவரும் முன்னவர்க்கு;
மலர்வளையம் பின்னவர்க்கு!







உள்ளம் அஞ்சலி செய்யும்
உயர்தலைவர் இருவரோடு -ஒரு
'குள்ள மகாத்மா'வைக்
கும்பிட மறக்கலாமா?

சத்திய காந்தி நெறி
சந்ததியாய் வாழ்ந்த
உத்தமர் லால்பகதூர்
உதித்த நாளும்இது!

உற்சவ மூர்த்திகள்
உங்கள் மூவரையும்
பொற்சபையும் சிற்சபையும்
போற்றுகிற திருநாள்!

மூன்றுகல் லறைமீதும்
முக்கடல் நீர்தெளிக்கும்!
ஈன்றெடுத்த இந்தியத்தாய்
ஈரவிழி சிவந்திருக்கும்!

எல்லார்க்கும் ஆயுள்
எல்லையுண்டு, உங்களது
கல்லறையின் வயது
காலத்தைத்தாண்டி நிற்கும்!

# ஈரோட்டில் சூடேற்று!


ஈரடியில் பொய்யாமொழி
ஈரோட்டு அய்யாவழி
இரண்டும் எங்களது இருவிழி
இனமானத் தமிழினத்தின் முகவரி!

பிறப்பால் மனிதர் சரிசமம் என்று
பெருமை தந்தது குறளேடு - அதை
மறுத்த இனத்தின் மமதை அடக்கி
மதிப்பைப் பெற்றது ஈரோடு!

ஒழுக்கம் மானம் பண்பா டென்று
உரைக்கும் வள்ளுவர் குறள்நாடி;
அழுக்கை விலக்கிக் கிழக்கை வெளுத்தது
அதுதான் பெரியார் வெண்தாடி!

குறள்மே டையினை ஒதுக்கி விட்டுக்
குறிமே டைக்கேன் அலைகின்றாய்!
இருளோ டென்ன உன்கூட்டு? - நீ
ஈரோட்டில் தீச்சூடேற்று!







# தென்காஞ்சித் தேர்முனை

அண்ணாநீ இயற்பெயரில்
அகர முதல்வன்;
அன்னைத் தமிழ்த்தாயீன்ற
அரும் புதல்வன்!


விரலசைவில் இலக்கியங்கள்
பிறக்கும்; அண்ணா
விழியசைவில் ஒரு சேனை
நடக்கும் பின்னால்!

குரலசைவில் இலட்சியத்தின்
முழக்கம்; கோட்டை
கொடியசைவில் நல்லாட்சி
செழிக்கும்! தெற்குத்

தெருமுனைகள் கூடிவந்து
வணங்கி நின்ற
தென்காஞ்சித் தேர்முனையே!
திராவி டத்தின்

புவியீர்ப்புத் தானம்நீ
புதுமைப் பேச்சின்
செவியீர்ப்புத் தானம்உன்
செந்தேன் நாக்கு!

துருப்பிடித்த வார்த்தைகளை
தூரத் தள்ளி
சுறுசுறுப்புச் சொற்களுக்குச்
சூடேற் றியவன்!





# அண்ணா என்றொரு அற்புதம்!


அண்ணா நீயொரு அற்புதம் - நீ
அனைவரும் படிக்கும் புத்தகம்!
அண்ணாநீயொரு கனிமரம் - உன்
ஆற்றலில் நிமிர்ந்தது தமிழினம்!

குள்ளம்தான் கட்டைவிரல்
என்ற போதும்
குனிந்துவரும் மற்றவிரல்
அதனி டத்தில்!

குள்ளம்தான் உன்னுருவம்
என்றா லும்நீ
குன்றுகட்குத் தலைமைதாங்கும்
இமயம் ஆனாய்!

அகங்காரம் கொள்ளாத
பொறுமை; என்றும்
ஆரவாரம் இல்லாத
எளிமை; எங்கும்

நகைமுகம்தான்; பகைமுகமே
இல்லை; உன்றன்
நகம்பட்டு எவர்க்குமிங்கே
காயம் இல்லை!





அண்ணா!

மேதை நீ பேசத்
தொடங்கிய பிறகுதான்
மேடைப் பேச்சுக்கு
மீசை முளைத்தது!

எதுகை மோனைகள் -உன்
இரண்டு உதடுகள்!
நதியா, நாக்கு? அது
நயாகரா அருவி!

கற்றுத் தேர்ந்த செந்தமிழும்
கவனம் பதிந்த ஆங்கிலமும்
உற்ற இரட்டை மொழியாக
உனது நாக்கில் வரும்போது,

தெற்குக் காவிரி ஊற்றெடுக்கும்;
தேம்சு நதிக்கரைக் காற்றடிக்கும்!

அண்ணா!

மூடத் தனங்களுக்கு
முதுகில் தொட்டில் கட்டிக்
கேடத் தனைக் குள்ளும்
கிழடு தட்டிப் போனவரை -

எழுத்தாலும் பேச்சாலும்
எழுப்பி நிற்க வைத்து
மொழிகாக்க இனம்காக்க
முன்வரிசைக் கழைத்து வந்தாய்!


கணித பின்னங்கள் போல்
காட்சிதரும் ஏழையரை
மனித பின்னங்கள் என்று
மதிப்பீட்டில் குறைத்த வரைக்

கண்டு கொதித்தாய், நீ!
கைகொடுத்து ஏழையரை
'சுண்டுவிரல் அல்ல நீ,
சுட்டுவிரல்' என்றுரைத்தாய்!

அண்ணா!

'தம்பிக்கு' மடல்கள் தீட்டி
தன்மான உணர்வை ஊட்டி
நெம்புகோல் கொடுத்து எம்மை
நிமிர்த்திய அன்னை நீதான்!







விருப்பங்கள் அழைத்துப் போகும்
வீதியை மாற்றி நாட்டில்
திருப்பங்கள் கொடுத்தாய் -புதிய
திசைகளைப் படைத்தாய்!

அண்ணா நீயொரு அற்புதம் - நீ
அனைவரும் படிக்கும் புத்தகம்!
அண்ணாநீயொரு கனிமரம் - உன்
ஆற்றலில் நிமிர்ந்தது தமிழினம்!


# அண்ணல் அம்பேத்கர்


'ஆதிக் குடிமகனை
ஆதிக்கக் குடிமக்கள்
வீதிக்கு அனுப்பிவிட்டு
வேற்றுமைகள் பேசுவதா? - என

பாதிக்கப் பட்டவர்க்குப்
பரிந்துரை யானதுடன்
நீதிக்குக் குரல் கொடுத்து
நிமிர்ந்தெழுந்தார் அம்பேத்கர்!

ஆண்டாண்டு காலம்
அன்னை நாட்டில்
அடிபதிக் கின்ற
மக்கள் பதிப்பில்

தீண்டாமை என்னும்
அச்சுப் பிழையைத்
திருத்தம் செய்திட்ட
தேவன் அம்பேத்கர்!







திருக்குலத்தார் தம்மைத்
　　　தெருக்குலத்தா ராக்கியது
நரிக்குலத்தார் செய்த
　　　நாடகம் என்பதனை

முகத்திரையைக் கிழித்து
　　　முத்திரைபதித்த தவர்பத்திரிகை
பகுத்தறிவு வகுப்புகளின்
　　　பாடநூல் களவை!

விலக்கிவைத்த ஊருக்கும்
　　　விலகிநின்ற சேரிக்கும்
கலப்புமணம் செய்து வைத்த
　　　கல்யாணப் பத்திரிகை!


‘மகர் இனத்துத் தோழனே!
　　　மனிதன்தான் நீயும்
மனம் தெளிந்து நிமிர்!
　　　மற்றவனோடு நீ சரிநிகர்!


தடைகளைத் தகர்' - என
தன்னம்பிக்கை யூட்டிய
படைக்குல மறவர்நம்
பாபா அம்பேத்கர்!

'தீட்டு' என்று விலக்கிவைத்த
மேல் இனத்தார்
திருக்குலத்தார் இவரின்
திறம் அறிந்து

'தீட்டு அரசியல்சட்ட' மெனத்
தேடிவந்து ஒப்படைத்தார்!
மேட்டுச் சிகரமானார்
மேதை அம்பேத்கர்!

முற்பட்ட சாதிகட்கே
மூலதனம் மூளையென்று
கற்பித்த தப்பிதத்தைக்
களைந்தெறிந்த மாமனிதர்!








எண்ணறிவில் எழுத்தறிவில்
நுண்ணறிவில் நூலறிவில்
விண்ணளவு உயர்ந்து நின்று
விஸ்வரூபம் காட்டியவர்!

'தடைகளைத் தகர்' என
தன்னம்பிக்கை யூட்டிய
படைக்குல மறவர் நம்
பாபா அம்பேத்கர்!



# எட்டயபுரத்துக் கவிஞனுக்கு ஏகலைவன்...

## கவிமுகம்

நேர்முகம் 1994

நங்கைநல்லூர் **நா.சாவித்திரி**
கவிஞாயிறு தாராபாரதி கவிதைகளை ஆய்வு செய்து,
சென்னைப் பல்கலைக்கழகத்தில்
ஆய்வியல் நிறைஞர் (M.Phill) பட்டம் பெற்றவர்

**'தாராபாரதி' என்பது தங்களின் இயற்பெயரா?**

தாராபாரதி என்பது என் எழுதுகோலின் சூட்டுப் பெயர். தாயின் மடியில் சூட்டிய பெயர் இராதாகிருட்டினன். தமிழின் மடியில் சூட்டிய பெயர் தாராபாரதி. எனது இயற்பெயரில் முன்பாதியை (ராதா) முன்பின்னாகத் திருப்பிப் போட்டு, என்னுடைய கவிதை ஆசான் பாரதியின் பெயரை இணைத்துக் கொண்டேன்.

**முன்னோடிக் கவிஞர்களாக எத்தனையோ கவிஞர்கள் இருக்க, தங்கள் ஆசானாகப் பாரதியை ஏற்றுக் கொண்ட காரணம்?**

பாரதி - அந்தத் தலைப்பாகைக் கவிஞனின் தமிழ் படித்துக் கவிஞனானவன் நான். அந்த மகாகவியின் தமிழ்ச்சுவடி எனது அரிச்சுவடி. பாமரக் காதுகளும் தேமதுரத் தமிழோசை பருகச் செய்தவன். அந்தப்புரத்துத் தாதிகளுக்கும் அந்தாதி பாடிக் கொண்டிருந்த புலவர்களைவிட்டு விலகி வந்தவன். கொலுமண்டபத்துக் கவிதைகளைக் குப்பத்துத் திண்ணைகளுக்கும் கொண்டு போனவன்.

அவனது கவிதைகள் அலங்காரச் சொற்களின் ஊர்வலம் அல்ல; அகராதி வார்த்தைகளின் அணிவகுப்பு அல்ல. எளிய பதங்கள்; இனிய தமிழ்நடை. மக்கள் மொழியில் மடைதிறந்த கவிப்பெருக்கு; இலக்கிய வரலாற்றில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு கவிதையை நிமிர்த்திய நெம்புகோல்.

சுதந்தர வேள்விக்கு விதை நெருப்பு வழங்கிய சூரியன், மூடத்தனங்களைச் சாடிய முற்போக்குவாதி; சாதிக்கொடுமையையும் மதக்

கொடுமையையும் எதிர்த்த சமூகப் புரட்சியாளன்; பெண் விடுதலைக்கு முழக்கமிட்ட பேரறிவாளன்; பொன்னாடைக்கும், புகழ் மேடைக்கும் தன்னை விற்றுக் கொள்ளாத தன்மானக் கவிஞன். சொன்னது போல் வாழ்ந்து காட்டிய சுயமரியாதைக்காரன்.

பாரதியின் கவிதைகளில் மட்டுமல்ல; கட்டுரைகளிலும் கூட சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகள், தமிழ்ப்பற்று, சமூக மேம்பாடு, தேசிய உணர்வு, உலக மனித நேயம் என்று நான்கு திசைகளிலும் சிறகை விரிக்கும் சிந்தனைகள். தாய்நாட்டு உரிமைக்காக மட்டுமன்றித் தனிமனித உரிமைக்காகவும் போராடிய புதிய புறநானூறு பாரதி.

முன்னோடிக் கவிஞர்கள் பலர் எனது வணக்கத்திற்குரிய வழிகாட்டிகள். பாரதி எனக்கு நாள்காட்டி. ஏனைய முன்னோடிக் கவிஞர்களை எனக்குத் தந்தை நிலையில் வைத்து மதிக்கிறேன்; பாரதியை என் கவிதைத் தாயாக நினைக்கிறேன்.

மூப்பை எட்டுவதற்கு முன்பே மூச்சை உதிர்த்துவிட்ட முறுக்கு மீசைக் கவிஞன் பாரதி. அந்த எட்டயபுரத்துக் கவிஞனுக்கு ஏகலைவன் நான்.

**புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு - இவ்வாறு தங்களின் புத்தகங்களுக்குத் தலைப்பிட்ட நோக்கமென்ன?**

நாடு விடுதலை பெற்று நாற்பத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன... நாம் உரிமை பெற்ற நாளில் - நள்ளிரவில் சுதந்தர நாயகனைக் கைப்பிடித்துப் பள்ளியறை புகுந்த பாரதத்தாய், அன்றைக்கு

விடிவெள்ளி முளைக்குமென்று விதம் விதமாய்க் கனவு கண்டாள்... ஆனால், அவள் -

முடி வெள்ளியான பின்பும் முதற்கனவே பலிக்கவில்லை! இன்னும் விடியலைக் காணாத வீதிகள்... வெளிச்சத்தைக் காணாத வீடுகள்... பாதி இந்தியா பகலையே பார்க்கவில்லை! 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்கிற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகள் பொய்க்கவில்லை!

பலநோக்குத் திட்டங்கள், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகள் என்று இந்தியா முன்னேற்றப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தாலும் - அவை விண்மீன்களைப் போல் கண் சிமிட்டுகின்றனவே அல்லாமல், விடுதலைச் சூரியன் வெளிச்சம் முழுமையாகக் கிட்டியதா? இல்லையே... பதவி நாற்காலிகளும் பணக்காரக் கைக்கூலிகளும் மட்டுமே சுதந்தர வெளிச்சத்தைச் சுரண்டி- பங்கு போட்டுக் கொள்ளுகின்றன... ஆமாம்... 'வெளிச்சம்' கூட இங்கே பதுக்கப்படுகிறது!

வறுமைக்கோடு - சாதிப் பாகுபாடு - மத வேறுபாடு - 'நாட்டைக் கூறுபோடு' என்று எத்தனை இருட்டுகள்... இந்த இருட்டுகள் விலக, புதிய விடியல் வருவது எப்போது? இந்த நோக்கமே எனது நூல்களின் தலைப்புகளாகியுள்ளது.

**சிறந்த சொல்லாட்சிகளை நீங்கள் கையாண்டிருந்தாலும், கவிஞர் தமிழன்பன் உங்கள் கவிதைகளில் கவிதை நட்டம் (சிலேடை, யமகம்) ஏற்பட்டிருப்பதாகக் கூறியுள்ளாரே - இதற்குத் தாங்கள் கூறும் பதில் என்ன?**

சிலேடை, யமகம் என்பவை கவிதை உத்திகளில் சில. இவை கவிஞனின் புலமையை வெளிப்

படுத்துவதற்காக என்று நான் எண்ணவில்லை. மொழியின் வளமையை வலுப்படுத்துவதற்காக எனக் கொள்ளலாம்.

சிலேடையும் யகமமும் மொழியின் பகட்டுத் தன்மை அல்ல; எனது பண்டிதத்தனத்தைக் காட்டுவதற்காக அல்ல; வாசக மீன்களை வசப்படுத்துவதற்காகவும் அல்ல. இயல்பாகப் பயிலும் ஒருசில இடங்களில், என் தாய்மொழியின் ஆளுமையைக் கவிதையோட்டத்தில் இழையோட விட்டிருக்கிறேன். கவிஞர் தமிழன்பன் கூட தமது மரபுக் கவிதைத் தொகுதியில் இத்தகைய உத்திகளைக் கையாண்டு பாராட்டப் பெற்றிருக்கிறார். வாசகர் வட்டம் வரவேற்கும்போது, ‘கவிதை நட்டம்’ எப்படி நிகழும்? திகட்டுகிற அளவுக்கு இந்த உத்திகளைப் புகுத்தினால் சலிப்பு ஏற்படும்; உண்மைதான். ஆனால், இவற்றை அறவே தவிர்ப்பதால் மட்டுமே ‘கவிதை நட்டம்’ ஈடு கட்டப்படும் என்று என்னால் கருத இயலவில்லை.

எனக்கு வந்த ஏராளமான பாராட்டுக் கடிதங்களில், இந்த உத்திகளைப் பயன்படுத்திய வரிகளைப் பலர் பாராட்டியிருக்கிறார்கள்... இப்போது சொல்லுங்கள்... இது கவிதை நட்டமா?

**தங்கள் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் வலுவானவையாகவே இருக்கின்றன. இருப்பினும் சில இடங்களில் ஆணாதிக்கக் குரல் இழையோடுகிறதே! பதில் என்ன?**

என் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் வலுவாக இருப்பதாய் நீங்களே வாக்குமூலம் தந்துவிட்டீர்கள்... நன்றி... சில இடங்களில் ஆணாதிக்கக் குரல் இழையோடுவதாய்ச் சொல்கிறீர்கள்... இதை நான் மறுக்கிறேன்..

'சூரியனைக் கூட சொக்கட்டான் ஆடலாம்' என்கிற கவிதையில் பெண்ணினத்தின் மென்மையை அல்ல; மேன்மையைச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் குறிப்பிடும் வரிகள் -

> **'மெல்லினமாம் பெண்கள் மேலினம்தான்; ஆண்களென்னும்**
>
> **வல்லினத்தை இடையினத்தில் தூக்கி வளர்ப்பதனால்!'**

உடற்கூறு காரணமாக 'வல்லினம்' என்று கருதிக் கொண்டிருக்கிற ஆணினம் தன்னை மேலினம் என்று நினைக்கலாம். ஆனால், மேலினம் என்று மிதப்போடு இருக்கிற ஆணினத்தையே தனது இடுப்பில் தூக்கி வளர்ப்பதனால், தாய்மைப் பண்புடைய பெண்ணினம் மேலானது என்று பாராட்டியிருக்கிறேன்.

இதில் 'ஆல்' என்கிற அசை வருவதால், அந்த ஒரு காரணத்தால் மட்டுமே பெண்ணினம் மேலினமாக உயர்த்திப் பேசப்படுவதாய் நினைக்கிறீர்கள்... கவிதை முடியவில்லை; தொடர்கிறது. பெண்ணினம் மேலானது என்பதை அடுத்தடுத்த வரிகளில் காணலாம். எல்லா வரிகளிலும் 'ஆல்' போட்டால்தானா?... 'அசை' சில இடங்களில் இசையும்; சில இடங்களில் விட்டு 'அசையும்'.

தலைமுறை தலைமுறையாகப் பெண்களின் மீது திணிக்கப்பட்டிருக்கிற வீட்டுப் பொறுப்புகள், கட்டாயக் கடமையிலிருந்து விடுவிக்கவோ, ஆண்களுக்குரிய பங்கைப் பிரித்துக் கொடுத்துச் சுமையைக் குறைக்கவோ மனம் அற்றவன் அல்லன்

நான். பெண்களின் பணிச்சுமையில் மனச் சாட்சியுள்ள ஒவ்வொரு ஆண்மகனும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதே என் தரப்புக் கொள்கையும் கூட.

திணிக்கப்பட்ட வேலைகளின் சுமையைக் குறைப்பது மட்டுமே பெண் விடுதலையாகி விடாது. அவர்களுக்கு, மறுக்கப்பட்ட வாய்ப்புகளை உரிமைபெறச் செய்வதே உண்மையான பெண்ணுரிமை என்பது என் நோக்கம். ஆண்கள் செய்யக்கூடிய அத்தனை வேலைகளிலும் சரிநிகர் சமானமாக சாதித்துக் காட்டும் வலிமையும் திறமையும் உண்டு என்பதையே என் கவிதை கட்டியம் கூறுகிறது.

'அடுப்படிகள் இடுப்பொடிக்க, அலுவலகம் முதுகொடிக்க, படுக்கையறை எலும்பொடிக்க, கிணற்றடியில் கை சலிக்க...' படாத பாடுபடும் பெண்ணினம் அந்த வேலிகளை உடைத்துக் கொண்டு வெளியுலகுக்கு வரவேண்டும்; கல்வி - கலை - அறிவியல் - தொழில் நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் நிகழ்த்த வேண்டும் என்பதே இக்கவிதையின் வெளிப்பாடு. இதிலென்ன, உங்களுக்கு ஐயப்பாடு?

பெண் விடுதலைக்கு முழக்கமிட்ட பாரதி, பாஞ்சாலி சபதத்தில் ஓரிடத்தில் 'பெட்டைப் புலம்பல்' என்று எழுதியிருக்கிறார். உடனே, அந்தச் சொற்றொடர் பெண்களை இழிவுபடுத்துவது என்று கூறிவிடலாமா? பெண்கள் விடுதலைக் கும்மியில் - 'சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்சாதி படைக்கவும் செய்திடுவோம்' என்று பாடுகிறார்... 'பார்... பார்... பாரதியே 'நாம்' சாதம் படைக்க

வேண்டியவர்கள் என்கிறாரே... இது ஆணாதிக்கக் குரல்' என்று பெண்ணினம் கொடி தூக்கலாமா?

'தூக்கி நிறுத்த முயல்பவர் ஆணாக இருப்பதால், தொக்கி நிற்பது என்ன?' என்று துப்பறிய முயல்கிறீர்கள்... முழு வேகத்தோடு பெண் விடுதலைக்கு முழங்கும் கவிதையின் மூச்சு ஆண் மூச்சாக இருந்தால், அவநம்பிக்கை வந்துவிடுகிறது.

எழுதும் விரல் ஆண் விரல் என்பதால் இந்தச் சந்தேகமா? முழங்கும் குரல் ஆண் குரல் என்று அடையாளம் தெரிந்ததால் வந்த ஐயமா? வேண்டாம்; தாய்க்குலமே... பெண் விடுதலைக்கு முழக்கமிடும் ஆணின் குரல் - சமத்துவத்திற்கு ஆணித்தரமாக ஒலிக்கும் குரல்! நம்புங்கள்... சாதனைகள் புரிய வரும் உங்களுக்குச் சாமரம் வீசக் காத்திருக்கிறோம்.

**பாரதி, கண்ணம்மாவின் மீது கொண்டிருந்த காதலைப் பாடினார். ஆனால், நீங்கள், கண்ணம்மா பாரதி மீது கொண்டிருந்த காதலைப் பாடியிருக்கிறீர்கள் - இதன் காரணம் என்ன?**

காதல் என்பது - பாலியல் விதைப்புகள் அல்ல; பருவகால விபத்துகள் அல்ல; மொட்டவிழும் வயதுகளில் மெட்டமைக்கும் சங்கீதம். கரும்புவில்காரனால் காயப்படாத வாலிபமும் இல்லை, வயோதிகமும் இல்லை.

> **'மலரினும் மெல்லிது காமம்; சிலரதன்**
> **செவ்வி தலைப்படு வார்'**

என்று திருவள்ளுவரைப் போல் காதலுக்கு விளக்கம் சொன்ன கவிஞர் எவரும் இல்லை.

கண்ணம்மா - பாரதியின் கற்பனைக் காதலி. இந்தக் 'காகிதக் காதலி'க்காகப் பாரதி தனது இரத்த மண்டலத்தை எழுதுகோலில் நிரப்பிப் பாடினான்.

'பாரதியைப் பற்றி கண்ணம்மா என்ன பாடியிருக்க முடியும்?' இந்தச் சிந்தனையில் பிறந்த கவிதை அது. பாரதி மறைந்த பிறகு, கண்ணம்மாவின் காதல் கண்ணீர் வரிகளாகின்றன... ஒற்றை வரியில் அவளது மொத்தக் காதலும் வெளிப்பட வேண்டும்... கண்ணம்மா பாடுகிறாள்; 'தீயடியில் நீ எரிந்தாய்; ஆனால் சாம்பல் ஆனவள் நான்தான் அன்பனே....'

**கவிதையின் இடையே விளக்கங்கள் தந்திருக்கிறீர்களே! கவிதைக்கு விளக்கம் தேவையா?**

கவிதைக்கு விளக்கம் தேவையா என்பதற்கு எனது தன்னிலை விளக்கம் முதலிலேயே சொல்லி விடுகிறேன்; கவிதைக்கு 'இடையே' விளக்கம் எதுவும் தரவில்லை. மூன்று கவிதைகளில் மட்டும், கவிதையின் தொடக்கத்திலேயே - அதுகூட விளக்கம் அல்ல - சிறு குறிப்பே தந்திருக்கிறேன்.

இது, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் அன்று.

அரும்பதவுரை, ஆய்வுப் பொழிப்புரை, அடிக்குறிப்புரை என்று நான் உரையாசிரியராக மாறவுமில்லை.

'இளமையை நானே தின்னாச்சு' என்கிற கவிதையில், வரதட்சணைக் கொடுமையால் முதிர் கன்னியாகி விட்டவர்கள் மாறி மாறிப் பாடுகின்றனர்.

முதல் நான்கு வரிகள் இலக்கிய நடையில் நகர்ப்புறப் பெண் பாடுவதாகவும், அடுத்த நான்கு வரிகள் பேச்சு வழக்கில் நாட்டுப்புறப் பெண் பாடுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறேன்.

கடிதத்தில் 'பின் குறிப்பு', என்று எழுதுவதைப்போல, இது கவிதையில் 'முன் குறிப்பு' என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

**ஜோஸ்யத்தின் மீது நம்பிக்கை உண்டா?**

என்னுடைய கவிதையாசான் பாரதி, தமது புதிய ஆத்திசூடியில், 'சோதிடம் தனையிகழ்' என்று முன் மொழிந்திருக்கிறார். நான் அதை வழி மொழிந்திருக்கிறேன்.

**பூச்சியத்தைப் பாடு பொருளாக்கி, சிறப்பாகப் பாடியிருக்கிறீர்களே! இந்தச் சிறப்பான கருத்து தங்களுக்கு எப்படித் தோன்றியது?**

நான் ஆசிரியன். கணக்குப் பாடம் நடத்துகிறபோது, மற்ற எண்களின் ராச்சியத்தில், பூச்சியத்தின் நிலையைக் குறித்து அடிக்கடி சிந்திப்பேன். பூச்சியம், முழு எண்ணின் வலப்பக்கம் இடம் பெற்றால் எண் மதிப்பைக் கூட்டும். தசம எண்ணின் இடப்பக்கம் இடம் பெற்றால், எண் மதிப்பைக் குறைக்கும்.

ஒன்று முதல் ஒன்பது வரையில் உள்ள எண்களோடு ஒட்டுண்ணியாக மட்டுமே இருக்கிற பூச்சியத்திற்குச் சுய மதிப்பு இல்லை. எண் வரிசையில் பூச்சியம் ஊனமுற்ற எண்ணாகி, ஒன்றுமில்லை என்று கருதப்படுகிறதே... உண்மையில் அப்படியா?

என் மாணவர்களில் சிலர் 8 என்ற எண்ணை எழுதும்போது மேலே ஒரு பூச்சியமும் கீழே ஒரு பூச்சியமும் போட்டு எழுதுவதைப் பார்த்திருக்கிறேன்... அட! 'வெற்று எண்' ஒரு 'வெற்றி எண்'ணை உருவாக்குகிறதே! அந்தத் தாக்கம்தான், இந்தக் கவிதையாக்கம்...

மனிதர்களில்கூட வெற்று மனிதன் என்று எவருமில்லை. விழிப்பும் உழைப்பும் இருந்தால் வெற்றிடத்தைக் கூட வெற்றியிடமாக்கிகொள்ள முடியும். தன்னம்பிக்கையும், ஒற்றுமையும், முயற்சியும் இருந்தால் - எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இந்தக் கவிதை ஓர் ஊடகம்.

**இறை நம்பிக்கை குறித்துப் பாடல்கள் பாடாததற்குக் காரணம் என்ன?**

வாழும் தலைமுறைக்கு, நிகழ்கால வாழ்க்கையில் மூட நம்பிக்கை... வளரும் தலைமுறைக்கு, எதிர்கால வாழ்க்கையில் அவநம்பிக்கை... இவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டுகிற நன்னம்பிக்கை முனையாகப் 'பேனா முனை' இருக்க வேண்டும் என்பது எனது குறிக்கோள். இலட்சிய வேட்கை கொண்ட படைப்பாளிகள் இன்றைய கால கட்டத்தில் செய்தாகவேண்டிய முதற்பணி இது.

இளைஞர்களுக்கு, 'என்னால் எதுவும் சாதிக்க முடியும்' என்கிற தன்னம்பிக்கையை, 'என்மொழியால் எல்லாம் முடியும்' என்கிற தமிழ் நம்பிக்கையை, 'என் இனத்தால் சாதனைகள் படைக்க முடியும்' என்கிற சமூக நம்பிக்கையை, 'என் தேசம்' எந்தத் தேசத்திற்கும் குறைந்ததல்ல' என்கிற தேசிய நம்பிக்கையை,' 'உலக மாந்தன் ஒவ்வொருவனும் என்னுடைய உடன்பிறப்பு'

என்கிற மனித நேய நம்பிக்கையை வளர்த்தாக வேண்டும். இதையே என் வாழ்நாள் பணியாகக் கருதுகிறேன்.

**தங்களுக்கு இறை நம்பிக்கை உண்டா?**

'உண்டு' அல்லது 'இல்லை' என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லிவிடலாம்தான்... ஆனால், இது தொடர்பாக உங்களிடம் சில கேள்விகள்... 'இறை' என்பது என்ன? இறை ஒன்றா, பலவா, ஓராயிரமா? 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திருமூலர் தந்த வாக்குமூலம்... ஆனால், ஏன் இத்தனை மதங்கள், இத்தனை கடவுள்கள்? பல மதக் கடவுள்களில் எந்த மதத்துக் கடவுள் உயர்த்தி? இந்துக் கடவுள்களில் எந்தக் கடவுளுக்குச் சக்தி அதிகம்?

'இந்த ஊர்க் கோயிலுக்கும், சாமிக்கும்தான் மகிமை அதிகம்!' என்றால், மற்ற இடங்களிலுள்ள கோயில்கள் காட்சிக் கூடங்களா?...

கட்டண வரிசையா, தரும வரிசையா? எந்த வரிசையில் போனால், உடனடியாக வரம் கிடைக்கும்?

'எல்லாருமே கடவுளின் குழந்தைகள்' எனில், இன்னும் சில கோயில்கள் நந்தனார்களை விலக்கு வது ஏன்? மந்திரங்களுக்கும் சுலோகங்களுக்கும் தான் கடவுளின் காதுகள் திறக்குமா? மூடச் சடங்குகளைத் தெய்வம் அனுமதிக்கிறதா?

பிரித்து வைக்கும் சாத்திரங்களும், பிளவுபடுத்தும் தோத்திரங்களும் கடவுளுக்கு ஏற்புடையவைதாமா?

அந்தந்த நாடுகளில், அவரவர் தாய்மொழியில் வழிபாடு செய்கிறார்களே... தமிழ்நாட்டில் அப்படியில்லையே, ஏன்? தமிழ்நாட்டுக் கடவுள்கள் ஏன் இன்னும் தமிழ் கற்றுக் கொள்ளவில்லை?

அடுக்கடுக்காக, வினாக்களை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆன்மிகத்தில் அரசியல் புகுந்துவிட்டதால், மனிதநெறி மறைந்துவிட்டது: மதவெறி மிகுந்துவிட்டது.


போலிச் சமயவாதிகள், பொய்ம்மைச் சடங்குகள், பிற்போக்குச் சாத்திரங்களால் பிளவுபட்டு - புனிதத்தலங்கள் போர்க்களங்கள் ஆகிவிட்டன. இரத்தச் சேற்றைக் குழைத்து இறைவனுக்கு ஆலயங்கள்... கொல்லப்பட்ட மனித உடல்களைச் செங்கற்களாக்கிக் கோயில்கள்... துளசித் தீர்த்தத்தில் இரத்தவாடை... அப்பத்தில் தசை நாற்றம்!... சம்பிராணித் தட்டத்தில் எலும்புச் சில்லுகள்...

ஏன் இத்தனை பூசல்கள், போராட்டங்கள்?... சமயக் குறிகளுக்கு சமக் குறியே தெரியாதா? ‘சமயம்’ என்கிற சொல்லிலேயே ‘சமம்’ என்பது அடங்கியிருக்கிறதே! ‘மனிதம்’ என்கிற வார்த்தையிலேயே ‘மதம்’ இடம் பெற்றிருக்கிறதே! பிறகு ஏன் மனிதன் மதத்திற்குள் மாறுபட்டுப் பிரிந்திருக்கிறான்?

கற்சிலையாயிருக்கும் கடவுள்களை மதத் தலைவர்கள் ‘கைப் பொம்மை’யாக்கிக் கொள்கிறார்களே! இறைவனுக்கும் பக்தனுக்கும் இடைத்தரகர்களாகி, இந்த ஆன்மிக வியாபாரிகளே கடவுளைக் களங்கப்படுத்துகிறார்களே!

நாட்டில், இன்றைய சூழலில், ஊழல்கள் - பதவிச் சண்டைகள் - பகற் கொள்ளைகள் - படு கொலைகள் - சாதிப்பூசல்கள் - மதக் கலவரங்கள் - பிரிவினைக் கலகங்கள் என்று அத்தனை துறைகளிலும் அக்கிரமங்கள் தலைதூக்கி ஆட்டம்போடுகின்றனவே! 'சம்பவாமி யுகே யுகே' என்று அருளிய பகவான் பத்தாவது அவதாரம் எடுக்க இதைவிடத் தகுந்த தருணம் எது?

எல்லாருக்கும் பொதுவாக - உலகம் முழுக்கவும் இறைவன் ஒரே ஒருவனாகக் காட்சி தரப்போவது எப்போது? அதுவரையில் - என் கவியாசான் பாரதி, 'ஆயிரம் தெய்வங்களை விட்டுவிட்டு அறிவே தெய்வம்' என்று சுட்டிக் காட்டியபடி - என் அறிவுக்கு எட்டியபடி என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயை, பராமரித்து வளர்த்த தந்தையை, அறிவுக் கண் திறந்த ஆசிரியரை, முற்போக்குப் பாதை காட்டிய முன்னோடித் தலைவர்களை, புரட்சி வழியமைத்த ஞானிகளை - இறை நிலையில் வைத்து வணங்கிக் கொண்டிருப்பேன்.



# வாழும் வரலாறு

## இலக்கிய வீதி தலைமுறை

## தலைமைக் கவிஞர்

## கவிஞாயிறு தாராபாரதி

| | | |
|---|---|---|
| மண்ணில் மலர்ந்த நாள் | : | 26.02.1947 |
| தொட்டில் பெயர் | : | துரை. இராதாகிருட்டினன் |
| சுட்டுப் பெயர் | : | தாராபாரதி |
| அன்னை வயல் | : | புஷ்பம் |
| தந்தை நிலம் | : | துரைசாமி |
| தவழ்ந்த மண் | : | குவளை (திருவண்ணாமலை மாவட்டம்) |
| கற்ற கல்வி | : | தொடக்க நிலை - குவளை<br>உயர்நிலை - கீழ்க்கொடுங்காலூர் |
| ஆசிரியர் பயிற்சி | : | இராணிப்பேட்டை<br>சைதாப்பேட்டை |

| | | |
|---|---|---|
| ஊனமுற்றோர் சிறப்புப் பயிற்சி | : | மைசூர் |
| பெற்ற பட்டங்கள் | : | பி.ஏ. (வரலாறு), எம்.ஏ. (தமிழ்); பி.எட். |
| மணந்த நாள் | : | 22.08.1974 |
| இல்வாழ்க்கைத் துணை | : | சந்தானலட்சுமி |
| பிள்ளைத் தமிழ் | : | விவேகானந்தன்<br>லோகுதுரை<br>ஆண்டாள் |
| உடன்பிறப்புகள் | : | துரை. சீனிவாசன் (மலர்மகன்)<br>புலவர் துரை. மாதவன் |
| தேசப்பணி | : | கல்வி |
| நேசப்பணி | : | கவிதை |
| காலத்தோடு கலந்த நாள் | : | 13.05.2000 |

## கல்விப்பணி

| | | |
|---|---|---|
| தொழில் | : | ஆசிரியர் பணி |
| விருது | : | டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது<br>(தமிழக அரசு - 2000) |
| பணிக்காலம் | : | 34 ஆண்டுகள் |
| பணியாற்றிய பள்ளிகள் | : | சித்திரக்கூடம் - அச்சிறுப்பாக்கம் ஒன்றியம்<br>பரனூர் - காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்<br>காமராசபுரம் - கூடுவாஞ்சேரி |
| பாராட்டத்தக்க செயல்கள் | : | இந்த மூன்று பள்ளிகளையும்<br>ஒன்றியத்தின் சிறந்த முன் மாதிரிப்<br>பள்ளிகளாக<br>உயர்த்திப் புகழ் பரப்பியமை. |

மாணவர்களின் பன்முகத் திறன்களையும் வளர்க்கும் கலைக்கூடங்களாகப் பள்ளிகளைப் பயன்படுத்தியமை.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உழைத்தமை, உயர்த்தியமை.

ஊனமுற்ற மாணவர்களுக்காக உருகிக் கரைந்தமை, வாய்ப்புகளை உருவாக்கித் தந்தமை.

கல்விப் பணி : புதிய பாடத்திட்ட உயர்மட்டக் குழுவில், ஆசிரியர் கையேடுகள் தயாரிப்பில், வினா வங்கி உருவாக்கத்தில் பங்கு பெற்றமை.

வானொலி - தொலைக்காட்சிகளில் : கல்வி ஒலிபரப்புகள், எல்லோர்க்கும் கல்வி, சான்றோர் சிந்தனை, கவிதைத்துளி, கவியரங்கங்கள், கவிதைப் பட்டிமன்றம், வள்ளுவர் காட்டும் வழி, காண்போம் கற்போம், வாழ்க்கைக் கல்வி - சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

கவிதைப் பணி
கவிதை நடைவண்டி : இலக்கிய வீதி

படைப்புகள் : **கவிதை நூல்கள் (6)**
புதிய விடியல்கள்
இது எங்கள் கிழக்கு
விவசாயம் இவர் வேதம்
தாராபாரதி கவிதைள்
இன்னொரு சிகரம்
பூமியைத் திறக்கும் பொன்சாவி
**உரைநடை (2)**
பண்ணைப்புரம் தொடங்கி பக்கிங்காம்வரை
வெற்றியின் மூலதனம்

சன் தொலைக்காட்சி : கவிராத்திரி (கவிக்கோ அப்துல் ரகுமானுடன்)
இன்தாம் - தமிழ் இணையம்
இவற்றில் கவிதைகள் வாசிப்பு.

சென்னைத் தொலைக்கோட்சி : கவியரசர் இளந்தேவன் தலைமையில்
கவிஞர் அப்துல்காதருடன்
கவிதை வழக்காடுமன்றம்.

பரிசுகள் - விருதுகள் : முதல் பரிசு - கல்லூரிக் கவிதைப்போட்டி
*(1976)*
வெள்ளிப் பதக்கம் - கல்லூரிக் கட்டுரைப் போட்டி
தங்க மோதிரம் - தமிழ் எழுத்தாளர் சங்கம்
*(வாசவன் விருது 1990)*
கண்ணதாசன் நினைவு விருது
*(இலக்கியவீதி 1990)*
கவிஞாயிறு - விருது *(1993)*
*(திருவள்ளுவர் இலக்கிய மன்றம் - வாணுவம்பேட்டை)*

□ □ □



எட்டயபுரத்துக் கவிஞன் விட்டு வைத்த மையின் மிச்சத்தை, தன் எழுதுகோலில் நிரப்பிக்கொண்டு எழுதிய தாராபாரதி, 'இலக்கியவீதி' தலைமுறையின் இணையற்ற கவிஞர்.

இவர், மரபுக் கவிதைக்கு மகத்தான சொத்து.

ஆழ்ந்த கருத்தோட்டமும் அறிவியல் கண்ணோட்டமும் இவரது கவிதையின் எதுகை மோனைகள்.

பூவின் மென்மை, நெருப்பின் வெம்மை, வைரத்தின் வண்மை - இந்த முப்பரிமாணம், இவர் கவிதைகள்.

இவருடைய எழுத்துகள், காகிதக் கிடங்குகளில் ஆயத்தமாயிருக்கிற ஆயுதங்களின் அணிவகுப்பு.

தூக்கத்தில் புரண்டு கொண்டிருப்பவர்களுக்கான பள்ளியெழுச்சி; வாழ்வில் துவண்டு கொண்டிருப்பவர்களுக்கான படையெழுச்சி.

இவரது கவிதைச் சிந்தனைகள் ஒரு நதி நடப்பது போல மொழி வளர்ச்சி, சமுதாய மேம்பாடு, தேசிய ஒருமைப்பாடு, உலக சமாதானம் இவற்றுக்கு உறுதுணை செய்யும்.

இன்றைய பிரச்சினைகளை எதிர்த்துப் போரிட, ஒரு 'யுக விழிப்பை' ஏற்படுத்தியவர் இவர்.

காலம் - சில மகாகவிகளை நிர்ணயித்தாற்போலவே, தாராபாரதியையும் நிர்ணயித்துள்ளது.

இனியவன்

(இலக்கியவீதி இனியவன்)

இலக்கிய வீதி